# உதயன்

31 °C|°F
தெளிவான வானம்

சுடர் 30 கதிர் 300 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 05, செவ்வாய்க்கிழமை 22.09.2015


## 26 ஆவது மாநிலமாக இலங்கையை மாற்ற இந்தியா முயற்சி

### கம்மன்பில சாடல்

கொழும்பு, செப்.22

இந்தியாவின் 26ஆவது மாநிலமாக இலங்கையை மாற்றிய மைக்க இடமளிக்கப்படாது என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

74 ஆயிரம் கோடி ரூபா செலவில் இலங்கை - இந்தியா இடையே கடல்வழிப் பாலம் அமைப்பதன் மூலம் இந்தியப் பிரஜைகளுக்குக் குறைந்த சம்பளத்தில் வேலை வாய்ப்புக் கிடைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சீபா உடன்படிக்கையைச் செயற்படுத்தும் அங்கமாக இது அமைகிறது. பாலம் கட்டிய பின் வரிசையாக வரும் இந்தியர்களுக்கு விசா வழங்க வேண்டிவரும் .

இலங்கையர்களை வைத்து வேலை செய்தால் நாள் ஒன்றுக்கு 1000 ரூபா கொடுக்க வேண்டி வரும் என்பதால் இந்தியர்களை வைத்து நாளொன்றுக்கு 250 ரூபா

பக்.24

# சுன்னாகம் ரவுடிகளை அதிரடிப்படை மூலம் உடனடியாக அடக்குக

### டி.ஐ.ஜிக்கு மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் உத்தரவு
### சுன்னாகம் பொலிஸார் திறமையற்றவர்கள் எனவும் விசனம்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 22

சுன்னாகம் ரவுடிக் கும்பல்களை அடக்க விஷேட அதிரடிப்படை மூலமாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு (டி.ஐ.ஜி) யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்றுக் கடுமையான உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார்.

நீதிமன்றுக்குச் சவால்விடும் வகையில் செயற்படும் அத்தகைய கும்பல்களை விட்டுவைக்கக்கூடாது என்றும், சுன்னாகம் பொலிஸார் உடனடியாகச் செயற்பட்டுச் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுமாறும் நீதிபதி கண்டிப்பான பணிப்புரை வழங்கியுள்ளார்.

அத்துடன், பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட திறமையற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுவதாக மன்று கருதுகிறது என்றும், எனவே திறமையற்ற உத்தியோகத்தர்களைப் பொலிஸ் மா அதிபரின் அனுசரணையுடன் வேறு

பக்.24

## நான் ஊமை; இனி அதிகம் பேசமுடியாது

### சொல்கிறார் விக்கி

யாழ்ப்பாணம், செப். 22

இனி அதிகம் பேசமுடியாது. நான் ஊமையாகவே வந்துள்ளேன். வாய் திறந்தால் பிரச்சினை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.



நேற்று யாழ். பண்ணைக் கடற்கரையில் இடம்பெற்ற தேசிய கடலோரச் சுத்திகரிப்புத் தின நிகழ்வில் கலந்துகொண்ட முதலமைச்சரிடம் அங்கு அவர் ஆற்றிய உரை தொடர்பான மேலதிக விபரங்களைக் கோரிய போதே மேற்

பக்.24

## உள்நாட்டு விசாரணையில் வெளிநாட்டவர் அடங்குவர்

### சுப்பிரமணியசுவாமியிடம் கூறினாராம் பிரதமர் ரணில்

சென்னை, செப்.22

இலங்கையின் உள்நாட்டு விசாரணையில் வெளிநாட்டவர் பங்குகொள்வர் என இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தம்மிடம் குறிப்பிட்டார் என பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியசுவாமி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் எனத் தமிழக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால் எந்தப் பயனும் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

டில்லியில் இருந்து சென்னை வந்த அவர் நேற்றுமுன்தினம் மாலை சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கருத்து

பக்.24

## இந்திய மீனவர் ஊடுருவலைத் தடுக்க இரு நாடுகளும் பேசுவது கட்டாயம்

### வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 22

இந்திய மீனவர்களால் சுரண்டப்படும் எமது கடல் வளத்தைப் பாதுகாக்க இரு நாட்டு அரசுகளும் பேசி உரிய நடவடிக்கை எடுப்பது அவசியம் என வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்றுத் திங்கட்கிழமை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசிய கடற்கரை தூய்மைப்படுத்தும் செயற்பாட்டை யாழ். கோட்டைப் பகுதியில் ஆரம்பித்து வைத்த பின்னர் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் . அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துக் குளங்கள் மற்றும் குட்டைகளைத் தூய்மைப்படுத்தும் செயற்திட்டத்தை முன்னெடுக்க இளைஞர் சங்கங்கள் முன்வர வேண்டும். இந்த எனது செயற்பாட்டுக்கு அமைச்சு அனுசரணையாக இருக்கும்.

இந்தத் திட்டம் கொழும்பிலும் ஏனைய கரையோரப் பகுதிகளிலும், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட போதிலும், வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது.

பக்.24

## மகிந்தவை தூக்கில் போடவேண்டும்

### மதுரை ஆதீனம் ஆவேசம்



சென்னை, செப்.22

இலங்கை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைக் குற்றவாளி என அறிவித்து, தூக்கில் போடவேண்டும் என மதுரை ஆதீனம் ஆவேசமாகத் தெரிவித்துள்ளமையால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

ஈரோட்டில் தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்கச் சென்றபோது மதுரை ஆதீனம் ஊடகவியலாளரிடம் ஐ.நா. விசாரணை பற்றி கூறுகையில்,

பல்லாயிரம் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை ஐ.நா. சபை குற்றவாளி என அறிவித்து அவரைத் தூக்கில் போடவேண்டும். அப் போது தான், உலக நாடுகளுக்கு ஒரு பாடமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

(த-வ)

## 7, 700 பொதுமக்களே இறுதிப் போரில் சாவு

### ஐ.நா. அறிக்கை குறிப்பிடும் 40,000 பேர் கொலை என்பது பொய்யான தகவல் என்கிறார் பரணகம

கொழும்பு, செப். 22

போரின் இறுதிக் கட்டத்தில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக ஐ.நா. வெளியிட்ட அறிக்கையின் கணிப்பு மிகையானது என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம, 7 ஆயிரம் பேர் வரையிலேயே கொல்லப்பட்டிருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு, கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்திலிருந்து அதன் விரிவாக்கப்பட்ட ஆணைக்கு அமைவாகப் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பிலும் விசாரணை மேற்கொண்டு வருகின்றது. அதனடிப்படையில் அந்த ஆணைக்குழுவினால், ஜனாதிபதியிடம் அண்மையில் இடைக்கால அறிக்கையும் சமர்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு

பக்.24

## உள்ளக விசாரணைக்கு அனுமதிக்க வேண்டும்

### மனித உரிமைச் சபை உறுப்பு நாடுகளிடமும் அமெரிக்காவிடமும் இலங்கை வேண்டுகோள்

கொழும்பு, செப். 22

போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாகக் கலப்பு நீதிமன்றத்தை அமைப் பதற்குப் பதிலாக, உள்நாட்டு விசாரணையை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடு களிடமும், அமெரிக்காவிடமும், இலங்கை

பக்.24

## அமெ. தீர்மானத்துக்கு இலங்கை கடும் எதிர்ப்பு

### அது நல்லிணக்கத்தைப் பாழாக்கும் என்று ரவிநாத் ஆரியசிங்க ஜெனிவாவில் தெரிவிப்பு

ஜெனிவா, செப். 22

முற்றுமுழுதான உள்ளகப் பொறிமுறைக்கான ஆதரவை எப்படியேனும் பெற்றுவிட வேண்டும் என்ற முனைப்பில் தீவிரமாக செயற்பட்டுவரும் இலங்கை அரச தரப்பினர்



ஜெனிவாவில் தற்போது நடைபெற்றுவரும் ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 30 ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ள அமெரிக்காவின் முதலாவது வரைவுத் தீர்மானத்


பக்.24

## அரசமைப்புத் திருத்தம் மூலம் தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு

### கூறுகிறார் லக்ஸ்மன் கிரியெல்ல

சென்னை, செப்.22

தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்படும் என அரசு உறுதியளித்துள்ளது.



உத்தேச அரசியல் சாசனத் திருத்தங்களின் ஊடாகத் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டம் வழங்கப்படும் என நாடாளுமன்ற அவைத் தலைவரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பக்.24

## கிளிநொச்சி நீதிமன்றின் தடயப்பொருள் அறையில் வைக்கப்பட்டிருந்த 27 கிலோ கேரளக் கஞ்சா திருட்டு

### சந்தேகத்தில் ஒருவர் நேற்று இரவு பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம்,செப்.22

கிளிநொச்சி நீதிமன்றில் தடயப் பொருள்கள் வைக்கப்படும் அறையில் 12 பைக்கற்றுக்களில் வைக்கப்பட்டிருந்த சுமார் 27 கிலோ 260 கிராம் கேரளக் கஞ்சா களவாடப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்வம் தொடர்பில் நேற்றுக் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வழமை போல் நீதிமன்றக் கடமைகள் முடிந்த பின்னர் பூட்டப்பட்ட குறித்த அறை நேற்று மீண்டும் திங்கட்கிழமை திறக்கப்பட்ட போதே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி நீதிமன்றில் கடமையில் ஈடுபடும் பணியாளர்களிடம் நேற்றைய தினம் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதாகக் கூறப்பட்டது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகத்துடன் தொடர்பு

பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த இடத்தில் குடியமர்த்துமாறு மயிலிட்டி மீனவர் உணவு தவிர்ப்பு

## இன்று மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க வளாகத்தில்

யாழ்ப்பாணம், செப்.22
மயிலிட்டிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்த்துமாறு கோரி அந்தப் பகுதி மீனவர்களால் இன்று அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.
மயிலிட்டி கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் காலை 9 மணிக்கு நடத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
26 வருடங்களாக இடம்பெயர்ந்துள்ள எம்மை மீளக் குடியமர்த்துவதற்குரிய எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எமது சொந்தப் பிரதேசத்தில் தொழில் செய்ய முடியாது வாழ்வாதாரத்துக்கு பெரும் சிரமத்தை எதிர்கொள்கிறோம். எம்மை எமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று தெரிவித்தனர்.
இந்த அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் அரசியல் கட்சிப் பிரமுகர்கள், பொதுமக்கள் என அனைவரும் இணைந்து ஆதரவு வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-422)

## குளத்தில் குளித்த இரு சிறுவர் நீரில் மூழ்கிப் பரிதாபச் சாவு

*நாரந்தனையில் நேற்றுமுன்தினம் சோகம்*

யாழ்ப்பாணம்,செப்.22
ஊர்காவற்றுறை, நாரந்தனை பகுதியில் உள்ள அருமைக்குட்டி குளத்தில் குளிக்கச் சென்ற சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கிப் பரிதபமாக உயிரிழந்துள்ளனர்.
நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் மங்களேஸ்வரன் தனுசன் (வயது–11),சுரேஸ்குமார் விதுசன் (வயது–8) ஆகிய இரு சிறுவர்களுமே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
ஒன்று விட்ட சகோதரர்களான குறித்த சிறுவர்கள் இருவரும் உதை பந்தாட்டப் போட்டி பார்ப்பதற்குச் செல்வதாகப் பெற்றோரிடம் கூறிவிட்டு நாரந்தனைப் பகுதியில் உள்ள அருமைக்குட்டி குளத்தில் குளிக்கச் சென்றுள்ளனர்.
முற்பகல் 11.00 மணிக்குச் சென்ற சிறுவர்கள் மதிய உணவுக்கு வீடு வராத நிலையில் பிற்பகல் 2.30 மணியளவில் இவர்களை உறவினர்கள் தேடியுள்ளனர்.
இந்நிலையில் இரு சிறுவர்களும் அருமைக்குட்டி குளத்தில் இறந்த நிலையில் மிதந்து கிடந்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து இருவரின் சடலங்களும் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டன.
நேற்று முன்தினம் இரவு உடற்கூற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு நேற்றுக் காலை சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (த-ரி)

## காணாமல்போன கர்ப்பிணிப் பெண் சடலமாக மீட்பு

நெல்லியடி, செப்.22
கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த நான்கு பிள்ளைகளின் தாயாரான குடும்பப் பெண் ஒருவர் தொண்டமானாறு ஆற்றங்கரையில் இருந்து நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
செட்டியாதெரு தொண்டமானாறைச் சேர்ந்த அரசன் சந்திரவதனா(வயது 40) என்ற குடும்பப் பெண்ணே சடலமாக மீட்கப்பட்டவராவார்.
மனநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த குறித்த பெண் கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணாமற் போயிருந்தார்.
இந்த நிலையில் நேற்றுக்காலை தொண்டமானாறு சந்நிதி கோயிலுக்கு பின்புறமாக உள்ள ஆற்றங்கரையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.
மரண விசாரணைகள் மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்.போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-108)

# சர்வதேச திரைப்பட விழாவின் விருது வழங்கும் நிகழ்வு நேற்று





யாழ்ப்பாணம், செப்.22
நேற்று யாழ் சர்வதேச திரைப்பட விழா இறுதி நாள் நிகழ்வுகள் மாலை 6 மணியளவில் கார்கில்ஸ் சதுக்க திரையரங்கில் நடைபெற்றது.
இவ்விழா கடந்த 15 ஆம் திகதி முதல் கார்கில்ஸ் சதுக்க திரையரங்கம் , பல்கலைகழகத்தின் கைலாசபதி மண்டபம் , பொது நூலக கேட்போர் கூடம் போன்றவற்றில் இலவச காட்சிப்படுத்தல்கள் இடம் பெற்றிருந்த பொது மக்களின் வாக்குகளும் பதியப்பட்டு வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.
வாழ்நாள் சாதனையாளர் விருது அர்த்தனாஸ் யேசுராசாவுக்கு ஆர் .சிவச்சந்திரன், ஆர் .கிருஷ்ண குமார், மூத்த இசையமைப்பாளர் கண்ணன் ஆகியோரால் வழங்கப்பட்டது.
பார்வையாளர்களின் விருது வென்ற திரைப்படமாக – பை (த பாக் ) தெரிவு செய்யப்பட்டது. இந்த திரைப்பட இயக்குநர் எஸ் .சிவராஜுக்கு , யாழ் பல்கலை கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணமும் ,யாழ் பல்கலை கழக பேராசிரியர் ஞானகுமாரனும் , நாடக தலைமை அலுவலர் பிரவின் டேவிடும் விருது வழங்கினர்.
சிறந்த அரங்கேற்ற திரைப்படமாக த ஸ்டேஜ் ஒப் பமிலியர் திரைப்படம் நடுவர்களின் தீர்மானத்தால் தேர்வானது . அதன் இயக்குநர் மலித் ஹகொடவக்கு, யாழ். சர்வதேச திரைப்பட விழாத் தலைவர் பாக்கியநாதன் அகிலன், யாழ் சர்வதேச திரைப்பட விழா இயக்குநர் திருமதி அனோமா ராஜ கருணா , பிரசன்னா விதானகே ஆகியோர் விருது வழங்கினர்.
கடந்த 15ஆம் திகதி முதல் நடைபெற்ற யாழ். சர்வதேச திரைப்பட விழாவில் 12 அரங்கேற்ற திரைப்படங்களும் ,23 குறும்படங்களும் திரையிடப்பட்டன. இலங்கை, இந்தியா , ஐக்கிய இராச்சியம், ஆஸ்ரேலியா ,மலேஷியா மற்றும் கனடாவில் தயாரிக்கப்பட்ட 12 அரங்கேற்ற திரைப்படங்கள் திரை யிடப்பட்டிருந்தன. விருது வழங்கும் நிகழ்வைத்தொடர்ந்து லெனின் எம் சிவமின் துப்பாக் கியும் மோதிரமும் திரையிடப்பட்டது. (ற-ரி4)

# இராணுவத்தின் வேலியால் பொதுமக்கள் பெரும் சிரமம்



முல்லைத்தீவு, செப்.22
முல்லைத்தீவு உப்புமாவெளி கிராம அலுவலர் பிரிவிலுள்ள தூண்டாய் மயானத்தை ஊடறுத்து இராணுவத்தால் எல்லையிடப்பட்ட வேலி அகற்றப்படாமையால் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.
இதுகுறித்து உடுப்புக் குளம் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் பெ.நந்தகுமார் தெரிவித்துள்ளதாவது:-
மீள்குடியமர்வின் பின்னர் இராணுவத்தினர் தமது தேவைக்கென எமது மயானத்தின் பெரும் பகுதியை உள்ளடக்கி மயானத்தை ஊடறுத்து எல்லையிட்டு கம்பிக் கட்டைகளும் இட்டுள்ளனர். இது குறித்து கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து எமது மயானம் முழுமையாக விடுவிக்கப்பட்டு இராணுவத்திற்கென சிறு பகுதிக் காணி ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டு காணியின் எல்லைகளும் இடப்பட்டிருந்தது.
ஆனால் இன்றுவரை இராணுவத்தினரால் முதலில் எல்லையிடப்பட்ட கம்பிக்கட்டைகள் அகற்றப்படவில்லை. அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் புதிதாக எல்லைகள் இடப்படவுமில்லை. இதனால் இறந்தவர்களை அடக்கம் செய்வதிலும் தகனம் செய்வதிலும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
இராணுவத்தினால் எல்லையிடப்பட்ட பகுதிக்குள் முதலில் அடக்கம் செய்யப்பட்டவர்களுக்கு அஞ்சலி செய்வதற்கும் மக்கள் அஞ்சுகின்றனர். மயானத்தைச் சுற்றி கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் எல்லையிட்டு கொங்கிறீற் தூண்களாவது இட்டு எல்லையிட்டு வேலி அமைத்துத் தரவேண்டும் என்றார். (ற-102)

# கரையோரத் தூய்மையாக்கல் செயற்றிட்டம் நேற்று வடக்கின் பலபாகங்களில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், செப்.22
கரையோரத் தூய்மையாக்கல் தினத்தை முன்னிட்டு நேற்று வடக்கின் பல பாகங்களிலும் கரையோரங்களைக் சுத்திகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய பகுதிகளின் கடற்கரையோரங்கள் நேற்றைய தினம் சுத்திகரிப்புச் செய்யப்பட்டன.
யாழ்.மாவட்டத்தில் பண்ணைக் கடலோரத்தில் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது. அதில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்ததோடு சிறப்புரையும் ஆற்றினார். குறித்த நிகழ்வில் தேசிய கடலோர சுத்திகரிப்பு பணிமனை உத்தியோகத்த சர்வமத குருமார், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், அரசியல்வாதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் அம்பலவன் பொக்கணை ம.வி, முள்ளிவாய்க்கால் க.உ. வித்தியாலயம் , முல்லைத்தீவு ம.வி, முல்லைத் தீவு றோ.க வித்தியாலயம், கள்ளப்பாடு அ.த.க பாடசாலை சிலாவத்தை த.வி, அலம்பில் றோ.க. ம.வி, செம்மலை ம.வி, கொக்குத் தொடுவாய் அ.த.க.பாடசாலையின் மாணவர்களும், பொது மக்கள் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்களும்இணைந்து சுத்திகரிப்பில் ஈடுபட்டனர்.
கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி போன்ற பிரதேசங்களில் நடைபெற்றது. பூநகரிப் பிரதேசத்தின் பள்ளிக்குடா, கண்டாவளைப் பிரதேசத்தின் ஆனையிறவு, பச் சிலைப் பள்ளிப் பிரதேசத்தின் அல்லிப் பளை, இயக்கச்சி போன்ற பிரதேசங்களில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் அரச அதிபர், பிரதேச செயலர், அரச உத்தியோ கத்தர்கள், பொலிஸார், கடற்படையினர், கடற்றொழிலாளர் சங்கத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.
மன்னார் தாழ்வுபாடு கடற்கரையில் மன்னார் மாவட்ட அரச



அதிபர் எம்வை.எஸ்.தேசப் பிரியவால் குறித்த செயற்திட்டம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.இதன் போது மன்னார் பிரதேசச் செயலாளர் கே.எஸ்.வசந்த குமார்,மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவின் உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.சி.றியாஸ், கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை யின் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். அதனைத்தொடர்ந்து மன்னார், மாந்தை மேற்கு, நானாட்டான், முசலி ஆகிய நான்கு பிரதேசச் செயலாளர் பிரிவுகளிலும் உள்ள கடற்கரையோரப்பகுதிகளில் குறித்த தூய்மைப்படுத்தும் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. (ற-ரி3, 23, 433, 56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் அத்துமீறலை கண்டித்து நாளை பேரணி

## அனைவரையும் கைகோர்க்குமாறும் அழைப்பு

யாழ்ப்பாணம், செப்.22
இந்திய மீனவர்களின் அத்து மீறலைக் கண்டித்து நாளை மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண கடற்றொழிலாளர் இணையம், யாழ்.மாவட்ட கிராமிய கடற் றொ ழில் அமைப்புகளின் சம்மேளனம், யாழ்.மாவட்ட கிராமிய கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என்பன இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன.

இந்தப் பேரணி நாளை காலை 7 மணிக்கு யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் முன்பாக ஆரம்பிக்கப்படும் என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையச் செயலாளர் சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

மீனவர்களின் கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னிட்டு கடைகள், கூட்டுறவுச் சங்கங்கள், நிறுவனங்கள், மீனவர் சங்க சமாசங்கள், மீனவ கிராமிய அமைப்புகள், போக்குவரத்துக்கழங்கள், ஓட்டோ உரிமையாளர்கள் நாளை கறுப்புக் கொடி கட்டித் தமது ஆதரவை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பேரணியை முன்னிட்டு நேற்று முதல் இன்று வரை கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேரணியில் அரசியல் பிரமுகர்கள்,மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொண்டு நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள், போக்கு வரத்துக் கழகங்கள், மீன்வியாபாரிகள், கடை முதலாளிகள், பிரதேசசபை, பிரதேச மற்றும் மாவட்ட செயலக ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், யாழ் .மாவட்ட கூட்டுரவுச் சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் , விரிவுரையாளர்கள், மதத்தலைவர்கள் எனப் பலதரப்பினரும் கலந்து கொண்டு தமது வாழ்வாதாரப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற–ரி4,101)

## கஞ்சா நுகர்ந்த இருவர் மறியலில்

யாழ்ப்பாணம், செப். 22
6 கிராம் கஞ்சா போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். அல்லைப்பிட்டி மற்றும் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்களே நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். அல்லைப்பிட்டி பகுதியைச் சேர்ந்த நபர் மண்டைதீவு வீதியில் வைத்து ஒரு கட்டு கஞ்சாவை நுகர்ந்து கொண்டிருந்த போதும், குருநகர் பகுதியைச் சேர்ந்த நபர் குருநகர் கடற்கரைப் பகுதியில் இரண்டு கட்டு கஞ்சாவை நுகர்ந்து கொண்டிருந்த போதும் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட இரண்டு பேரும் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர் வரும் 5 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார். (ற–4,103,106)

## நிரப்பப்படாதுள்ள விவசாய ஆராய்ச்சி உதவியாளர் வெற்றிடம்

யாழ்ப்பாணம், செப். 22
வடக்கிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற பெரும்பான்மையின விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களின் வெற்றிடத்துக்கு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் இன்னமும் நியமிக்கப்படவில்லை. குறித்த பதவிகள் தற்போதும் வெற்றிடமாகவே உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களாக 361 பேரை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதில் 324 பேர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். இது தொடர்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து 192 பேர் மாத்திரமே நியமிக்கப்பட்டனர். அவர்களில் 158 பேரே பெரும்பான்மையினத்தவர்கள்.

எனினும் இந்த நியமனம் தொடர்பில் வடக்கு மாகாண சபையின் எதிர்ப்பை அடுத்து குறித்த 149 பேரும் இடமாற்றப்பட்டனர். அவ்வாறு இடமாற்றலாகிச் சென்றவர்களுக்குப் பதிலாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்படுவார்கள் என்று மத்திய அரசால் அறியத்தரப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்திருந்தார்.

எனினும் இடமாற்றங்கள் வழங்கப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும் குறித்த வெற்றிடங்களுக்கு இன்னமும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற–5)

# போத்தல் தண்ணீரில் கிறீஸ்: 8 நிறுவனங்கள் நீதிமன்றுக்கு

## இந்தவாரம் வழக்குத் தாக்கல் என்கிறது யாழ்.மாவட்ட நுகர்வோர் அதிகார சபை



யாழ்ப்பாணம், செப். 22
போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீரில் கிறீஸ் மற்றும் காரத்தன்மை உள்ளமை கண்டறியப்பட்ட எட்டு நிறுவனங்களுக்கு எதிராக இந்த வாரம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று யாழ்.மாவட்ட நுகர்வோர் அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜூன் மாதம் யாழ்.மாவட்டத்தில் விற்பனையாகும் குடிதண்ணீர்ப் போத்தல்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் ஒன்பது நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்ட குடிதண்ணீர்ப் போத்தல்கள் எழுந்தமானமாக சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவை அனைத்தும் ஒரே தொகுதிக்குரியவை.

இவ்வாறு எடுக்கப்பட்ட குடிதண்ணீர்ப் போத்தல்களின் நீர் மாதிரிகள் அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவற்றில் இதுவரை எட்டு நிறுவனங்களின் குடிதண்ணீர்ப் போத்தல்களின் மாதிரிகளின் சோதனை முடிவுகள் கிடைத்துள்ளன.

அவற்றில் இரண்டு நிறுவனங்களது குடிதண்ணீரில் காரமும், மூன்று நிறுவனங்களது குடிதண்ணீரில் கீறிஸ் மற்றும் ஒயிலும், மூன்று நிறுவனங்களது குடிதண்ணீரில் காரம், கீறிஸ் மற்றும் ஒயிலும் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

எஞ்சிய ஓர் நிறுவனம் தொடர்பான அறிக்கை இன்னமும், அரச பகுப்பாய்வு திணைக்களத்திலிருந்து நுகர்வோர் அதிகார சபைக்கு கிடைக்கவில்லை. இருந்தபோதும் முடிவுகள் கிடைத்த எட்டு நிறுவனங்களுக்கு எதிராக இந்த வாரம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த எட்டு நிறுவனங்களின் பெயர்களை வெளியிடுவதற்கான அனுமதி தமக்கு இன்னமும் கிடைக்கவில்லை என்றும் நுகர்வோர் அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ற–5)

## சந்தேகத்துக்கிடமாக நடமாடியவருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, செப்.22
கொடிகாமம் நகர்ப் பகுதியில் வங்கிகள் அமைந்துள்ள பகுதிகளில் சந்தேகத்துக்கு இடமான நிலையில் நடமாடிய மிருசுவிலைச் சேர்ந்த நபரொருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி பதில் நீதிவான் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸார் கடந்த சனிக்கிழமை இரவு வங்கிகள் அமைந்துள்ள பகுதிகளில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நபரைக் கைது செய்து பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். அதன்போதே குறித்த நபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற)

## விபத்தில் ஒருவர் படுகாயம்

வவுனியா, செப்.22
வவுனியா, புளியங்குளம், புதூர் சந்திக்கும் அருகாமையில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் – படி வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

டிப்பர் வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளை எதிரே வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது.

அதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற)

# சர்வதேச சட்டங்களுக்கு அமைய விசாரணை அமையாதுவிடில் சிக்கல் நிலை உருவாகலாம்

## சிரேஷ்ட சட்டத்தரணி புவிதரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 22
முன்னைய சில செயற்பாடுகளின் மூலமாக உள்நாட்டு விசாரணையானது உரியமுறையில் நடக்காது. சர்வதேச கலப்பு விசாரணை என்பது முற்றுமுழுதாக சர்வதேச சட்டங்களுக்கு அமைய முழு விசாரணையும் நடக்க வேண்டும். தவறின் சிக்கல்கள் உருவாகும்.– இவ்வாறு சிரேஷ்ட சட்டத்தரணி புவிதரன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் இலங்கை தொடர்பான அறிக்கை வெளிவந்த நிலையில் அதுபற்றிய ஆராய்வாக யாழ்.பல்கலைக் கழகத்தில் முன்வைத்த கருத்துரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களைப் பொறுத்தளவில் சர்வதேச விசாரணை [illegible] வெளிவந்த நிலையில் [illegible] கலப்பு விசாரணை என்றும் மற்றொரு சாரார் சர்வதேச விசாரணை என்றும் கோருகின்றனர். கலப்பு (ஹைபிரிட்) விசாரணை எனும் போது சர்வதேச பொறிமுறைகளையும் உள்ளூர் பொறிமுறைகளையும் சட்டங்கள் அல்லது சட்ட பொறிமுறைகள் என்பனவற்றை உள்வாங்கி நடத்த வேண்டும் என்பது. மற்றையது உள்ளகப் பொறிமுறை. – என்றும் அவர் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:–

கலப்பு விசாரணை என்பதில் யாரால் இந்த விசாரணையை கொண்டு நடத்தவுள்ளனர் என்பது முக்கியமானது. விசாரணையைப் பொறுத்தவரையில் அந்தப் பொறிமுறை இலங்கை அரசால் பூரண கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ள [illegible] நீதிபதிகள் விசாரணையாளர்கள், வழக்குத் தொடுநர்கள் உள்வாங்கப்படலாம். சர்வதேச நிபுணத்துவம் உள்வாங்கப்படலாம்.

இந்த விசாரணையாளர்கள் அல்லது நீதிபதிகள் யார் அல்லது அவர்கள் எந்தப் பின்புலத்தில் இருந்து வந்தவர்கள் என்று நோக்கினால் இந்த அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களை ஒடுக்கியவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதை சிலவேளைகளில் விரிவாக்குவதற்கு மறுத்த தன்மையைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்த விசாரணையைத் தனியே சட்டமாகப் பார்க்க வேண்டுமா அல்லது அரசியலுடன் இணைத்துப் பார்ப்பதா என்ற கேள்வி எழுகிறது. கலப்பு விசாரணையில் வரக்கூடிய சட்டச் சிக்கல்களையும் பார்க்க வேண்டும். அதில் ஒன்று விசேட நீதிமன்றங்களை உருவாக்க முடியாது என்ற கருத்து உண்டு. சட்டம் அரசியலுக்குள் உட்பட்ட ஒன்று. இந்த விசாரணைக்கு முன்னுதாரணங்கள் எதுவும் இல்லை.

தற்போதைய நிலையில் எம்முன் உள்ள கேள்வி அறிக்கையில் கூறப்பட்டுள்ளதை எவ்வாறு கையாளலாம் என்பதே. எமது நிலைப்பாட்டை நாம் தெளிவாக முன்வைக்க வேண்டும். அது நடக்கிறதா? இல்லையா? என்பது வேறு விடயம். அது எமது நலன்களுக்குப் பாதகமாக அது இருக்க முடியாது. எனவே நாம் எமது நிலைப்பாட்டைத் தெளிவாக முன்வைக்கிறோமா என்பதே முக்கியம்.

இலங்கை அரசு காட்டமான அறிக்கை வந்தும், அமெரிக்கா மாத்திரமே உள்ளக விசாரணையை வலியுறுத்துகிறது. ஏனைய நாடுகள் சர்வதேச விசாரணையையே வலியுறுத்துகிறது. எனவே நாம் அழுத்தம் கொடுக்க வேண்டும். அது மாற்றத்தை ஏற்படுத்தலாம்.– என்றார். (ற–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்ற பட்டதாரிகள் மட்டு. நகரில் ஆர்ப்பாட்டம்

## தமக்கு நியமனம் வழங்குமாறு கோரி

மட்டக்களப்பு, செப்.22

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு நியமனங்கள் வழங்க வேண்டும் என்று கோரி நேற்று ஆர்ப்பாட்டம் மற்றும் மறியற்பேராட்டத்தில் ஈடுபட்டனர். மட்டக்களப்பு, காந்தி பூங்காவுக்கு அண்மையில் உள்ள மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையானோர் பங்குகொண்டு தமக்கு நியமனங்களை வழங்குமாறு வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுட்டவர்கள் 'புதிய •அரசே வேலை வழங்கு', 'ஜனாதிபதியே தொழில் இன்றி வாடும் எமக்கு தொழில் தாருங்கள்' என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த



மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் யு.உதயவேந்தன்:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2010ஆம் ஆண்டுமுதல் நியமனம் வழங்கப்படாத ஆயிரத்து 200 பட்டதாரிகள் உள்ளனர். அவர்களுக்கு புதிய அரசு நியமனங்களை வழங்க ஆவன செய்யவேண்டும்.- என்று தெரிவித்தார். (ற-10)



# சட்டவிரோதமாக ஏற்றிய மணல் கிளிநொச்சி பொலிஸிடம் சிக்கியது

## 10 டிப்பர்கள் மற்றும் 2 டிராக்டர்களில்

கிளிநொச்சி, செப்.22

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற 10 டிப்பர் வாகனங்களும், 2 டிராக்டர்களும் நேற்றுமுன்தினம் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட மணல் அகழ்வு விதிமுறைக்கு மாறாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் அவை கைப்பற்றப்பட்டன. குறித்த சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு நடைபெற்று வெளியிடங்களுக்கு மணல் கொண்டு செல்லப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றுமுன்தினம் கிளிநொச்சிப் பொலிஸார் திடீர் சோதனைகளை மேற்கொண்டனர். அதன்போதே குறித்த வாகனங்களும் சாரதிகளும் சிக்கிக் கொண்டுள்ளனர்.

நேற்று குறித்த சாரதிகள் கிளிநொச்சி மாவட்ட நீதுமன்றில் முற்படுத்தப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் குறித்த மணலைப் பறிமுதல் செய்யுமாறு நீதிமன்று உத்தரவிட்டதுடன், கைது செய்யப்பட்டவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ற-105)



மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இலங்கை ஜனராஜ சுகாதார சங்கத்தின் மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் வைத்தியசாலை சுகாதார சிற்றூழியர்களின் ஒத்துழைப்புடன் நேற்று டெங்கு ஒழிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஈட்டன் பீரிஸ் தலைமையில் நடைபெற்ற இந்தப் பணிகளில் இலங்கை ஜனராஜ சுகாதார சங்கத்தின் மாவட்ட கிளையின் தலைவர் எஸ்.எச்.எம்.இல்ஹாம் மற்றும் உறுப்பினர்கள்,சுகாதார சிற்றூழியர்கள் ,சாரணர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ற)

## 24 மணி நேர சேவையில் வவு. இ.போ.ச. நேரக்கணிப்பாளர் காரியாலம்

வவுனியா, செப்.22

வவுனியா இலங்கை போக்குவரத்துச் சபையின் நேரக் கணிப்பாளர் காரியாலயம் இந்த மாதம் முதல் 24 மணி நேர சேவையை வழங்கி வருகின்றது என வவுனியா இ.போ.ச. சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பு, கண்டி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் இருந்து வரும் பயணிகள் தேவை கருதி இந்தச் சேவை 24 மணி நேரச் சேவையாக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதன்மூலம் பயணிகள் தமது பயணத்தை இலகுவான முறையில் மேற்கொள்ள முடியும் என் றும் இ.போ.ச. அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (ற)



# மக்கள் குடியிருப்பு மத்தியில் படைமுகாம் தேவையில்லை

## வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 22

மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் அளவுக்கு அதிகமாக உள்ள படைமுகாம்களை அகற்றிக் கொள்வதன் மூலமே மக்கள் இயல்புச் சூழ லில் வாழ முடியும். - இவ்வாறு வடக்கு மாகாண சபையின் எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

அதிரடிப்படை முகாம் வேலியில் மின்சாரம் தாக்கி வவுனியா அடம்பன்குள பகுதியைச் சேர்ந்த இராஜேஸ்வரி கந்தசாமி கடந்த சனிக்கிழமை உயிரிழந்திருந்தார். இது தொடர்பில் அந்தப் பகுதி பொது மக்களினால் நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குடியிருப்புப் பகுதிகளில் தொடர்ந்து இராணுவ முகாம்கள் இருப்பது மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமையும். அடம்பன்குளத்தில் அதிரடிப்படை முகாம் வேலியில் மின்சாரம் தாக்கி சாவடைந்த இராஜேஸ்வரி கந்தசாமியின் நிகழ்வு இதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

அமைதிச் சூழல் ஏற்பட்டிருக்கும் நிலையில் அளவுக்கு அதிகமாக இருக்கும் படைமுகாம்களை மூடிக் கொள்வதே மக்களின் இயல்பு வாழ்க்கையை சுமுகமாக எடுத்து செல்வதற்கு வழிவகுக்கும்.

அடம்பன்குள அதிரடிப்படை முகாம் மட்டுமல்ல குடியிருப்பு செறிந்துள்ள பகுதிகளில் தேவைக்கு அதிகமாகவுள்ள முகாம்களை மூடுவதற்கு தேசிய நல்லிணக்கத்திற்கு முன்னுரிமை வழங்கும் புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் தேசிய நல்லிணக்கத்திற்கான உறவுப்பாலமாக அமையும் - என்றார். (ற-5)

# பிள்ளை நேய அணுகுமுறை திட்டம் கிழக்கு மாகாணத்தில்

திருகோணமலை, செப்.22

யுனிசெப்பின் அனுசரணையுடன் சமூக மேம்பாட்டுத் திணைக்களம், மாகாணக்கல்வித் திணைக்களம், மாகாணக்கல்வி அமைச்சு மற்றும்



முன்பள்ளி அபிவித்திப் பணியகத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண முன்பள்ளிகளில் பிள்ளை நேய அணுகுமுறையை நடைமுறைப் படுத்துவதற்கான செயற்திட்டம் நேற்று திங்கட்கிழமை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அதன் ஒரு அங்கமாக கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற கல்வி வலயங்களில் இருந்து தெரிவு செய்யபட்ட 16 முன்பள்ளிகளுக்கு முன்பள்ளி அபிவிருத்தி நிதியாக 32 லட்சம் ரூபா தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முன்பள்ளிகளுக்கும் தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான காசோலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் எஸ். தண்டாயுதபாணி, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் விஜயானந்த மூர்த்தி மற்றும் பல அரச அதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்தத் திட்டமானது முதன்முறையாக கிழக்கு மாகாணத்திலே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இந்தச் செயற்திட்டமானது மாகாண ரீதியில் வெற்றி அளிக்கும் பட்சத்தில் இதனை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படவுள்ளது என்றும் அங்கு உரை நிகழ்த்திய கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தெரிவித்தார். (ற)

# வேலைத்திட்டங்களை பூரணப்படுத்தல் குறித்து மன்னாரில் மீளாய்வுக் கூட்டம்

மன்னார், செப்.22

மன்னார் மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பூரணப்படுத்தப்படுவதற்கான மீளாய்வுக்கூட்டம் நேற்று மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் மன்னார் மாவட்டச் செயலக ஜெய்க்கா மண்டபத்தில் நடைபெற்றது.

2014 ஆம் ஆண்டு முதல் மன்னார் மாவட்டத்தில் உள்ள மன்னார், நானாட்டான், மடு, மாந்தை மேற்கு, முசலி ஆகிய 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்களை பூரணப்படுத்தும் வகையில் குறித்த மீளாய்வுக்கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.



குறித்த மீளாய்வுக் கூட்டத்தில் தேசிய ஒருங்கிணைப்பு அலுவலக இயக்குநர் எம்.எஸ்.ஜெயசிங்க, வடமாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன்,மாவட்ட திட்டமிடல் அதிகாரி கே.சிறி பாஸ்கரன், உதவி மாவட்ட திட்டமிடல் அதிகாரி டி.ரி. சுதர்சன், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மாதர் - கிராம அபிவிருத்திச்சங்க பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் கல்வி, சுகாதாரம், குடி தண்ணீர், வீட்டுத் திட்டம், விவசாயம், மீன்பிடி, மீள் கட்டுமானப்பணிகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், குறித்த அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பூரணப்படுத்தப்படுதல் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது. (ற-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைவருக்கு நாட்டின் பிரச்சினை தெரியாது

## தமிழர் பிரச்சினை மட்டுமே தெரியும் என்கிறார் ரஞ்சித் சொய்சா எம்.பி.

கொழும்பு, செப்.22

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு வடக்கு– கிழக்குத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி மட்டுமே தெரியும். நாட்டு மக்களின் பிரச்சினை பற்றி எதுவும் தெரியாது – இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

அவரை ஒருபோதும் எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ள ரஞ்சித், தாம் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கோரப்போதில்லை யென்றும், தனியான சுயாதீன கட்சியாக நாடாளுமன்றில் அமர்வோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சியின் சுயாதீனத் தன்மையை வலியுறுத்தித் தொடர்ந்து போராடுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பிரிவினைவாதம் பற்றிப் பேசாமல், நாட்டின் அனைத்து மக்களின் பிரச்சினை தொடர்பிலும் செயற்படுமிடத்து, எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆதரவு வழங்குவதாக நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித் திருந்தார். (ற)



காலம் சென்ற எரிக் ராமநாயக்கவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி நேற்றுமுன்தினம் காலை இறுதி அஞ்சலி செலுத்தினார். எரிக் ராமநாயக்க முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரோஸி சேனநாயக்கவின் தந்தை ஆவார். (ற)

# சர்வதேச விசாரணை கோரி இராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம்

## தமிழக வாழ்வுரிமைக் கட்சியினர் கைது

இலங்கையில் நடந்த இனப் படுகொலைக்கு ஐ.நா. இலங்கையின் மீது சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்ற தீர்மானத்தை இந்தியா கொண்டுவரவேண்டும் எனக் கோரி இராமேஸ்வரம் அருகே போராட்டம் நடத்த முயன்ற தமிழக வாழ்வுரிமைக் கட்சியினர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து மதுரை சென்ற பயணிகள் ரயிலை மண்டபம், ரயில் நிலையத்தில் தடுத்து நிறுத்த முயன்ற தமிழக வாழ்வுரிமைக் கட்சியினரைப் பொலிஸார் தடுத்து நிறுத்தியதால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. அவர்கள் இந்திய அரசு இலங்கைக்கு எதிரான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோஷமிட்டனர். அதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட 21 பேரைப் பொலிஸார் கைது செய்து வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இது தொடர்பில் தென்மண்டல இளைஞர் அணி தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் செயலாளர் ஜெரோன் குமார் தெரிவித்ததாவது:–

இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு ஐ.நா மன்றத்தில் இலங்கையின் மீது சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்ற தீர்மானத்தை இந்தியா கொண்டுவர வேண்டும். தமிழக சட்டமன்றத்தில் இலங்கையின் மீது பொருளாதாரத் தடை விதித்து ஈழத் தமிழர்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று கொண்டு வந்த தீர்மானத்தின் கீழ் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்துகின்றோம். இதனை ஏற்றுக்கொள்ளாவிடின் தமிழகம் தழுவிய போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம் – என்றார். (ற–10)

# புலிகளைத் தோற்கடிக்க உதவியது பாகிஸ்தான்

## தூதுவர் விஜயாந்தி எதிரிசிங்க கூறுகின்றார்

கொழும்பு, செப்.22

இலங்கையில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து பயங்கரவாதத்தை இல்லாமல் செய்ய பாகிஸ்தான் பெரிதும் உதவியது என்று பாகிஸ்தானுக் கான இலங்கை பதில் தூதுவர் விஜயாந்தி எதிரி சிங்க தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிலுள்ள பைசல் மஸ்ஜித் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரம், கப்பல்துறை, சுற்றுலாத்துறை, பாதுகாப்பு நடவடிக்கைள், போதைப்பொருள் தடுப்பு, விளையாட்டுத்துறை மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் இரு நாடுகளும் நீண்ட கால உறவைக் கொண்டுள்ளன என்று குறிப்பிட்ட அவர், பிராந்திய வலயத்தின் பொருளாதார நல்லிணக்கம் குறித்து இரு நாடுகளும் பங்களிப்பு செய்து வருகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளும் மிகச் சிறந்த உறவைக் கொண்டுள்ளன என்று குறிப்பிட்ட அவர், எதிர்கால்த்தில் அது மேன்மேலும் வலுப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (ற)

# நல்லாட்சியிலும் திருப்தியில்லை

## வியாளேந்திரன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, செப்.22

நல்லாட்சி நிர்வாகம் தமிழ் மக்களுக்குரிய அனைத்து விடயங்களிலும் சமத்துவத்தையும் திருப்தியையும் தந்துவிட்டது என கருதமுடியாது. எனவே, இந்த நல்லாட்சி அரசில் தமிழ் மக்களுக்குரிய அனைத்துத் தீர்வுகளும் கிடைக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியாளேந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோட்டைக்கல்லாற்றில் நடைபெற்றது.

அங்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது:–

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து தமிழ்த் தேசியத்தை மீண்டும் நிலை நாட்டியுள்ளார்கள். கடந்த 2010ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வழங்கிய வாக்குகளை விட இம்முறை கிடைக்கப் பெற்ற வாக்குகள் இரட்டிப்பாகக் கிடைத்துள்ளன. எதிர்காலத்தில் நடைபெறவுள்ள எந்தத் தேர்தலாக இருந்தாலும் தமிழ் மக்கள் அனவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாத்திரம்தான் வாக்களிக்க வேண்டும்.

சர்வதேச ரீதியில் மேற்கொண்டு வந்த கடுமையான பிரயத்தனத்தின் பிரதிபலிப்புத்தான் கடந்த 16ஆம் திகதியன்று ஐ.நா.வெளியிட்டுள்ள அறிக்கையாகும். இந்த அறிக்கை தமிழ் மக்களுக்கு முழுமையான திருப்தியைத் தராவிட்டாலும், ஓரளவு வெற்றி கண்டுள்ளோம் என்கின்ற திருப்தியுள்ளது. பூரணத்துவமான திருப்திகிடைக்க வேண்டுமாக விருந்தால் உள்ளக விசாரணைக்குள் முடங்கிவிடாமல் சர்வதேச விசாரணைப் பொறி முறையை எதிர்பார்த் திருக்கின்றோம்– என்றார். (ற)

# இனப்படுகொலை நடக்கவில்லை என்பதை ஐ.நாவும் ஏற்றுள்ளது

## வாசுதேவ நாணயக்கார கூறுகின்றார்

போரின் போதும் அதன் பின்னரும் தனிப்பட்ட ரீதியில் படையினர் மனித உரிமைகளை மீறியிருந்தால் அது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்த முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார, வடக்கில் இனப்படுகொலைகள் இடம்பெறவில்லையென்றும் இதனை ஐ.நாவும் ஏற்றுக் கொண்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இலங்கை இறையாண்மை கொண்ட நாடு. எமக்கென்று நீதித்துறை உள்ளது.எனவே போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சர்வதேச கலப்பு நீதி மன்ற விசாரணை அவசியமில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கை மூலம் இலங்கையின் இறையாண்மை மீறப்பட்டுள்ளது. இதனைக் கடுமை யாக எதிர்க்கின்றோம். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அமெரிக்காவின் தேவைக்காகவே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் அமெரிக்காவே இலங்கைக்கு எதிரான பிரேரணைகளை ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவில் முன்வைத்தது. இதன் போது சீனா, ரஷ்யா உட்பட பல்வேறு ஐ.நா. வின் உறுப்பு நாடுகள் இலங்கைக்கே ஆதரவு வழங்கியதோடு அமெரிக்காவின் பிரேரணையை எதிர்த்தன.

அவ்வாறு எதிர்த்த பல நாடுகள் அமெரிக்காவின் பிரேரணையை ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் வாக்கெடுப்புக்கு எடுக்கப்பட்ட போது சமூகமளிக்கவில்லை. எனவே அமெ ரிக்காவின் பிரேரணையை எதிர்த்தமையால் இலங்கைக்கு பெரும் ஆதரவு கிடைத்தது. இவ்வாறான தொருபுறச்சூழலில் இன்றுஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு போர்க் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு கலப்பு நீதி மன்றம் அமைக்கப்பட வேண்டுமெனபரிந்துரைசெய்துள்ளது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கை இறையாண்மை கொண்ட நாடு. எமக்கென்று வலுவான நீதித்துறை உள்ளது. எனவே ஐ.நா. வின் பரிந்துரை எமது நாட்டு இறையாண்மையை மீறுவதாகும். இதனை எதிர்க்கின்றோம். ஏற்றுக் கொள்ள முடியாது.கடந்த ஆட்சிக்காலத்திலும் எமக்கெதிரான பிரேரணைகளையும் சர்வதேச விசாரணை வலியுறுத்தலையும் அன்றைய ஆட்சியாளர்கள் எதிர்த்தனர்.

எவர் ஆட்சிசெய்தாலும் நாட்டின் இறையாண்மையை விட்டுக் கொடுக்க முடியாது. கடந்த ஆட்சியினரால் நல்லிணக்க ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. அதன் பரிந்துரைகள் கட்டம் கட்டமாக நிறைவேற்றப் பட்டுக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று உதாலக ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு போன்றவை நியமிக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெறுகின்றன. இந்த ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் கிடைத்த பின்னர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அத்தோடு இவ்வறிக்கை 2002/2012 ஆம் ஆண்டுகளை அடிப்படையாக வைத்தே வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கு முன்பதாக சந்திரிகா ஆட்சிக்காலத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டன. இது தொடர்பாக மங்கள சமரவீர பதிலளிக்க வேண்டும். இலங்கையில் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுகளின் பரிந்துரைகள் நிறைவேற்றப்படவில்லை எனக் கூற முடியாது.

எனவே சர்வதேசம் எமது நீதித்துறையை சவாலுக்கு உட்படுத்த இடமளிக்க முடியாது. அத்தோடு இங்கு இடம்பெற்றது பயங்கரவாதத்துக்கு எதிரான போராகும். இதில் விடுதலைப் புலிகளின் அதிகமானோர் தமிழர்கள் ஆவார்கள். வடக்கில் வாழ்ந்த மக்களிலும் அதிகமானோர் தமிழர்கள்.

எனவே மோதல்களில் உயிரிழப்புக்கள் என்பது தவிர்க்க முடியாததாகும். எனவே இதனை இனப்படுகொலை என அர்த்தப்படுத்த முடியாது.

ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவும் இனப்படுகொலை என்பதை நிராகரித்துள்ளது. ஆனால் போரின் போதும் அதன் பின்னரும் தனிப்பட்ட ரீதியில் ஆள்கள் கடத்தப் பட்டு கொலைகள் இடம் பெற்றிருந்தால் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் படையினர் தொடர்புபட்டிருந்தால் அது தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும். தண்ட னை வழங்கப்பட வேண்டும் – என்றார். (ற)

# கிழக்கு மாகாண சபைக்கு புதிய உறுப்பினர் நியமனம்

அம்பாறை, செப்.22

கிழக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினராக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் ஐ.எல். எம்.மாஹிர் இன்று காலை கிழக்கு மாகாண முதலமைச்சர் செயலகத்தில் முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் மற்றும் மாகாண சபை தவிசாளர் ஆரியபதி கலபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சராக இருந்த எம்.ஐ.எம்.மன்சூர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றதைத் தொடர்ந்து மாகாண சபை தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களில் திகாமடுல்ல மாவட்டத்தில் அடுத்த நிலையில் இருந்த சம்மாந்துறைத் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.எல்.எம்.மாஹிர் புதிய உறுப்பினராக பதவியேற்கவுள்ளார்

சம்மாந்துறையில் அண்மையில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் கிழக்கு மாகாண சபை உறுப்பினராக ஐ.எல்.எம்.மாஹிரை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பிரகடனம் செய்ததுடன், கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்பாக கண்டியில் நடைபெற்ற கட்சியின் உயர் பீட கூட்டத்தில் ஏகமனதாக தீர் மானிக்கப்பட்டு கிழக்கு மாகாண சபை உறுப்பினராக ஐ.எல். எம். மாஹிர் நியமிக்கப்பட்டார். இதனைடிப்படையில் கிழக்கு மாகாண சபை உறுப்பினராக ஐ.எல்.எம். மாஹிர் நியமிக்கப்பட்டு பதவி ஏற்கவுள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** தேவையற்ற விடயத்தில் கவனம் செலுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். முக்கிய தேவைக்காக கடன் வாங்கும் நிலை ஏற்படும். சீரான ஓய்வு, உடல்நலத்தை பாதுகாக்க உதவும்.

**இடபம்:** நண்பரின் உதவி சரியான நேரத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் வரும். பெண்களுக்கு வீட்டுத் தேவைக்கான செலவுகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** சமூகத்தில் நல்ல மனிதராக விளங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். பணியாளர்கள் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவர். வெகுநாள் வாங்க விரும்பிய பொருள்களை வாங்குவீர்கள்.

**கடகம்:** அன்றாடப் பணிகளில் உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் இலாபம் உயரும். உறவினர்களின் ஆதரவைக் கண்டு மகிழ்வீர்கள்.

**சிங்கம்:** பிறர் அலட்சியம் செய்வதைப் பொருள்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடும். வாகனப் போக்குவரத்தில் அவதானம் தேவை.

**கன்னி:** எதிரிகளை இனம் கண்டு ஒதுங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் ஓரளவு அதிகரிக்கும். ஒவ்வாமையால் உடல் நலத்தில் பாதிப்பு ஏற்படலாம். மாணவர்கள் அக்கறையுடன் படித்து முன்னேறுவர்.

**துலாம்:** குடும்ப நலனில் அக்கறை காட்டி வருவீர்கள். புதியவர்களின் அறிமுகத்தால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் ஏற்படும். வெகுநாள் வாங்க நினைத்த பொருளை வாங்குவீர்கள்.

**விருச்சிகம்:** பிறர் வியக்கும் விதத்தில் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு உயரும். உடல் நலத்துக்கு ஒவ்வாத உணவைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு:** மதிநுட்பத்துடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்க யோகம் உண்டு. மாணவர்கள் திட்டமிட்டுப் படித்து முன்னேறுவர்.

**மகரம்:** எதிலும் முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும்; இலாபம் சுமாராக இருக்கும். அதிக பயன்தராத பொருளை வாங்க வேண்டாம். வாகனப் போக்குவரத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**கும்பம்:** சுய கௌரவத்தைக் காப்பாற்றுவதில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் விற்பனை சிறந்து, ஆதாயம் உயரும். பெண்கள் சிக்கனத்தின் மூலம் சேமிக்க முயல்வர். எதிர்பார்த்த நல்ல செய்தி வீடு தேடி வரும்.

**மீனம்:** மனக்குழப்பம் நீங்கி, தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாகக் கூடும். உறவினர்கள் கேட்ட உதவியை மறுக்காமல் செய்வீர்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்ள அழைப்பு வரும்.

# சிவகார்த்திகேயன் கருத்தால் இரசிகர்கள் மத்தியில் முறுகல்



நடிகர் சிவகார்த்திகேயனை மதுரை விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை பிரபல நடிகரின் இரசிகர்கள் சூழ்ந்து கொண்டு தாக்கியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நடிகர் சிவகார்த்திகேயன் நேற்று தொலைக்காட்சி ஒன்றில் குஷ்புவுக்கு பேட்டியளித்தபோது, எனக்கு ரஜினியைப் பிடிக்கும். ரஜினிதான் எனக்கு ரோல் மொடல் என்றும் ரஜினியைப் பார்த்துத்தான் சினிமாவுக்கு வந்தேன் என்றும், கூறினார். இத்தனைக்கும் பிரபல நடிகரின் வெற்றிப் படத்தின் மறுதலைப்புடன் நடித்தவர் சிவகார்த்திகேயன். இதனால் பிரபல நடிகரின் இரசிகர்கள் ஆத்திரமடைந்ததாகக் கூறப்படுகிறது. பிரபல நடிகரின் இரசிகர்கள் சிவகார்த்திகேயனை வலைத்தளங்களில் தாக்கி வந்தனர். இந்த நிலையில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் உள்ள ஆதித்தனார் பொறியியல் கல்லூரியில் சிவந்தி ஆதித்தனார் சிலை திறப்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த விழாவில் நடிகர்கள் கமல், சிவகார்த்திகேயன், நடிகை ஹன்சிகா உட்பட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக இந்த விழாவில் பங்கேற்பதற்காக நடிகர் கமல் மதுரை விமான நிலையம் வந்தார். கமலை வரவேற்க அவரது ரசிகர்கள் அங்கு குவிந்திருந்தனர். அவர்களின் வரவேற்பை ஏற்றுக்கொண்ட நடிகர் கமல் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று விட்டார். தொடர்ந்து சில மணி நேரம் கழித்து சிவகார்த்தியன் மதுரை விமான நிலையத்தில் இருந்து வெளியே வந்துள்ளார்.

விமானத்தில் இருந்து இறங்கி வெளியே வந்த சிவகார்த்திகேயனை பிரபல நடிகரின் இரசிகர்கள் சூழ்ந்து கொண்டு தாக்குவதற்கு முயற்சித்தனர். இந்தத் தாக்குதலில் இருந்து தப்பித்து ஒருவழியாக வெளியேறினார் அவர். இப்படி எல்லாம் நடக்கும் என்று தெரிந்துதானோ என்னவோ சிவகார்த்திகேயனுடன் பாதுகாவலர்களும் உடன் வந்திருந்தனர். அவர்கள் பிரபல நடிகரின் இரசிகர்களைத் தடுத்து சிவகார்த்திகேயனை அங்கிருந்து பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர். இதுகுறித்த வீடியோ காட்சி ஒன்று இணையத்தில் மிக வேகமாகப் பரவி வருகிறது. இந்தச் சம்பவத்தை தொடர்ந்து சிவகார்த்திகேயனுக்கு எதிராக பிரபல நடிகரின் இரசிகர்களும் பிரபல நடிகரின் இரசிகர்கள்மீது கண்டனம் தெரிவித்து, சிவகார்த்திகேயனின் இரசிகர்களும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.


இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள பிரபல நடிகரின் இரசிகர்கள் நற்பணி இயக்கம், இது போன்ற செயல்களை தயவு செய்து செய்யாதீர்கள். அது எமது தலைமைக்கு ஏற்படும் அவமானமாகும். இந்த செயல்களை எங்கள் நற்பணி இயக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது என்று தெரிவித்துள்ளதாம்.

## பேஸ் புக்கில் ரசித்தவை...









கலியுகத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப சாதனங்களின் உதவியுடன் பயணிக்கும் அனுமான்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதிக் குறியீடுகளை அமைக்குமாறு தென்மராட்சி மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி, செப்.22

நாவற்குழிச் சந்தியிலிருந்து பூநகரிக்குச் செல்லும் ஏ–32 வீதியில் வேகக் கட்டுப்பாட்டு குறியீடுகளை அமைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

இந்த வீதி, காப்பெற் வீதியாக மாற்றப்பட்டதையடுத்து தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றன. வீதியில் வேகக் குறியீடுகள் இதுவரை போடப்படாததால் வாகனச் சாரதிகள் அதிகரித்த வேகத்தில் வாகனங்களைச் செலுத்திச் செல்கின்றனர்.

இதனால் தினமும் விபத்துக்கள் இடம்பெறுவதுடன், வீதியைக் கடக்கும் கால்நடைகள் வாகனங்களால் மோதுண்டு சாவடைகின்றன.

இந்த வீதியில் அமைந்துள்ள பாடசாலைகளுக்குப் பெருமளவு மாணவர்கள் சைக்கிள்களிலும், நடந்தும் சென்று வருவதனால் அடிக்கடி விபத்தை எதிர்நோக்கும் அபாயநிலையில் சென்று வருகின்றனர்.

இதனால் ஏ –32 வீதியில் வேகக் கட்டுப்பாட்டுக் குறியீடுகளைப் பொருத்தி உதவுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினரைப் பிரதேச மக்கள் கேட்டுள்ளனர். (ற)

## ஆணொருவரால் தாக்கப்பட்டு தாயும், மகளும் காயம்

மிருசுவில் மன்னன் குறிச்சிப் பகுதியில் ஆணொருவரால் தாக்கப்பட்டு ஒரு தாயும் அவரது மகளும் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதே இடத்தைச் சேர்ந்த சண்முகசுந்தரம் சாந்தநாயகி (வயது–55) அவரது மகளான சண்முகசுந்தரம் சுகன்ஜா (வயது–23) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அண்மைக்காலமாக ஆண்களால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ற)

## ஆசிரிய ஆலோசகர் தெரிவுப் பரீட்சை

வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்தும் ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடங்களுக்கான தெரிவுப் பரீட்சையும் பி.ஐ.சி.ரி.ஈ.சி. மற்றும் சி.ஆர்.சி நிலையங்களுக்கான போதனாசிரியர் பதவிக்கான தெரிவுப் பரீட்சையும் யாழ். மத்திய கல்லூரியில் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (ற–4)

---

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை இராசரத்தினம்



கலட்டி அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இராசரத்தினம் 19.09.2015 சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பிள்ளையாமணியின் அன்புக் கணவரும் ராசாம்பாள், மரகதவல்லி(புஸ்பம்), சற்குணாந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரஜினி(தாதிய உத்தியோகத்தர் - யாழ்போதனா வைத்தியசாலை), ராஜ்குமார்(லண்டன்), ரஞ்சிதமலர் (கனடா), ராகுலன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சண்முக சீலன் (லிங்கம் & CO ,யாழ்ப்பாணம்), சுலோசனா(லண்டன்), பிறேம்குமார் (கனடா), தர்ஷினி(லண்டன்) ஆகியோரின் மாமனாரும் சஷ்டிகன், சுபர்ணா, மானஷி, தணிகன், பிரீனா, பிரீவன், அவிரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22.09.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கலைவாணி மக்கள் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 205 3625

---

சிவமயம்

## 24.04.2015 இல் திருவடிப்பேறு பெற்ற சிவத்தமிழ் வித்தகர் கலாநிதி சிவஸ்ரீ க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்களின் நூற்றாண்டு பிறந்த தினம் (22.09.2015)



அகவை தொண்ணூற்
றொன்பதை அடைந்த
போதும்
ஐயாவின் சிந்தை மிகத்
தெளிந்த நிலையில்
பகலிரவாய் "சிவசிவ"
வென்றோதி இறுதி
பாலருந்தச் தரச்சொல்லிப்
பருகும் போது
சுகமாகத் தான்யோகர்
சுவாமியோடு
சோதிநிலை கண்டுற்றேன்
அஞ்சற்கவென்று
தவமாகப் பெற்றிட்ட
பிள்ளைக் காறுதல்
தயவாகக் கூறிய பின்
சோதியிற் கலந்தார்.

**சோதியிற் கலந்த மகான் ஈழத்துச் சிதம்பர ஆலயக் குரு மரபினர் - காரைநகர் மணிவாசகர் சபை தாபகர் தலைவர், காப்பாளராக விளங்கி தம் வாழ் நாளில் பவளவிழாவைக் கண்டுகளித்த உத்தமர். அகவை தொண்ணூற்றொன்பதில் பவள விழா சிறப்பு மலரையும் ஆசியையும் வழங்கிய சீராளன். ஈழத்துச் சிதம்பரத்தை பெருமையுற வைத்த பெரியோன் காரை மாதாவை உயர் பெற வைத்த உத்தமன். மேன்மைகொள் சைவத்தையும் தமிழையும் தள்ளாத வயதிலும் மேன்மையடையச் செய்த செல்வன் பெருந்தகையாளன் பாதம்போற்று வோம்.**

*வாழ்க அவரின் பெரும் பணிகள்*
*வளர்க அவரின் திருத்தொண்டு*

காரைநகர் மணிவாசகர்சபை
காரைநகர்.

(64807) (14,16,17)

---

## 54 ஆவது நினைவு நாள்

**2015.09.22**

அமரர்

### முகாந்திரம் முதலியார் அ.அத்தியார் JP



மலர்வு 27.08.1887 — நினைவலையில் 22.09.1961

எல்லை பெருக்கும் இறைவன் அருளால்
வளங் கொழிக்கும் செல்வங்கள் நிறைந்து
நல்லவை நடக்கும் நல்ல ஊராம்
நலங்கள் நிறைந்த நீர்வேலிப் பதியில்
எல்லா நலமும் செவ்வனே நடக்க
எண்ணிய இறைவன் உயர்ந்த செயலால்
வல்லவன் அருணாசலம் என்பவர் மகனாய்
வந்தே உதித்தார் அத்தியார் என்பார்

"அத்தி அகம்",
பருத்தித்துறை வீதி, நீர்வேலி.

நினைவு
வம்சக் கொடிகள்
திரு.திருமதி.ந.சிவகுமாரன் குடும்பம்

(64807) (14,16)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 15.05.1945

இறப்பு 02.10.2014

*திதி: 22.09.2015*

எம்மையே நினைத்து எமக்காகவே வாழ்ந்த எங்கள்
அன்புத் தாய்

### அமரர் துரைராசா பவளம்

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்
அனைவரும் போற்ற வாழ்ந்து காட்டிய அன்னையே- நாங்கள்
வையத்துள் வாழ்வாங்கு வாழ- ஓர்
ஒளிமயமான எதிர்காலத்தைக் காட்டிவிட்டு
அணைந்தும் அணையாத தீபமாய் என்றும் எங்களின் இதயத்தில்
சுடர் விட்டுக் கொண்டிருக்கும் குல விளக்கே- அம்மா
நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டொன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டுப் பிரியாது

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.


(64811) (14,16)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### கலைமணி கலையரசன்



தோற்றம் 07.03.1982

மறைவு 22.09.2014

எம் கண்ணீர் இன்னும் காயவில்லை மகனே!
நீர் விண்ணக வாழ்வை சுவீகரித்து காலம் ஓடி ஆண்டொன்று
ஆனதுவோ எங்கள் குரல் கேட்கவில்லையோ மகனே உனது
குரல் எம் செவியெங்கும் , உனது தங்கமுகம்
எம் நெஞ்ச மெங்கும் கனக்கின்றதே! உன்ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

நெல்லியடி வடக்கு,
தேவரையாளி,
கரவெட்டி.

[62771] [12.15 16]

அப்பா, அம்மா மற்றும்
சகோதரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

சி.சிறிபத்மராஜா

தோற்றம் 03.12.1955

மறைவு 12.10.2013

திதி: 22.09.2015

ஆண்டுகள் இரண்டு ஆயினும்
உன் அன்பு முகம் மறக்கவில்லை
என்றும் உம் நினைவாய் இருந்தே
நாம் தவிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

ஸ்ரீ மஹால்
நவிண்டில்,
கரணவாய் வடக்கு, கரவெட்டி.

(58542) (14.16)

மனைவி, மகள்.

## பரிசளிப்பு நிகழ்வும் நிறுவுநர் தின நிகழ்வும்

யாழ்ப்பாணம், செப். 22

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நிறுவுநர் நாள், பரிசளிப்பு விழா நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன. முற்பகல் 9மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராசா கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் நிறுவுநர் நினைவுப் பேருரையை கல்லூரி லண்டன் பழைய மாணவர் சங்கத் தலைவர் மாணிக்கவாசகர் திருவாசகம் நிகழ்த்தவுள்ளார். அனைவரையும் குறித்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கல்லூரிச் சமூகத்தினர் தெரிவித்துள்ள னர்.

(ற-ரி5)

## சித்தமருத்துவக் கண்காட்சி நாளை மறுதினம் ஆரம்பம்

அச்சுவேலி, செப்.22

வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் நடத்தும் சித்த மருத்துவ மாநாடும், கண்காட்சியும் 2015, கிளிநொச்சி மூலிகைக் கிராமம் கல்மடு நகரில் 24 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 26 ஆம்திகதிசனிக்கிழமைவரை மூன்று தினங்களுக்கு நடைபெற வுள்ளது.

சித்த மருத்துவத்தின் ஊடாக சுகாதார மேம்பாடு என்னும் தொனிப் பொருளில் நடைபெறும் சித்த மருத்துவ, மாநாட்டுக் கண்காட்சியை வடக்கு மாகாணம் சுகாதார சுதேச மருத்துவ சமூக சேவைகள் புனர்வாழ்வு, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், சுகாதாரப் போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சர் வைத்திய கலாநிதி ராஜித சேனரத்ன, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் எச்.எம்.சீ.எஸ். பளிகக்கார ஆகியோர் விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளனர். ஆரம்ப வைபவம் 24 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

24 ஆம் திகதி வியாழக்கிழமை மாநாடு, கண்காட்சி என்பவற்றின் ஆரம்ப நிகழ்வும், கண்காட்சியைக் காட்சிப்படுத்தல், பார்வையிடலும் நடைபெறும்.

25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரண்டாம் நாள் தொழில்நுட்ப அமர்வு, தற்கால சுகாதார சேவைகளைப் பூர்த்தி செய்வதில் சித்தர்தமிழர் பாரம்பரிய மருத்துவங்கள் எவ்வாறு பங்களிப்புச் செய்யமுடியும், சித்தமருத்துவமானது தற்கால சுகாதார சேவைகளைப் பூர்த்தி செய்வதில் எதிர்நோக்கும் சவால்களும் அவற்றுக்கான தீர்வுகளும் என்ற தலைப்புக்களில் ஆய்வு மாநாடு நடைபெறும். மூன்றாம் நாள் 26 ஆம் திகதி சனிக் கிழமை தொழில்நுட்ப அமர்வு சித்த பாரம்பரிய மருத்துவங்கள் சர்வதேச தரத்தை எட்டுவதில் ஆய்வுகளின் பங்கு என்ற தலைப்பில் ஆய்வு அரங்கும்பரிசில்வழங்கல்நிகழ்வும்நடைபெறும் எனஅறிவிக்கப்பட்டுள்ளது. (ற-11)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தங்கவேலு ஜெயசுதன்

(அருமை)

பிறப்பு 05.02.1978

இறப்பு 23.08.2015

23.08.2015 அன்று கற்கோவளம் கடற்பரப்பில் மின்னல் தாக்கி உயிரிழந்த எமது குடும்ப தலைவர் தங்கவேலு ஜெயசுதன் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (22.09.2015) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும். மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

கற்கோவளம்,
பருத்தித்துறை.

[62771] [12.15 16]

மனைவி ஜெ.ஜெயந்தினி

31 ஆம் நாள் நினைவலைகள்

அமரர்

நாகலிங்கம் இரத்தினம்

உதிப்பு 1927.03.05

உதிர்வு 2015.08.23



பாசத்துடன் எம்மை வளர்த்த அப்பா
நீங்கள் இல்லாமல் எங்கள் வாழ்வு
நீர்க்குமிழி ஆனதையா
எங்களை நிர்க்கதியாய் தவிக்கவிட்டு
எங்கு ஓடி மறைந்துவிட்டீர்கள்
உங்களை இழந்த எங்களுக்கு
அமைதி உண்டோ இவ்வுலகில்

ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி

[62884][12.15 16]

குடும்பத்தினர்

## இரத்ததான நிகழ்வு

யாழ்.சத்தியசாயி நிலையத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. முற்பகல் 9மணி முதல் நண்பகல் 12 மணிவரை யாழ்.பல்கலைக் கழகம் முன்பாக அமைந்துள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு சத்திய சாயி நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.(ற-ரி5)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்

## சரவணமுத்து கற்பகநாதன்



தோற்றம் 1946.09.22

மறைவு 2015.08.23

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் எங்கள் வாழ்வின் வழிகாட்டியாக இருந்து எம்மை விட்டுப் பிரிந்த குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் பத்திரிகையின் ஊடாக கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசியின் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (22.09.2015) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 60, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
(சிறி மாதவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தினப் போட்டிகளில் சென்.ஜோன்ஸ், ஸ்கந்தா தொடர்ந்து முதலிடம்

வலி.வடக்கு, செப்.22

அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே தேசிய மட்டத்தில் நடைபெறும் தமிழ்த் தினப் போட்டிகளில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி என்பவை ஹற்றிக் சாதனைகளை நிலைநாட்டி தொடர் சாதனையாளர்களாக மாறியுள்ளார்கள்.

கடந்த இரண்டு நாள்களாக மட்டக்களப்பு சர்வானந்தா வித்தியாலயத்தில் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான தமிழ்த் தினப் போட்டிகள் நடை பெற்று வருகின்றன. அதில் யாழ்ப்பாணம், சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் வில்லுப்பாட்டில் நான்காவது தடவையாகவும் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை புரிந்துள்ளதுடன், நாட்டார் பாடல் நிகழ்வில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

அதேவேளை, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள், நாடகப் போட்டியில் மூன்றாவது தடவையாகவும் வெற்றி பெற்று ஹற்றிக் சாதனை படைத்துள்ளனர். (ற–86)

# போதையில் சாரத்தியம்: ஒரு வருடத்துக்கு வாகனம் செலுத்தத் தடை

யாழ்ப்பாணம், செப். 22



மதுபோதையில் வாகனம் செலுத்திய இரண்டு பேரின் சாரதி அனுமதிப்பத்திரங்களை ஒருவருடத்துக்கு இடைநிறுத்தி வைத்த கிளி நொச்சி நீதிமன்று அவர்களுக்கு 2 மாத கடூழியச் சிறையும் விதித்துள்ளது.

குறித்த இரண்டு பேரும், மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கடந்த 18 ஆம் திகதி கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் வழக்கும் தொடரப்பட்டது. நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அதன்போது குறித்த இருவரும் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதனால் அவர்களுக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதன்படி அவர்களது சாரதி அனுமதிப்பத்திரங்களை பறிமுதல் செய்து, ஒரு வருடத்துக்குத் தடுத்து வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. அத்துடன் அந்த இருவருக்கும் 2 மாதங்கள் சிறைத் தண்டனையும் விதித்ததோடு தலா 7 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதித்துள்ளது.

அதனால் மது போதையில் வாகனம் செலுத்திய குறித்த 2 பேரும் ஒரு வருடத்துக்கு வாகனம் செலுத்த முடியாதநிலையை எதிர் கொண்டுள்ளனர். (ற–4, ரி3)


**விதை நெல் விற்பனைக்கு**

விவசாயப் பகுதியினரால் சுத்திகரிக்கப்பட்டு சிபார்சு செய்து அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட்ட B.G.406 ரக விதை நெல் விற்பனைக்குண்டு.

**தொடர்பு : 077 659 2044**



**தேசிய மட்ட சாதனையாளர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம் தமிழ்மொழித்தினம் - 2015**

**யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்**




செல்வி **தேவஅமிர்தா நிக்சன் ரஞ்சித்குமார்**
பிரிவு ஒன்றுக்கான பாவோதல். தேசிய நிலை 1

செல்வன் **சதீஸ் காருண்யன்**
பிரிவு ஒன்றுக்கான வாசிப்பு. தேசிய நிலை 2

வாழ்துபவர்கள்: **அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்.**


**Central for Open and Distance Learning (CODL), University Of Jaffna, Srilanka**

**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் , இலங்கை**

**வணிகமாணி பட்டப்படிப்பு 2013/2014 (வெளிவாரி) (புதிய பாடத்திட்டம்)**

**Bachelor of Commerce Degree Programme - 2013/2014 (Extrnal) (New Syllabus) Semester Based Course Unit system and Grade Point Average Evaluation**

**புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை - 2013**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த நான்கு வருட கால வணிகமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான தெரிவுப் பரீட்சைக்கு, விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான இறுதித்திகதி 25.09.2015 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை www.jfn.ac.lk/codl என்னும் இணைய முகவரியிலும், 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடனும் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்.
16.09.2015

(19319)(14.16.17)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் கேள்வி அறிவித்தல் - 2015

கீழ் குறிப்பிடப்படும் சபைக் கடை 2015.10.15ஆம் திகதி தொடக்கம் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 2015.09.22– 2015.10.06 பி.ப 03.00 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2015.10.07 ந.ப 12.00 மணிவரை

கேள்விதிறக்கும் திகதி :- 2015.10.07 பி.ப 02.30 மணி

படிவம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் வதிவிட சான்றிதழ், அடையாள அட்டையின் நிழற் படப் பிரதி என்பவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஏனைய விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

| தொ. இல | க்டை விவரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (உரிமத் தொகை VAT, NBT நீங்கலாக) | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது) | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 01 | வட்டுக்கோட்டை நவீன சந்தைக் கடை - I | 750.00 | 90,000.00 | 5,000.00 | 1,000.00 |

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை,
சுழிபுரம்.
22.09.2015

திருமதி.சா.உருத்திரசம்பவன்,
செயலாளர்,
வலிமேற்கு பிரதேசசபை
சுழிபுரம்.

(C/19316)(10.17)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2015

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01ஆம் திகதிமுதல் வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக் கமையவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் NP/05/01/US/Va.We. PS/17 இலக்க 2015.07.07ஆம் திகதிய கடிதத்திற்கமைவாகவும் கீழ்க்குறிப்பிடப் படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆள் சேர்ப்பு திட்டத்தின் கீழ் தகைமை யுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள் / தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடகாலத் தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தர மானதும், ஓய் வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி கடந்த 05 வருடங்கள் வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிடசான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)
5. தொழில்நுட்பம் சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**தெரிவுசெய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா முப்பதைச் செலுத்தி விண்ணப்ப படிவத்தை பெற்று, பூரணப்படுத்தி தகைமைகளுக்காதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
2. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப் படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு **செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
4. தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்படல் வேண்டும்.
5. ஆட்சேர்ப்பு திட்டவிதி முறைகளின் படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்தின் பின்னராகவோ, நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி**

**2015.10.05ஆம்** திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**பதவிகள்**

| இல | பதவிகள் | | வெற்றிடம் |
|---|---|---|---|
| 01 | காரியாலய காரியசகாயர் | தரம் 111 | 01 |
| 02 | நூலக பரிசாரகர் | தரம் 111 | 01 |

**கல்வித் தகைமை**

கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் இரண்டு திறமைச் சித்திகளுடன் **ஆறு (06)** பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் **ஒரே அமர்வில் ஐந்து (05)** பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் மேலதிக தகைமைகள், அனுபவம் என்பன விசேட தகைமைகளாகக் கருத்திற் கொள்ளப்படும்.

**சம்பளம்**

2007.08.24ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.**06/2006(IV)** இற்கமைய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் **PL-1-2006-A** ஆகும்.

2015.09.22
திகதி

திருமதி.சா.உருத்திரசம்பவன்
செயலாளர்,
வலிமேற்குபிரதேச சபை,
சுழிபுரம்.

(C/19317)(10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்களை கட்டுப்படுத்தும் நவீன அப்பிளிக்கேஷன்





ஸ்மார்ட் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியானது, மனிதர்களின் ஆரோக்கியத்தை அதிகரிக்கும் ஸ்மார்ட் கைப்பட்டிகள் வரை எட்டிவிட்டது. இவ்வாறிருக்கையில், மேலும் ஒருபடி முன்னேறி ஸ்மார்ட் கடிகாரத்தின் உதவியுடன் வாகனங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய அப்பிளிக்கேஷன் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

வைபர் ஸ்மார்ட் ஸ்ரார்ட் (Viper Smart Start) 4.0 எனும் இந்த அப்பிளிக்கேஷன், அன்ரோயிட் மற்றும் அப்பிளின் iOS கைக் கடிகாரங்கள் மற்றும் மொபைல் சாதனங்களில் நிறுவி பயன்படத்தக் கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

CDMA/3G இணையத் தொழில்நுட்பத்தில் செயற்படும் இதன் ஊடாக BMW, VW மற்றும் Volvo ஆகிய நிறுவனங்கள் அறிமுகம் செய்யும் வாகனங்களைக் கட்டுப்படுத்த முடியும்.

# மனிதர்களை மறைக்கும் ஆடைகள்: விஞ்ஞானிகள் சாதனை

உடம்பில் அணிந்தால் மனிதர்களை மறைக்கும் ஆடைகளை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இன்விசிபிளிற்றி குளோக் (invisibility cloak) என அழைக்கப்படும் இந்த ஆடை குறித்து அமெரிக்கத்துறை பொருள்கள் விஞ்ஞானங்களும் பிரிவு தலைவர் விஞ்ஞானி ஷியாங் சாங் கூறியதாவது:- தற்போது உருவாக்கப்பட்டுள்ள இந்த மறைக்கும் ஆடை 36 சதுர மில்லிமீற்றர் அளவுள்ள பொருளை மட்டுமே மறைக்கும்.



இந்த கிளாக் 80 நானோ மீற்றர் தடிமன் கொண்டது. இந்த ஆடை பொருளின் மேற்பரப்பில் விழும் ஒளியை சிதற செய்து ஒளி அலைகள் ஆப்டிகல் மூலம் கண்ணுக்குத் தெரியாதவாறு செய்கிறது.


இதைக்கொண்டு நகரும் உயிருள்ளவற்றை மறைக்க பயன்படுத்தி னால், அதனை எளிதாக பார்த்துவிட முடியும் . நுண்ணோக்கி மூலம் உரு வாக்கப்பட்ட மெல்லிய தங்க இழையால் ஆன நானோ ஆன்ட்டனா சூரியக் கதிரை சோலார் பேனலில் சேமிக் கின்றது.

பின்னர் இது ஒளிக்கற்றைகளை சிதறடிப்பதன் மூலம், மனித கண்களுக்கு தென்படாமல் போகிறது.ஆனால் இந்த தொழில்நுட்பத்தை நடைமுறைக்கு வர ஐந்து முதல் 10 ஆண்டுகள் ஆகலாம். நாங்கள் அடிப்படை ஆடைகளையே வடிவமைத்து உள்ளோம் என் றும் இன்னும் அதிக பணிகள் உள்ளன எனக் கூறியுள்ளனர்.

# சிறுநீர்ப் பாதையில் தொற்றுநோயா? குணப்படுத்த புதிய சிகிச்சை முறை


சிறுநீர்ப் பாதையில் ஏற்படும் தொற்றுநோய்களை விரைவாகக் குணப்படுத்தக்கூடிய வகையில் USB ஸ்டிக் போன்ற சாதனத்தை கிழக்கு அங்கிளியா (East Anglia) பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இத் தகவலானது சான்ஸ் டியாகோ (San Diego) இல் இடம்பெற்ற மருத்துவ மாநாட்டில் வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சாதனமானது நுண்ணுயிர்க் கொல்லிகளைக் கொண்ட பரம்பரை அலகுகளை (DNA) வரிசையான முறையில் சிறுநீர்ப் பாதைகளினூடு செலுத்தக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள் ளது. மேலும் நுண்ணுயிர்க் கொல்லிகளின் எதிர்ப்புத் தன்மையையும் இச்சாதனம் கண்டறியக் கூடியதாக இருக்கின்றது என கிழக்கு அங்கிளியா (East Anglia) பல்கலைக் கழகத்தின் பேராசிரியரான டேவிட் லிவர்மோர் (David Livermore) என்பவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை-ஐரோப்பிய நாடுகளில் ஆண்டுதோறும் 400,000 பேர் சிறுநீரகத் தொற்றுக்கு உள்ளாவதாகவும், இவர்களில் 25,000 பேர் சிகிச்சை பயனின்றி உயிரிழப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# அமைச்சரவைப் பாதுகாப்பு வாகன சாரதிகள் விதி மீறினால் அறிவிக்குக

***அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு***



கொழும்பு, செப். 22

அமைச்சரவைப் பாதுகாப்பு வாகனங்களின் சாரதிகள் வீதிப் போக்குவரத்துச் சட்டங்களை மீறிச் சட்டத்திலிருந்து தப்பிக்க முயன்றால் அது குறித்து போக்குவரத்து அமைச்சுக்கோ அல்லது தமக்கோ தெரியப்படுத்துமாறு போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அறிவித்துள்ளார்.

அமைச்சரவைப் பாதுகாப்பு வாகனங்களின் சாரதிகள் சிலர் வீதிப் போக்குவரத்து விதிகளை மீறி நடந்து கொண்ட பின்னர் அது பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அழுத்தங்களை விடுப்பதால் அந்த விசாரணைகள் முறைப்படியாக இடம்பெறுவதில்லை எனத் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

அமைச்சரவைப் பாதுகாப்பு வாகனங்களின் சாரதிகள் தொடர்பாகச் குறித்த அமைச்சர்களுக்கு அறிவுறுத்தவும், அவர்களுக்கு எதிராகச் சட்டத்தை அச்சொட்டாக நிறைவேற்றுமாறு பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தார்.

0112688718, 0112687105,0112669307 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக இந்த முறைப்பாடுகளைப் போக்குவரத்து அமைச்சுக்கு முன்வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-22)

# மருதடி விநாயகர் ஆலய கட்டுப்பாடுகளில் தளர்வு

யாழ்ப்பாணம், செப்.22

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் நிர்வாகம் பல வருடங்களுக்குப் பின் கைமாறியதை அடுத்து கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக ஆலயத்துக்குச் செல்லும் அடியார்களுக்கு ஆடைகள் அணிவது சம்பந்தமாக விதிக்கப்பட்டிருந்த கட்டுப் பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. அதனால் ஆலயத்துக்கு வரும் அடியார்களின் (குறிப்பாக பெண்கள்) எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் ஆலயத்தின் வருமானமும் கணிசமான அளவு உயர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் மருதடி விநாயகர் ஆலயம் கடந்த 2004 ஆம் ஆண்டு முற்றாக இடிக்கப்பட்டு இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பக் கலைஞர்களின் உதவியுடன் கருங்கற்களையும் பயன்படுத்திச் சுமார் 30 கோடி ரூபா செலவில் நான்கு பக்கங்களும் கோபுரங்களுடன் அழகாக வடிவமைக்கப்பட்டு கடந்த மார்ச் மாதம் மகாகும்பாபிஷேகமும் அதையடுத்து வருடாந்த உற்சவமும் இடம்பெற்றது.

பல வருடங்களாக ஆலயத்தை வழிநடத்தி வந்த தர்மகர்த்தா சபையினர் மகா கும்பாபிஷேகம் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஆலயத்துக்குச் செல்லும் அடியார்களுக்கு குறிப்பாகப் பெண்களுக்கு ஆடை அணிவது சம்பந்தமாகப் பல கட்டுப்பாடுகளை விதித்திருந்தனர்.

பெண்களின் பாதுகாப்பு உடையாகப் பலராலும் கருதப்பட்டு வரும் சல்வார் அணிந்து ஆலயத்துக்குள் செல்வதற்குத் தடைவிதித்த நிர்வாகம், நீளப்பாவாடை, சேலை அணிய வேண்டும் என்றும் த[illegible] முடி பின்னிக்கட்டப்பட்டிருக்க வேண்டும் என்றும் அறிவித்ததுடன், ஆண்கள் மேலங்கி இன்றி வேட்டி மட்டும் அணிய வேண்டுமென்றும் தெரிவித்தது.

நிர்வாகத்தின் இந்தக் கட்டுப் பாட்டால் ஆலயத்துக்கு வரும் அடியார்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைவடைந்ததுடன் வருமானத்திலும் பாதிப்பும் ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் அரச அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கடந்த 10 தினங்களுக்கு முன்னர் மானிப்பாய் மொமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் 7 பேர் கொண்ட புதிய தர்மகர்த்தா சபையைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது.

இந்தத் தேர்தலின்போது கடந்த தர்மகர்த்தா சபையின் அங்கம் வகித்த மூவருடன் புதிய நான்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து ஆலயத்தின் நிர்வாகம் புதிய உறுப்பினர்கள் அடங்கிய தர்மகர்த்தா சபையிடம் கை மாறியது.

இதையடுத்து கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக ஆலயத்துக்குள்ளே செல்லும் அடியார்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ஆடைக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

இதனால் தற்பொழுது ஆலயத்துக்கு வருகை தரும் அடியார்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் இருப்பதுடன் ஆலயத்துக்குக் கிடைக்கும் வருமானமும் அதிகரித்துள்ளது என்று கூறப்படுகின்றது. (ற-115)

# வேகமாக அதிகரிக்கின்றது வாகனப் பதிவுகள்; சுட்டிக்காட்டும் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

கொழும்பு, செப்.22

கடந்த ஆண்டு முழுவதிலுமாகப் பதிவு செய்யப்பட்டிருந்த முழுமையான வாகனத் தொகைக்குச் சமமாக இந்த ஆண்டின் கடந்த எட்டரை மாதங்களுள் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதேவேளை, தற்போது வாகனப் பதிவுகள் வேகமாக அதிகரித்து வருகின்றன என்று அந்தத் திணைக்களம் தெரிவிக்கிறது.

கடந்த ஆண்டு முழுவதிலுமாக 4 லட்சத்து 29 ஆயிரத்து 556 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, இந்த ஆண்டில் இதுவரையிலும் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களில் தொகை 4 லட்சத்து 27 ஆயிரத்து 808 ஆகும். இவற்றுள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோக்களே பெருந்தொகைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் இந்த எட்டரை மாதகாலத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களில் மோட்டார் சைக்கிள்கள் 50 வீதமும்,ஓட்டோக்கள் 26 வீதமும் ஆகும். (ற-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GATEWAY TECH

## General English
*for School Leavers*

பாடசாலைக் கல்வியை முடித்து உயர் கல்வி வாய்ப்புக்களை எதிர்பார்த்திருப்பவர்களும்,
அரச தனியார் துறைகளில் வேலை வாய்ப்புக்களை எதிர்பார்த்திருப்பவர்களும்
இக் கற்கை நெறியில் அதிக பயன்பாட்டைப் பெறுவர்.
ஏற்கனவே அரச/தனியார் துறைகளில் தொழில் புரிவோரும்
இக் கற்கை நெறியில் குழுவாகவோ அல்லது தனியாகவோ இணைந்து
அலுவலக தேவைகளுக்கான ஆங்கிலத்தை கற்க முடியும்.

* நவீன முறை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுடன் வகுப்புகள் நடைபெறும்
* பேச்சு ஆங்கிலத்தை முன்னிலைப்படுத்திய பாடத்திட்டம்.
* 6 மாத கால கற்கை நெறி
* வார, வார இறுதி நாள் வகுப்புக்களும் இடம்பெறும்.

## General Sinhala
*for School Leavers*

மேற்படிப்பிற்காக தலைநகர் செல்லவிருக்கும் மாணவர்களும்,
வேலை வாய்ப்புகளை எதிர்பார்த்திருப்பவர்களும்,
ஏற்கனவே தொழில் புரிபவர்களும் தமது சிங்கள மொழி தேர்ச்சியை
வளர்த்துக்கொள்ளக்கூடிய வகையிலான கற்கை நெறி.

* இலகுவாக கற்கக்கூடிய வகையில் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட பாடவிதானங்களுக்கமைவான கற்கை நெறி.
* 6 மாத கால கற்கை நெறி
* கற்றல் கற்பித்தல் சூழல் மற்றும் செயற்பாடுகள் தனித்துவமானது.
* வார நாட்கள் மாலையிலும், வார இறுதி நாட்கள் காலை, மாலையிலும் இடம்பெறும்.
* இரவு நேர வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்படும்.

## Kids Programme
*for School Childrens*

புலமைப்பரிசில் பரீட்சையை முடித்தவர்களும்,
இரண்டாம் நிலைக் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு
முன்னதாக தமது கணனிக் கையாளுகையை
மெருகேற்றிக் கொள்வதற்கேற்ற வகையில்
பாடநெறிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

* 6-10 வயதிற்கிடைப்பட்ட அனைவரும் கற்று பயன்பெறக்கூடிய வகையில்
* திட்டமிடப்பட்ட பாடவிதானங்களை உள்ளடக்கிய கற்கை நெறி
* விரும்பிய நேரங்களில் கற்பதற்கான வாய்ப்பு

GATEWAY CfiCT
GATEWAY Language Centre
GATEWAY KIDS SCHOOL of COMPUTING

## IELTS

மேற்படிப்பிற்காக வெளிநாடு
செல்ல இருப்பவர்கள்
IELTS பரீட்சைக்கான
தயார்படுத்தல் செய்பவர்கள்
அதிகம் பயன்பெறக்கூடிய
வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

* புள்ளி அடைவுமட்டத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலான பாடவிதானம் பின்பற்றப்படுகிறது.
* 6 மாத கால கற்கை நெறி
* வார நாட்கள்- மாலை
* வார இறுதி நாட்கள் காலை, மாலை

## Microsoft Office
*for Senior Citizens*

கணனிப் பாவனையைப் பழக விரும்புகின்ற
வயது வந்தவர்கள்/முதியவர்கள்
பயன்பெறக் கூடிய வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட கற்கை நெறி.

* Skype, Email, Internet ஆகியவற்றை பயன்படுத்தக்கூடிய வகையிலான செயன்முறைப் பயிற்சிகள் வழங்கப்படும்.
* அரச/தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் மேற்படி பயிற்சி தேவைப்படுபவர்களும் இக் கற்கை நெறியில் பங்குபற்றலாம்
* பிரத்தியேகமான வகுப்புக்கள் இடம்பெறும்
* விரும்பிய நேரசூசியை அமைத்துக் கொள்ளலாம்

## Microsoft Office
*for Job Seekers*

மேற்படிப்பு, தொழில் வாய்ப்பு போன்றவற்றில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள
இருப்பவர்களுக்கு MS Office பயிற்சியின் முழுமையான
பயன்பாடுகளை உபயோகப்படுத்தத் தெரிந்திருத்தல் அவசியம்.
சாதாரண தட்டச்சு செய்தலில் இருந்து MS Office இன்
முழுமையான பயன்பாட்டையும் தெரிந்து பழகிக் கொள்ளக்கூடிய கற்கைநெறி.

* பிரத்தியேக வகுப்புகள்
* விரும்பிய நேர சூசி

**மேற்படி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை பின்வரும் முகவரிகளில் பெற்றுக்கொள்ளலாம்**

**Head Office**
# 39, College Road,
Neeraviady,Jaffna

**Hotline: 021 493 6666**

Tel: 021 492 7456
Fax: 021 221 7780

Email: gatewayjfn@sltnet.lk
Web: www.gatewayworldwide.com

**Branches**

Nelliady Branch:
*#55, Point Pedro Road, Nelliady.*
*021 492 7457*

Chavakachcheri Branch:
*#1, New Market Building, Chavakachcheri.*
*021 492 7432*

Kilinochchi Branch
*Karadippokku Junction, A9 Road, Kilinochchi.*
*021 492 7454*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நேற்றுமுன்தினம் சீனாவின் பீஜிங் நகரில் சர்வதேச மரதன் ஓட்டம் நடைபெற்றது. இதில் 30ஆயிரம் பேர் பங்குபற்றியிருந்தனர். இந்தப் போட்டி மறைந்த தலைவர் மாவோ சேதுங் உருவப்படத்துக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டது. (த–ரி4)

# வெற்றிபெறும் வேளையில் உயிரிழந்த வீராங்கனை

## மரதன் ஓட்டப் பந்தயத்தில் நிகழ்ந்த சோகம்



ஓட்டாவா.செப்.22

கனடா நாட்டில் நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் பங்கேற்ற பெண் ஒருவர் வெற்றிபெறு வதற் குச் சில நிமிடங்களுக்கு முன்னதாக திடீர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மொன்றியல் மாகாணத்தில் நேற்று முன்தினம் காலை 25ஆவது மரதன் ஓட்டப்போட்டி தொடங்கியுள்ளது. இந்த விளையாட்டுப் போட்டியில் 53 நாடுகளைச் சேர்ந்த சுமார் 35 ஆயிரம் வீரர்கள் உற்சாகத்துடன் பங்கேற்றுள்ளனர்.

இந்த நிலையில், ஓட்டப்போட்டி தொடங்கிய நிலையில், அமெரிக்காவைச் சேர்ந்த 34 வயதான பெயர் வெளியிடப்படாத பெண் ஒருவரும் பங்கேற்று ஓடியுள்ளார். மரதன் ஓட்டம் நிறைவுபெறும் தறுவாயில், வெற்றி இலக்கை நோக்கி நெருங்கிக்கொண்டிருந்த அந்த பெண்ணுக்குத் திடீர் மாரடைப்பு ஏற்பட்டுச் சுருண்டு விழுந்தார். உடனடியாக மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டு அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால், சிகிச்சை பயனின்றி அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இதேபோல், இரண்டாவது நிலையில் ஓடிவந்த 40 வயதான நபர் ஒருவருக்கும் திடீர் மாரடைப்பு ஏற்பட்டு, தற்போது கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். சுமார் 20 வீரர்களுக்கு திடீர் மயக்கம் ஏற்பட்டதால், இவர்களில் 16 வீரர்கள் தற்போது மருத்து வமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

நேற்று நடந்த மரதன் ஓட்டத்தில் கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்த நிக்கோலஸ் பெர்ராட் என்பவர் 2 மணி நேரம், 26 நிமிடங்கள் மற்றும் 42 நொடிகளில் போட்டியை நிறைவு செய்து வெற்றி பெற்றுள்ளார். (த–ரி4)

# ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் சேர இந்துப் பெண் முயற்சி

## இந்திய தேசிய பாதுகாப்பு உளவுத்துறையினர் தகவல்



புதுடில்லி, செப்.22

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் சேரும் நோக்கத்தில் டில்லியைச் சேர்ந்த இந்து இளம்பெண் சிரியாவுக்குச் செல்லும் முயற்சியை அவரின் தந்தை முறியடித்தமை தொடர்பான அதிர்ச்சித் தகவல் தேசிய பாதுகாப்பு உளவுத் துறை மூலம் வெளியாகியுள்ளது.

டில்லியைச் சேர்ந்த சுமார் 20 வயது மதிக்கத்தக்க அந்த இந்துப் பெண்,மேற்படிப்புக்காக ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளார். அங்கு சென்றவுடன், அவரது நடவடிக்கையில் சமீப காலமாக பெரிய மாற்றம் ஏற்பட்டமை அந்தப் பெண்ணின் தந்தையான ஓய்வு பெற்ற இராணுவ உயரதிகாரிக்குத் தெரியவந்தது. இதையடுத்து, அவரது கணினிகளை ஆய்வுசெய்த போது, ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்துக்காக ஆட்சேர்க்கும் ஒரு கும்பலுடன் தொடர்பு வைத்திருந்த தனது மகள், சிரியாவுக்கு புறப்பட்டுச் செல்ல ஏற்பாடு செய்து வருவதை அறிந்து அவர்திடுக்கிட்டார்.

உடனடியாக, இந்தியத் தேசியப் பாதுகாப்பு உளவுத்துறை அதிகாரிகளுக்கு தகவல் அளித்து, தனது மகளின் முயற்சியைத் தடுத்து, நிறுத் தும்படி அவர் கேட்டுக் கொண்டார். அவரது வேண்டுகோளின் பேரில்அந்தஇளம் பெண்ணைச் சந்தித்த அதிகாரிகள், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் சேருவது என்பது எவ்வளவு அபாயகரமான முடிவு என்பதை அவருக்கு அறிவுறுத்தியுள்ளனர் என சமீபத்தில் தேசிய பாதுகாப்பு உளவுத் துறை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

வேலை செய்வதற்காக ஐக்கிய அரபு அமீரக நாடுகளுக்குச் சென்ற இந்தியர்களில் இருந்து இளைஞர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, சமீபத்தில் அந்த நாடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டதாக செய்திகள் வெளியான நிலையில், ஒரு இந்து இளம்பெண்ணும் அந்த இயக்கத்தில் சேர முயற்சி செய்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (த–ரி4)

# பிடல் காஸ்ரோவை சந்தித்தார் பாப்பரசர்



கவானா.செப்.22

கியூபா சென்றுள்ள பாப்பரசர் பிரான்சிஸ் அந்த நாட்டின் விடுதலை வீரர் பிடல் காஸ்ரோவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

பாப்பரசராகப் பதவியேற்ற பிறகு, எதிரிகளாக இருந்த அமெரிக்காவும் கியூபாவும் உறவுகளை மேம்படுத்திக்கொள்ள வலியுறுத்தி பாப்பரசர் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதன் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் முன்னேற்றம் ஏற்பட்டது. இந்நிலையில் அமெரிக்கா மற்றும் கியூபாவுக்கு பத்து நாள்கள் பயணம் மேற்கொண்டுள்ள பாப்பரசர் பிரான்சிஸ் நேற்று, கியூபா தலைநகர் ஹவானாவில் உரையாற்றினார். அப்போது, அமெரிக்கா மற்றும் கியூபா சமாதான நிலைப்பாட்டை மேற்கொள்ளவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேபோல் ஹவானாவின் புரட்சிச் சதுக்கத்தில் நடந்த கூட்டத்தில் பங்கேற்ற பாப்பரசர், இரு நாடுகளும் நெருக்கமாகி வரும் இந்த நேரத்தில் மக்களுக்காகச் சேவைகள் செய்ய வேண்டும் என்றும் சித்தாந்தம் சார்ந்ததாகச் சேவைகள் இருக்க வேண்டும் என்றும்,கியூபா மக்களைக் கேட்டுக் கொண்டார்.

பின்னர் ஜனாதிபதி இல்லத்தில் வசிக்கும் கியூபா விடுதலை வீரர் பிடல் காஸ்ரோவை சந்தித்துக் கைகுலுக்கினார். பின்னர் இருவரும் தற்போதைய நிலவரங்கள் மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின்போது பாப்பரசர் பிரான்சிஸ் தான் கொண்டுவந்திருந்த புத்தகத்தை காஸ்ரோவுக்கு அன்பளிப்பாக வழங்கினார். (த–ரி4)

# செவ்வாயில் நதிகளின் தடயம்

கலிபோர்னியா. செப். 22

செவ்வாயில் நதிகள் ஓடியதற்கான தடயங்கள் உள்ளன. ஆனால் தற்போது அங்கு தண்ணீர் இல்லை. எனினும் செவ்வாயின் வடதுருவப் பகுதியில் நிலத்துக்கு அடியில் பனிக்கட்டிப் படிவங்கள் உறைந்திருப்பதை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இந்த நிலையில் செவ்வாயில் மனிதன் குடியேறுவதற்கு ஏற்ற வீடுகளை 3டி வடிவில் உருவாக்கும் போட்டியை நாஸா அண்மையில் நடத்தியது.

இதனிடையே பிரான்ஸைச் சேர்ந்த பேபுலஸ் என்ற நிறுவனம் செவ்வாய்க் கிரகத்தில் குடியேறுவதற்கு ஏற்ற வகையில் அதிநவீன வீட்டின் 3டி மாதிரியை வெளியிட்டுள்ளது. ஆர்டிக் பகுதிகளில் வாழும் எஸ்கிமோக்களின் இக்லூ வீட்டின் மாதிரியில் இந்த வீடு வடிவமைக்கப் பட்டுள்ளது. (த–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாய்கள், பூனைகளைச் செல்லப்பிராணிகளாக வளர்த்த காலம்போய், இப்போது பல்லிகள் , பாம்புகளை வளர்க்கும் காலம் மனிதர்கள் மத்தியில் உருவாகி வருகின்றது . (த-ரி4)

# ஈபிள் கோபுரத்தில் ஏறிய தீவிரவாதிகள்

பரிஸ், செப்.22

பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் உள்ள ஈபிள் கோபுரத்தில் தீவிரவாதிகள் ஏறியதாக வந்த இரகசியத் தகவலையடுத்து நேற்றுமுன்தினம் காலை அந்தப் பகுதியில் உள்ள மக்களை வெளியேற்றிவிட்டு, கோபுரத்தை மூடப் பொலிஸார் உத்தரவிட்ட நிலையில், தற்போது மீண்டும் பொதுமக்கள் பார்வைக்காகஈபிள்கோபுரம் திறந்து விடப்பட்டுள்ளது.



நேற்று முன்தினம் காலை 5.30 மணியளவில் 3 தீவிரவாதிகள் கோபுரத்தின் மீது ஏறியதாகவும், சந்தேகத்துக்குரிய நபர் ஒருவர் மர்மமான கைப்பையுடன் ஈபிள் கோபுரம் உள்ள பகுதியில் வலம் வருவதாகவும் ஈபிள் கோபுரத்தில் பாதுகாப்புப் பணியில் உள்ள பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து, உடனடியாக அங்கிருந்த மக்களைப் பொலிஸார் வெளியேற்றினர். மேலும், சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும் நுழைவுச்சீட்டு வழங்கும் அறைகளையும் பொலிசார் மூடினர். காலை 9 மணியளவில் ஈபிள் கோபுரத்தை மூடிய பொலிஸார், ஈபிள் கோபுரத்தைச் சுற்றி ஹெலிகொப்டரில் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டு சந்தேகத்துக்குரிய நபரைத் தேடி வந்தனர். மாலை வரை மர்ம நபர்கள் குறித்துத் தகவல் எதுவும் தெரியாத நிலையில், இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். கடந்த சில வருடங்களாக அல்-கொய்தா, ஐ.எஸ். உள்ளிட்ட தீவிரவாத இயக்கங்களால் ஈபிள் கோபுரத்துக்கு அடிக்கடி தாக்குதல் குறித்த மிரட்டல் விடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)


# நேபாளத்தில் வன்முறையால் 40 பேர் சாவு

## மதச்சார்பற்ற குடியரசு என்ற அறிவிப்புக்கு கடும் எதிர்ப்பு

காத்மண்டு , செப்.22

மதச்சார்பற்ற குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேபாளத்தில் நடக்கும் வன்முறைகளில் இதுவரை 40 பேர் சாவடைந்துள்ளனர்.

நேபாளத்தில் நேற்றுமுன்தினம் முதல் புதிய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இதையடுத்து, இதுவரை உலகின் ஒரே இந்து நாடாக இருந்த நேபாளம் மதச்சார்பற்ற நாடாக மாறியுள்ளது. ஒட்டுமொத்த நாடும் 7 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு கூட்டாட்சிக் குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. புதிய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வருவதை .அடுத்து, நேற்று நாடு முழுவதும் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் மாநில எல்லைகளை வரையறை செய்ததில் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகக் கூறிப் பல்வேறு இன மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். நாடாளுமன்றத்தில் இனக் குழுக்களுக்கு தனி இன ஒதுக்கீடு, தனி மாநிலம் உள்ளிட்ட கோரிக்கைகளை அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.



இதனிடையே நேபாளத்தை மீண்டும் இந்து நாடாக அறிவிக்கவேண்டும் எனக் கூறி, இந்து அமைப்புக்கள் வன்முறையில் ஈடுபட்டுள்ளன. இதனால், கடந்த சில வாரங்களாகத் தலைநகர் காத்மண்டு உள்ளிட்ட இடங்களில் வன்முறை வெடித்துள்ளது. வன்முறையாளர்களுக்கும், பாதுகாப்புப் படையினர்களுக்கும் இடையே நடந்த மோதலில் இதுவரை 40 பேர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே நேபாளத்தின் புதிய அரசமைப்புச் சட்டத்துக்கு முக்கிய அண்டை நாடான சீனா வரவேற்பு தெரிவித்துள்ளது. மற்றொரு அன்டை நாடான இந்தியா நேபாளத்தில் நடக்கும் வன்முறைகளுக்கு தனது கவலையை தெரிவித்துள்ளது.

இதனிடையே டில்லியில் உள்ள நேபாளத் தூதரகத்தில் புதிய அரசமைப்பை வரவேற்று, கொண்டாட்டங்கள் நடந்தன. அப்போது செய்தியாளர்களிடம் பேசிய நாட்டுத் தூதுவர் டீப் உபாக்கியாயா மாறியுள்ள தமது நாட்டுக்கு இந்தியாவின் ஆதரவைக் கோரினார். நேபாளத்தில் 239 வருடங்களாக நிலவியுள்ள மன்னர் ஆட்சி முறை 2008ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே வன்முறை அரசியலைக் கைவிட்ட மாவோயிஸ்டுக்கள் இந்திய அரசின் உதவியுடன் ஜனநாயக அரசியலுக்கு மாறினர். இப்போது அங்கு இடதுசாரிகள் பலம் அற்றவற்றவர்களாக திகழ்கின்றனர். புதிய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதை அடுத்து பிரதமர் சுசீல் கொய்ராலா பதவிவிலகி, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான கே.பி.ஹோலி என்பவர் புதிய பிரதமராகபதவிஏற்பார்எனத்தகவல் வெளியாகி வருகிறது. (த-ரி4)

# ராணுவ அமைச்சராகப் பெண்ணை முதல்முறையாக நியமித்தது ஆஸி.

### புதிய பிரதமர் அதிரடி

கான்பரா, செப்.22

ஆஸ்திரேலியாவில், கட்சியில் செல்வாக்கை இழந்ததையடுத்துப் பிரதமர் டோனி அபோட் கடந்த வாரம் பதவியை இழந்தார். புதிய பிரதமராக அவரது அமைச்சரவையில் தகவல் தொடர்பு அமைச்சராக இருந்த டர்ன் புல், கடந்த 15 ஆம் திகதி பதவி ஏற்றார்.



இந்த நிலையில் 21 பேரைக் கொண்ட புதிய அமைச்சரவையை நேற்று அவர் அறிவித்தார். இதில் அவர் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார். இதற்கு முன்பு டோனி அபோட் அமைச்சரவையில் 2 பெண்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தனர். இப்போது டர்ன் புல் அமைச்சரவையில் இந்த எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது.

இராணுவ அமைச்சராக மரிசே பெய்ன் என்ற பெண் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அந்த நாட்டின் முதல் பெண் இராணுவ அமைச்சர் என்ற பெயரைப் பெறுகிறார். முன்னைய அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த பெண்கள் ஜூலி பிஷப்பும், சூசன் லேயும் பதவியைத் தக்க வைத்துக்கொண்டுள்ளனர். மேலும், மிச்செலியா கேஷ், கெல்லி ஓ டேவ்யர் என்ற பெண்களுக்கும் அமைச்சர் பதவிகள் அளிக்கப்பட்டுள்ளன. புதிய அமைச்சர்கள் நேற்றுப் பதவி ஏற்றனர். (த-ரி4)

# சிரிய அகதிச் சிறுவர் சேர்பியாவில் தஞ்சம்

பெல்கிரேட், செப்.22

ஐரோப்பா செல்வதற்காகச் சேர்பியா செல்லும் அகதிச் சிறார்களில் கால்வாசிக்கும் அதிகமானோர் பெரியவர்களின் துணையின்றி தனியாக வருவதாக சிறுவர் பாதுகாப்பு நிதியம் கூறுகிறது.

இந்த வருடத்தில் வந்த 5,000 க்கும் அதிகமான சிறார்கள் பெற்றோரின் துணையின்றித் தனியாக வந்துள்ளதாகவும், அவர்கள் துஷ்பிரயோகத்துக்கும் ஆட்கடத்தலுக்கும் உள்ளாக்கப்படும் ஆபத்து உள்ளது என்றும் அந்த அமைப்பு கூறுகின்றது.



சிரியாவில் போரில் இருந்து தப்பித்து, தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு, விரக்தியடைந்த நிலையில் தினமும் நூற்றுக்கணக்கான சிறார்கள் சேர்பியாவை வந்தடைவதாகவும், அவர்களில் பலருக்கு அவசரமான மருத்துவ உதவி தேவைப்படுவதாகவும் அந்த அமைப்புக் கூறுகின்றது. (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை வெங்கடேசப்பெருமாள் இன்று தேரேறி வருகிறார்



இராசையா ஸ்ரீதரன்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான ஸ்ரீமகா விஷ்ணு மூர்த்தியானவர் தம்மை வழிபாடு இயற்றுகின்ற அடியார்களுக்கு அருள் புரியவென்று வெங்கடேச வரதராஜப் பெருமாள் என்ற நாமத்தோடு எழுந்தருளி வீற்றிருக்கின்ற யாழ்ப்பாணம் வண்ணைப் பெருமாள் கோயில் இன்று ரதோற்சவம் காணுகின்றது.


காத்தல் கடவுளான மகாவிஷ்ணு பூமியிலுள்ள அத்தனை ஜீவராசிகளையும் காத்த ருள் புரிகின்றார். ஆனால் அதே நேரத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கி வந்தால் தாமே திரு அவதாரம் எடுத்து அநியாயங்களையும் அக்கிரமங்களையும், நீதியல்லாத அநீதிச் செயல்களையும், கெட்டனவைகளைவும் அழித்தொழித்தே விடுவார். இது காலம் காலமாக நடைபெற்று வரும் உண்மை.

அந்த வகையில்

இன்று யாழ். வண்ணை பெருமாள் கோயிலில் வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேரேறி வருகிறார். ஸ்ரீமகா விஷ்ணு காத்தல் தொழில் புரிபவர். அவர் தீயவற்றை முற்றாக அழித்தும் விடுவார். உலகில் நல்லன நிகழவும் நன்மைகள் ஓங்கவும் செய்கின்ற பெருமாளின் திவ்விய பேரருட் கருணைக்கு எல்லையே இல்லை.

பெருமாள் ஆனந்தக் கோலாகல அலங் காரத்துடன் அங்கமெல்லாம் தங்கம் மின்னிப் பிரகாசிக்க, தமது அருட் சக்திகளான ஸ்ரீதேவி, பூமிதேவி சகிதம் அழகிய சித்திரத் தேரில் இன்று ஆரோகணிக்கின்றார். அடியார்கள் புடைசூழ, வேதமந்திரம் ஒலிக்க , ஊர்கூடி தேர்வடம் பிடித்திழுக்கும் அற்புதக் காட்சி பக்தி பூர்வமானது.

இந்தத் திவ்விய அருட்காட்சியை இன்று காலை வண்ணையம் பதியிலே காணலாம். அன்பர்கள் அனைவரும் திரண்டு வந்து பெருமாளைச் சிந்தித்து வந்தித்து சேவித்து அருள் பெற்றுய்ய அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.



## தமிழ் நெறியில்இடம்பெற வேண்டும் திருமண நிகழ்வுகள்

எமது பழைய மரபு, எமது பண்பாடு, பகுத்தறிவு, இன நலம் என்பவற்றைப் பாதுகாத்துப் போற்றும் வகையிலே இன்று இந்தத் திருமணம் தமிழ் நெறியில் நடை பெறுகின்றது. முற்றிலும் தமிழையும் தமிழ் நெறியையும் தமிழ் மறைத் திருக்குறளையும், திருமுறையையும் கொண்டு நிகழ்த்தப் படுகின்றது.

இது மக்கள் பெற்றோர், சான்றோர் ஆகியோரை முதன்மைப்படுத்தி நிகழ்த்தப்படுகின்றது. எனவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் திருமணங்களைத் தமிழ் நெறியில் திருக்குறள் ஓதி திருமணம் செய்விப்பதற்கு முன்வரவேண்டும் என கிளிநொச்சி ஆனந்த நகரில் இராசேந்திரம், புஸ்பமாலா இணையரின் மகன் மதிவேந்தனுக்கும், துருபாகரன் சற்குணராணி இணையரின் மகள் யினோயினிக்கும் நடைபெற்ற திருமணத்துக்குதலைமை தாங்கி நடத்தும்போது தமிழ்ச்சங்கத் தலைவர் வே. இறைபிள்ளை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், வைதீக நெறியில் சமஸ்கிருதத்தில் திருமணம் செய்து வைப்பவர்கள், தங்களை உயர்ந்தவர்களாக தக்க வைத்துக்கொள்ளவும், காலமெல்லாம் தன்னலத்துடன் வாழத்திட்டமிட்டும் மானமும் மதிப்பும் பகுத்தறிவு விளக்கமும் இல்லாப் பிறவிகளாகவே தமிழ் மக்கள் என்றும் இருக்க வேண்டும் என்று திட்டமிட்டும் தமிழ் மொழி நீச மொழி என்றும் வடமொழி தேவமொழி என்றும் தமிழ் மக்களுக்கு புரியாத வடமொழியிலேயே சடங்குகள் நடத்தி வருகின்றனர். அப்படிச் செய்யாவிட்டால் மழை பொழியாது, நாடு விளையாது, நோய் நொடி பரவும், கரு வாய்க்காது. வாழ்வு நீடிக்காது என்று அச்சுறுத்தி அச்சத்தாலேயே தமிழ்ப்பிறவியர் அடங்கிப் போகவும் விடாப் பிடியாக வடமொழிச் சடங்கு வழியை பற்றிக் கொண்டிருக்கச் செய்கின்றனர்.

அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா என எண்ணி நாம் பகுத் தறிவோடு சிந்திக்க வேண்டும். வடமொழிச் சடங்கு நடத்தி வாழ்வு கொண்டவர் கைம்மையர் ஆகவில்லையா? நோய் நொடி [illegible] வில்லையா? இந்தச் சடங்கு செய்வார் குடும்பத்திலும் இவை ஏற்படவில்லையா? இந்த வகைச் சடங்கு நடத்தப்பட்டவர்க்கு மட்டும் கொட்டோ கொட்டென மழை பொழிந்து விளைவு பெருகி வணிக வளம் சிறந்து நோய் நொடி இல்லாமல் வாழ்கின்றார்களா? சடங்கிலா வாழ்வு இருக்கிறது? வாழ்வு அவரவர் கையில்தான் உள்ளது.

வடமொழி ஓதாமல் சடங்கு செய்தவர்களுக்கு கரு உண்டாகவில்லையா? வாழ்வு சிறக்க வில்லயா? மந்திரம் ஓதியமை்யாலா, கோழி முட்டையிட்டு குஞ்சு பொரித்தது. மந்திரம் ஓதியமையாலா, ஆடும் மாடும் கருக் கொண்டு குட்டியும் கன்றும் போட்டன. இதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? சொல்பவனுக்கும் கேட்பவனுக்கும் ஊடகமாக உணர்வாகவும் இருப்பது எது? அது மொழி. எனவேசடங்குபுரியும்மொழியில், புரியும்வகையில், பொருந்தும் முறையில், செய்யப்பட வேண்டும் என்பதே அடிப்படை. உலகமொழிக்கெல்லாம் தாய்மொழி தமிழ். தமிழ் தொன்மையும் வன்மையும் இனிமையும் மிக்கது. அது எந்த மொழிக்கும் தாழாத வகையில் நாம் பாதுகா[illegible] வேண்டும். எனவே எமது உயர்தனிச் செம் மொழியாகிய தமிழில் எங்கள் வாழ்வியல் சடங்குகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்று கூறினார்.

தமிழ்ச் சங்கத் தலைவர் இதுவரை 40 க்கு மேற்பட்ட தமிழ்நெறித் திருமணங்களை வடக்கு மாகாணத்தின் பல பாகங் களிலும், திருகோணமலை மாவட்டத்திலும் நிறைவேற்றி வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

*கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம்.*

# தொழில்முயற்சி சாதனையாளர் விருது வழங்கி கௌரவிப்பு







யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தொழில் முயற்சியாளர்கள் இருவர் இலங்கைத் தேசிய கைத்தொழில் சம்மேளனத்தினால் 2015ஆம் ஆண்டுக்கான தொழில் முயற்சி சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளனர். மேற்படி சம்மேளனத்தினால் வருடாந்தம் நடத்தப் படுகின்ற மேற்படி சாதனையாளர் விருதுக்குரிய விண்ணப்பங்கள் கடந்த ஜூலை மாதம் கோரப்பட்டிருந்ததுடன், நாடுமுழுவதிலுமிருந்து பல்வேறு தொழில் முயற்சியாளர்கள் மேற்படி விருதுகளுக்காக விண்ணப்பித்திருந்தனர். அவ் வகையில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு தொழில் முயற்சியாளர்களும் தமது விண்ணப்பங்களை யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத்தினூடாக சமர்ப்பித்திருந்தனர்.

தொழில் முயற்சியின் வகை மற்றும் தன்மை, நிதிசார் மற்றும் நிதிசாரா விடயங்கள், அரச பொறுப்புக்கள், தர முகாமைத்துவம், சுற்றாடல் பொறுப்புக்கள், ஊழியர் மற்றும் தொழிலாளர் விடயங்கள் மற்றும் சமூகப் பொறுப்புக்கள் ஆகிய விடயங்கள் பிரதானமாகக் கருத்திற் கொள்ளப்பட்டு மேற்படி விருதுகளுக்கான ஆரம்ப மதி[illegible] பெறுவதுடன், தெரிவு[illegible] முதற்கட்ட விண்ணப்பதாரர்கள் நேர் முகத் தேர்வின் பின்னர் விருதுகளுக்காக இறுதி செய்யப்படுவர்.

அந்தவகையில் "விசேட மாவட்ட வகையின் கீழ்" யாழ்ப்பாணம் [illegible] விருதையும் நெல்லியடியைச் சேர்ந்த [illegible] நிர்மாணிகள்" தங்க விருதையும் வென்றுள்ளனர். கடந்த 13 வருடங்களாக நடைபெற்றுவரும் மேற்படி விருது வழங்கும் நிகழ்வு கடந்த 3ஆம் திகதி கொழும்பு கலதாரி நட்சத்திர சுற்றுலா விடுதியில் மிகவும் கோலாகலமாக இடம் பெற்றது.

இலங்கையின் கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனங்களால் வழங்கப்படும் சிறந்த விருதுகளில் மிகவும் பெருமைக்குரியதும் அதிகளவு அங்கீகாரம் மிக்கதாகவும் மேற்படி விருது விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழனின் மானமும் வீரமும் செத்துவிட்டதா?

16.09.2015 அன்று வெளிவந்த உதயன் பத்திரிகையில் ஒரு செய்தி. நல்லூரில் சங்கிலி மன்னன் சிலையில் உள்ள வாளில் குளிர்பான நிறுவனத்தின்விளம்பரப் பதாகையொன்று கட்டப்பட்டுள்ளதாக வந்த அந்தச் செய்தி ஒவ்வொரு தமிழ் மக்கள் நெஞ்சங்களிலும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல உள்ளது. நல்லூர் முருகனின் திருவிழா நடந்து 25 நாள்களுக்கு மேலாகிவிட்ட நிலையில் எந்தவொரு தமிழ் மகனின் கண்ணிலும் அது படவில்லையா? எல்லோரும் நித்திரை கொண்டிருந்தார்களா? என்று எண்ணத் தோன்றுகின்றது. அல்லது கண்டும் காணாதவர்கள் போல நடந்து கொண்டார்களா? தமிழின உணர்ச்சி செத்துப்போய்விட்டதா? மாவீரன் சங்கிலி மன்னனை அவமானப்படுத்துமளவுக்கு எவரோ இதனைச் செய்திருக்கின்றார்கள். நெஞ்சம் கொதிக்குதையா விடுதலைப்புலிகள் இருந்தால் இப்படியான செயலை எவரும் செய்யமுடியுமா? தமிழன் தமிழன் என்று மார்தட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் எங்கே போய்விட்டார்கள்? கதிரையில் குந்திவிட்டால் கண்கள் கூடத்தெரியாமல் போய்விடுகின்றது. உண்மையான தமிழ் உணர்வாளர்கள் காணாமற் போய்விட்டார்கள். எந்தக் குளிர்பான நிறுவனம் என்று உதயன் வெளியிடவில்லை. குளிர்பான நிலையத்துக்கு எதிராக யாழ்.மாநகர சபையால் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட வேண்டும். நல்லூர் சுற்றாடலில் விளம்பரப் பதாகைகள் கட்டக் கூடாது என்று அறிவித்தும் இப்படியான ஈனச்செயலைச் செய்திருக்கின்றார்கள்.

இதேபோல சிங்கள மன்னர்களுடைய சிலையிலே கட்டியிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் மீது சட்ட நடவடிக்கை மாநகர சபையால் எடுக்கப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்வதோடு தமிழனின் தன்மான உணர்ச்சியும் வீரமும் செத்துப்போய்விடவில்லை என்பதை நிரூபிக்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கின்றோம். தமிழர்களின் ஒருமித்த எதிர்ப்புக் குரலாக இது ஒலிக்க வேண்டும்.

– ***திமிலவன்,*** வவுனியா.

## குருநகர் வடிகால்கள் குப்பை போடும் இடங்களா?

குருநகர் பகுதியில் வியாபார நிலையங்களை நடத்தி வரும் வியாபாரிகள் சிலரின் பொறுப்பற்ற செயல் காரணமாக இந்த நிலையங்களைச் சூழவுள்ள வடிகால்களின் ஊடாக கழிவுநீர் செல்வதில் தடையேற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவர்கள் தங்கள் கடைகளில் உள்ள பாவனைக்கு உதவாத வெற்றுப் பிளாஸ்ரிக் போத்தல்கள், கிழிந்த சொப்பிங் பைகள், கழிவுப் பேப்பர்கள், வெற்று பிஸ்கற் பெட்டிகள் ஆகியவைகளை அதற்கான பைகளில் போடாமல் வெளியே வீசி வருவதாகப் பொது மக்கள் தெரிவித்தனர்.


இவ்வாறு இவர்களால் அநாதரவாக தூக்கி வீசப்படும் இந்தப் பொருள்கள் யாவும் காற்றில் பறந்து வந்து, கழிவு நீர் செல்லும் கழிவு நீர் வடிகால்களில் சேர்ந்து விடுவதனால், கழிவு நீரின் ஓட்டம் தடைப்பட்டு துர்நாற்றம் வீசி வருவதை அவதானிக்க முடிகிறது. கழிவுப் பொருள்களை அதற்கேற்ப வகைப்படுத்தி, பாதுகாத்து உரிய வீதிகளூடாக வரும் யாழ்.மாநகர சபையின் கழிவகற்றல் வாகனங்களில் ஒப்படைக்குமாறு யாழ்.மாநகர சபையால் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் ஏற்கனவே வழங்கப்பட்டு இந்தத் திட்டம் குருநகர் பகுதியிலும் யாழ்.மாநகர சபையால் செயற்படுத்தப்பட்டு வரு கிறது.




எனினும் இது பற்றி இந்தக் குப்பைகளை வீசும் வியாபாரிகள் கருத்தில் எடுத்துச் செயற்படாததனால் கழிவு நீர் வாய்க்கால்கள் குப்பை கூளங்களால் நிரம்பிக் காணப்படுகின்றன. நாளாந்தம் துப்புரவுப் பணியில் ஈடுபடும் யாழ்.மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் கழிவு நீர் வாய்க்காலைத் துப்புரவு செய்வதில் சிரமப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. எனவே கழிவு நீர் செல்லும் வாய்க்கால்களில் குப்பை கூளங்களைப் போடாமல் உரிய கழிவுப் பொருள்களை பைகளில் சேகரித்து வைத்து யாழ்.மாநகர சபையின் குப்பை ஏற்றும் வாகனங்கள் வரும்போது ஒப்படைப்பது சிறந்த சுகாதார நடைமுறையாகும். இதனை இவர்கள் கடைப்பிடிப்பார்களா?

***திலீப்,***
குருநகர்.

## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## நீதிக்கான குரலை வரலாறு மறக்காது

இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதிக்கட்டத்தில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச விசாரணை அறிக்கை கடந்த புதன்கிழமை மனித உரிமைகள் பேரவையில் பகிரங்கப்படுத்தப்பட்டது.

அடுத்து மேற்கொள்ளப்படவுள்ள நகர்வுகள் தொடர்பாக ஐயப்பாடுகளும், அதிருப்தி நிலையும் தமிழர் தரப்பில் காணப்படுகின்றமை உண்மையென்றபோதிலும், பன்மடங்கு காரம் குறைக்கப்பட்டு வெளியிடப்பட்டதாக ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டவர்களே பகிரங்கமாகக் குறிப்பிடும் ஐ.நா. விசாரணை அறிக்கை, போரினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பினரிடையே பொதுவாக வரவேற்பைப் பெற்றுள்ளதை அறிக்கை தொடர்பில் வெளியிடப்பட்டுவரும் கருத்துகள் வெளிப்படுத்துகின்றன.

போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான மிகக் கொடூர குற்றங்களை உள்ளடங்கியதாக நடத்திய போரை மனிதாபிமான நடவடிக்கையென்றும் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காக இழப்புக்களின்றி நடத்திய போர் என்றும் அடையாளப்படுத்த முனைந்ததுடன், சாட்சியமில்லாத போரை நடத்திவிட்டோம், எம்மை எதிர்த்துநிற்க யாருண்டு எனக் கர்வத்துடன் நடந்துகொண்ட மகிந்த ராஜபக்ச அரசினதும் அவர்களோடு கைகோத்துச் செயற்பட்ட தரப்பினரதும் முகத்திரைகளைக் கிழித்துவிடுவதாக ஐ.நா. அறிக்கை அமைந்துவிட்டமை தமிழர்கள் மத்தியில் ஒருவித ஆத்ம திருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றது.

உரிமைக்கான தமது போராட்டத்தில் இழக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான உயிர்கள், பெறுமதிமிக்க உடைமைகள் எல்லாம் பயனற்றுப் போய்விடுமோ, அவர்களின் உச்சக்கட்டத் தியாகங்கள் வரலாற்றிலிருந்து மறைக்கப்பட்டுவிடுமோ என்றெண்ணியிருந்த தமிழர்களுக்கு ஐ.நா. விசாரணை அறிக்கை தமக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களின் ஒரு பகுதியைத்தானும் சாட்சிப்படுத்திய ஆவணமாக அமைந்து, சர்வதேச அங்கீகாரம் கிடைத்துவிட்ட உணர்வைத் தந்திருப்பது உண்மைதான்.

தமிழர்களின் நீதிக்கான போராட்டத்தைத் தொடர்ந்து முன்நகர்த்துவதற்குத் தேவையான சர்வதேச அங்கீகாரம் பெற்ற அடித்தளமாக ஜெனிவா அறிக்கை அமைந்திருக்கின்றது.

ஜெனிவாவில் வெளியான ஐ.நா. அறிக்கையின் எதிரொலியாக ராஜபக்ச தரப்பினரும் அவர்களது அடிவருடிகளும் பல்வேறு கருத்துகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த எதிர்ப்புகளைப் பெரும் சவாலாக பூதாகாரப்படுத்தி சர்வதேச வகிபாகத்தை முற்றாக இல்லாது செய்யும் முயற்சிகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போர் தொடர்பாக ஐ.நா. விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்ட ஆரம்பக் கட்டத்தில் அதற்கு எதிராக 2010ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் விமல் வீரவன்ச ஆடிய உண்ணாவிரத நாடகமும் - ஆர்ப்பாட்டங்களும் இன்னமும் மனக்கண் முன்னே தெரிகின்றன.

அதனையெல்லாம் பெரும் விடயமாகக் கணக்கெடுத்திருந்தால் ஐ.நா. விசாரணையை நடத்தியிருக்கவோ இன்று அறிக்கையாக வெளிவந்திருக்கவோ முடியாது.

பெருங்குற்றத்தை இழைத்தவர்கள் தமது குற்றத்தை மறைப்பதற்கு எத்தகைய சூழ்ச்சிகளை மேற்கொண்டாலும், பாதிக்கப்பட்டவர்களின் நீதிக்கான தேடலுக்கு முன்பாக அது செல்லாக் காசாகிவிடும். தென்னிலங்கையில் தெரிவிக்கப்படும் சர்வதேச வகிபாகம் தொடர்பான அச்சமூட்டும் கருத்துகளைக் கண்டு பின்வாங்காது நீதியின் மேல் நம்பிக்கை வைத்து, இலங்கையுடன் இணைந்து கொண்டுவரவுள்ள கருத்தொருமைப்பாட்டுத் தீர்மானத்தில் சர்வதேச வகிபாகத்தை உறுதி செய்வதற்குத் தீர்மானத்தைத் தயாரிக்கின்ற சர்வதேச தரப்பினரும் தமிழர் மற்றும் நீதிக்கான தரப்பினரும் செயலாற்றவேண்டும். அநீதிக்குத் துணைபோனவர்கள் வரலாற்றின் குப்பைத்தொட்டிக்குள் வீசப்பட, நீதிக்காகக் குரல் கொடுத்தவர்களை வரலாறு என்றுமே மறப்பதில்லை.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மீண்டும் மரணதண்டனை; குற்றங்கள் குறைய அதுதான் வழியா?

உலகில் பல நாடுகளில் மரண தண்டனை இன்று நடைமுறையில் இருந்து வருகின்றது. குறிப்பாக அமெரிக்கா போன்ற ஜனநாயக நாடுகள், சீனா போன்ற தனிக்கட்சி நாடுகள் மற்றும் பல மேற்காசிய நாடுகளை உதாரணமாக சுட்டிக்காட்டலாம். ஆனால் அந்த நாடுகளில் எல்லாம் அவ்வாறான தண்டனைக்குரிய குற்றங்கள் நடைபெறாமல் இல்லையென்றாலும், அவை குறைந்துள்ளமைக்கு மிகமிகக் கடுமையான தண்டனைகள் நடைமுறையில் இருப்பதே காரணம் என்று விவாதிக்கப்படுகின்றது.

இலங்கையில் 1976 ஆம் ஆண்டிலிருந்து எவருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை. எனினும், மரணதண்டனை விதிக்கப் பட்ட அனேகர் ஆயுள் தண்டனைகளை அனுபவித்துக் கொண்டு வருவது தெரிகின்றது.

சமீப காலமாக நாட்டில் குற்றச் செயல்கள் குறிப்பாக சிறுவர் துஷ்பிரயோகம், சிறுமிகள் மற்றும் பெண்கள் மீதான பாலியல் வன்செயல்களும், படு கொலைகளும் அதிகரித்திருப்பது நாட்டை உலுக்கி வருகின்றது.

குற்றச் செயல்கள், ஏதோ ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் மட்டும் நடைபெறும் சம்பவங்களாகக் காணப்படவில்லை. நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக நடைபெற்று வருகிறது. அது மிகப் பலரையும் கவலையில் ஆழ்த்தி உள்ளது. இவற்றைத் தடுத்து நிறுத்தும் வகையில், சட்ட அமுலாக்கல்துறை சிறப்பாக நீதிமன்றங்கள் தமது சட்ட வரம்புகளுக்குள்ளான இறுக்கமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. எனினும், சட்ட ஒழுங்குமுறைகளை, துச்சமாகக் கருதிச் செயற்படும் போக்கு சமூகத்தில் தொடர்ச்சியாக சில வருடங்களாகவே கட்டுமீறிப் போய்விட்டுள்ள நிலையில் அவற்றுக்கு கடிவாளம் போட முடியாமல் இருக்கின்றது.

அதனால், நாட்டின் ஜனாதிபதியே இதில் இப்போது கவனம் எடுக்கத் தொடங்கியிருக்கிறார். நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மரண தண்டனை விதிக்கும் முறையை மீண்டும் செயற்படுத்துவதனால், அவற்றைக் கட்டுப்படுத்த இயலும் என்பது அவர் கருத்து. அதற்காக தமக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, மீண்டும் மரண தண்டனையை செயற்படுத்த முடியுமென்றாலும் நாடாளுமன்றம் அது பற்றி விவாதித்து முடிவெடுக்க வேண்டும் என்று சரியாகவே அவர் தீர்மானித்திருக்கிறார்.

அத்தகைய ஒரு தீர்மானம் நாடாளுமன்றத்துக்கு வருமானால், இப்போதுள்ள நிலையில் அது இலகுவாக நிறைவேற்றப்பட்டு விடலாம். இருந்தாலும் மரண தண்டனையை மீண்டும் நடைமுறைப் படுத்துவதன் மூலம் மட்டுமே பாரிய குற்றங்களைத் தடுத்துவிட முடியுமா என்று, சமூக ஆர்வலர்கள், மனித உரிமை செயற் பாட்டாளர்கள் மற்றும் சில சமயத்தலைவர்களும் கேள்வி எழுப்புகிறார்கள்.

மனிதர்களும் அவர்கள் உருவாக்கும் சட்டங்களும் சட்டத்தை செயற்படுத்தும் அமைப்புகளும் எவ்வளவுதான் இறுக்கமாகவும் செயற்றிறன் மிக்கவையாக இருப்பினும், குற்றம் புரிகிறவர்கள், ஏதோ ஒரு வகையில் இருந்து கொண்டேதான் இருக்கிறார்கள். அதனால் குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனைகளின் தாக்கம் கடுமையாக இருக்க வேண்டும். அத்தோடு, குற்றம் புரியக்கூடிய வகையிலான சூழ்நிலைகள் மீது கண்காணிப்புகள் வலுவாக இருப்பது அவசியம். எங்கும், எதிலும், எல்லா நிலைகளிலும் குற்றம் புரிகிறவர்கள் கண்காணிக்கப்படுகிறார்கள் என்கின்ற உணர்வு உருவாக்கப்பட்டு, அதற்கான சூழலும் இருக்குமானால் குற்றம் புரிய எண்ணுபவர்களது எண்ணிக்கை குறைவடையும் என்பதுடன், குற்றங்களுக்குள்ளாகும் பிரிவினரும் பயம் நீங்கி துணிச்சல் பெறுவார்கள். சுதந்திரமாக அச்சமின்றி அவர்களால் சமூகத்தில் நடமாட முடியும்.

மரண தண்டனை நடைமுறையை முன்னைய அரசுகள் நிறுத்தி வைத்திருந்தமை ஒரு புறமிருக்க, குற்றம் புரிகிறவர்கள் தண்டனைக்குள்ளாகாமல் இருக்கும் சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டிருந்தமையும் குற்றங்கள் அதிகரிக்கக் காரணமாக இருந்துள்ளன.

நாட்டையும் மக்களையும் உலுக்கியுள்ள கொடூரமான குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி கொண்டுள்ள மனப்பான்மை வரவேற்கத் தக்கது. அதற்காக மரணதண்டனையை மீண்டும் கொண்டு வருவதனால் அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்றும் அவர் கருதுவதிலும் நியாயமுண்டு. ஆனால் நினைத்தோம் கவிழ்த்தோம் என்றில்லாமல், அது குறித்து முடிவு செய்யும் பொறுப்பை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப் படைக்க அவர் முடிவு செய்திருப்பதும் அவரது ஜனநா யகம் நாடிய பண்பை வெளிக்காட்டுகின்றது. அந்த வகையில் நாடாளுமன்றம் இனி வரும் நாள்களில் மரண தண்டனையை மீண்டும் செயற் படுத்துவது பற்றி விரிவாகவும் சங்கோபாங்கமாகவும் ஆராய சந்தர்ப்பம் கிடைக்கும்.

இதற்கிடையில், குற்றச் செயல்களை கட்டுப் படுத்தும் சட்டதிட்டங்களை மேலும் வலுப்படுத்தி செயற்படுத்துவதில் சட்ட அமுலாக்கத்துறையினர் கவ னம் செலுத்துவது அவசியம். மனித உரிமை நிறு வனங்கள் மற்றும் செயற்பாட்டாளர் களுடனான கலந்துரையாடல்களை நடத்தி அவர்களின் கருத்துக் களையும் அரசு அறிய முற்படுவது பயனளிப்பதாக அமையும்.


# தமிழ் நாட்டில் அடுத்த ஆட்சியை அமைக்கப் போவது யார்?

சேரலாதன்



தமிழ் நாட்டில் அடுத்த ஆண்டு சட்ட மன்றத் தேர்தல்கள் இடம்பெறப் போகின்றன. எம்.ஜி. இராமச்சந்திரனின் காலத்துக்குப் பின்னர் தி.மு.கவும், அ.தி.மு.கவும் மாறி மாறி ஆட்சி அமைத்துக் கொள்வதுதான் வழக்கமாக இருந்துள்ளது. அ.தி.மு.கவின் ஸ்தாபகத் தலைவரான எம்.ஜி. இராமச்சந்திரன் உயிரோடு இருக்கும் வரை அவரை எவராலும் அசைக்க முடியவில்லை. அரசியல் சாணக்கியர் என அழைக்கப்படும் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியால் கூட எம்.ஜி.இராமச்சந்திரனை முதலமைச்சர் பதவியிலிருந்து அகற்ற முடியவில்லை. எம்.ஜி.ஆர். தொடர்ந்து 10 ஆண்டுகள் முதலமைச்சர் பதவியில் அமர்ந்திருக்க சொற்ப எண்ணிக்கையான சட்டமன்ற உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கவே கருணாநிதியால் முடிந்தது. கருணாநிதியால் தி.மு.க.விலிருந்து வெளியேற்றப்பட்ட எம்.ஜி. ஆர். அரசியலில் கருணாநிதிக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார். அவர் சினிமா நடிகராக இருந்த போதே சாதாரண மக்களின் பேராதரவு அவருக்கு இருந்தது. கட்சி அமைத்ததன் பின்னர் அவருக் கான ஆதரவு பன்மடங்கு பெருகியது. மேலும் அவர் தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பதவி ஏற்றதன் பின்னர் ஏழை, எளிய மக்களின் துயர் துடைப்பதற்கான பல திட்டங்களைச் செயற்படுத்தினார். பாடசாலைப் பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கும் அவரது திட்டம் பெரும் வரவேற்பைப் பெற்றது. இதனால் அரசிய லில் ஓர் அசைக்க முடியாத சக்தியாகவே அவர் மாறியிருந்தார்.





அவரது மறைவுக்குப் பின்னர் அவரது இடத்தை ஜெயலலிதா நிரப்பிக் கொண்டார் – கருணாநிதிக்கு எதிரான வியூகங்களை வகுப்பதில் அவரும் தேர்ந்தவராகக் காணப்பட்டார். மக்களிடையே எம்.ஜி. ஆருக்கு இருந்த செல்வாக்கும் அவருக்குக் கைகொடுத்தது. அதேவேளை அ.தி. மு.க. கட்சியைக் கட்டுக்கோப்புடன் வழிநடத்திச் செல்லும் திறமையும் அவரிடம் காணப்பட்டதால் அவரால் சிறந்ததொரு தலைவராக உருவெடுக்க முடிந்தது. இதன் காரணமாகவே தமிழ் நாட்டின் அசைக்க முடியாததொரு தலைவராக அவரால் உருவாக முடிந்தது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட ஜெய லலிதா தலைமையிலான அ.தி.மு.க. தமிழ் நாட்டில் மொத்தமுள்ள 39 நாடாளுமன்ற ஆசனங்களில் 37 ஐக் கைப்பற்றி உலக அரங்கில் கடும் வியப்பை ஏற்படுத் தியது. இதனால் இந்திய அளவில் ஜெயலலிதா மதிக்கப்பட்டார். அண் மையில் தமிழ் நாட்டுக்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சம்பிரதாயங்கள் அனைத் தையும் புறக்கணித்துவிட்டு ஜெயலலிதாவின் இல்லத்துக்குச் சென்றதும் அங்கு விருந்துண்டதும் முக்கியமான செய்திகளாகி விட்டன. இதைத் தேர்தல் கூட்டணிக்கான ஓர் ஆரம்பமெனச் சிலர் வர்ணித்தனர். ஆனால் தமிழ் நாட்டில் மக்களின் செல்வாக்கைப் பெறாத மோடி தலைமையி லான பி.ஜே.பிக்கு ஜெயல லிதா முக்கியத்துவம் கொடுப்பாரா என்பது சந்தேகமே.

இந்த நிலையில் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க வுக்கு சவால் விடக்கூடிய நிலை யில் உள்ளதா என்பதை ஆராய்ந்து பார்க்கலாம். தற்போதைய நிலையில் தி.மு.க வின் கட்டுக்கோப்பு சரிவடைந்து காணப்படுகின்றது. கருணாநிதியின் உள்வீட்டுப் பூசல்களே கட்சிக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி நிற்கின்றது. அவரது அரசியல் வாரிசுகளான அழகிரியும், ஸ்ராலினும் எதிரும், புதிருமாக நின்றுகொண்டு கட்சி ஆதரவாளர்களைக் குழப்பி வருகின்றனர். கருணாநிதிக்குப் பிறகு கட்சியின் தலைமைப் பொறுப்பு ஸ்ராலின் வசம் செல்வதை அழகிரி அறவே விரும்பவில்லை. கருணாநிதிக்கு அழகிரியை விட ஸ்ராலின் மீது அதிக நம்பிக்கை உள்ளபோதிலும் அதை வெளியே காட்டிக்கொள்ள முடியவில்லை. அழகிரி மீதான பயமே இதற்குக் காரணம். மேலும் அலைக்கற்றை ஒதுக்கீட்டு வழக்கில் கருணாநிதியின் மகளான கனிமொழியும், மனைவி தயாளு அம்மாளும் விசாரிக்கப்பட்டு வருகின்றமை கருணாநிதிக்குத் தலைவலியை ஏற்படுத்தி நிற்கின்றது. தள்ளாத வயதில் தள்ளாடிக் கொண்டிருக்கும் கருணாநிதி தனக்கு அடுத்த வாரிசை நியமிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். ஆனால் இதுவொரு இலகுவான விடயமாக இருக்கப் போவதில்லை. இதுவும் கட்சியின் பின்னடை வுக்கு ஒரு பிரதானமான காரணமாகும். மேலும் தமிழ் நாட்டின் ஏனைய சிறு கட்சிகளான பாட்டாளி மக்கள் கட்சி, ம.தி.மு. மு.க., விடுதலைச் சிறுத்தைகள் ஆகியன தமக்கு வெற்றி வாய்ப்பைக் கொடுக்கின்ற கட்சிகளுடனேயே கூட்டணியை அமைத்துக் கொள்ள விரும்பும் என்பதில் ஐய மில்லை. தி.மு.க.வில் தொடர்ந்தும் தொய்வான நிலையொன்று காணப்படின் இந்தக் கட்சிகள் தி.மு.க. பக்கம் தலைவைத்துப் படுப்பதற்கும் விருப்பம் தெரிவிக்கமாட்டா.

காங்கிரஸ் கட்சியைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. தமிழ்நாட்டில் அந்தக் கட்சி தொடர்ந்தும் பின்னடைவையே சந்தித்து வருகின்றது. அதன் செல்வாக்கு மக்கள் மத்தியில் அடிமட்ட நிலைக்கு சென்று விட்டது. தமிழ்நாட்டில் அடுத்த ஆட்சியை அமைப்போம், காமராஜர் ஆட்சியைக் காண்போம் என்ற வெற்றுக் கோசத்தைத் தவிர அந்தக் கட்சியிடம் ஒன்றுமே இல்லை.

தற்போதுள்ள நிலையில் அ.தி.மு.க. ஓரளவு தலைநிமிர்ந்து நிற்கின்றது. ஆனால் சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு மீண்டும் தண்டனை வழங்கப்படுமாயின் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டு விடும். அ.தி.மு.கவைப் பொறுத்த வரையில் ஜெயலலிதாவுக்கு மாற்றீடான தலைவர் ஒருவர் இல்லை. பன்னீர்ச் செல்வம் தற்காலிக முதலமைச்சர் பொறுப்பில் இருந்த போதிலும் அவரொரு மக்களின் ஆதரவைப்பெற்ற தலைவரல்ல. மேலும் செயற்றிறனும், நேரத்துக்கு ஏற்றவாறு வியூகங்களை வகுத்துக் கொள்ளும் ஆற்றலும் ஜெயலலிதா போன்று அவரிடம் காணப்படவில்லை.

ஆகவே உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பொறுத்தே அ.தி.மு.கவின் எதிர்காலம் தங்கியுள்ளது. ஜெயலலிதா உள்ளே இருந்தால் தேர்தல் வெற்றி சந்தேகமே. அவர் வெளியே இருந்தால் அடுத்த ஆட்சியை அமைக்கப்போவது ஜெயலலிதாதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆங்கில மூலம்-த எகனமிஸ்ட்
தமிழில்- ரஜீபன்

# முதற்பலி

இது பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றிருக்கவேண்டிய விடயம். இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவடைந்து ஆறு வருடங்களுக்குப் பின்னர், புதிய அரசு போரின்போது இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்து விசாரணை செய்வதற்காக உண்மை, நீதி,மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவை ஏற்படுத்துவதாக செப்ரெம்பர் 14 ஆம் திகதி அறிவித்தது.

எனினும் அந்தக் காலத்தின் ஆழமான காயங்களை இது ஆற்றாது. ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இந்த விசாரணைக்கு வெளிநாட்டு நீதிபதிகள் தேவை எனத் தெரிவிக்கின்றது, நாட்டின் தேசியவாத வாக்காளர்கள் மத்தியில் சீற்றம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இலங்கையின் தலைவர்கள் சர்வதேச நீதிபதிகள் அவசியமில்லை என நிராகரிக்கின்றனர்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்ட ஆணைக்குழுக்களை அமைப்பது குறித்த வாக்குறுதியை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு வழங்கினார். ஐக்கிய நாடு கள் விசாரணை அறிக்கையில் காணப்படக் கூடிய காரத்தை தவிர்க்கும் நோக்கத்துடனேயே இலங்கை அரசு இந்த உறுதிமொழியை வழங்கியது. அதற்கு இரு தினங்களுக்குப் பின்னர் மனித உரிமைப் பேரவை, தனது 261 பக்க அறிக்கையில் இரு தரப்பாலும் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் எனக் கருதப்படக்கூடிய பல்வேறு சம்பவங்களைப் பட்டியலிட்டது. பாலியல் வல்லுறவு மற்றும் ஆள்கடத்தல் போன்றனவும், இதில் இடம்பெற்றிருந்தன, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் பயங்கரமான அளவுக்கு வன்முறைகளும், துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

இலங்கையின் பெரும்பான்மைச் சமூகத்தை சேர்ந்த பல உறுப்பினர்கள் இந்தச் சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதில் வெளிநாட்டவர்களின் பங்களிப்பை விரும்பவில்லை.நாட்டின் சிறுபான்மைத் தமிழர்களுக்கு எதிராக இராணுவம் அட்டூழியங்களில் ஈடுபட்டது என சொல்லத்தவறினார் மங்கள சமரவீர. பல தமிழர்கள் அது இடம்பெற்றது என குற்றம்சாட்டுகின்றனர். குறிப்பாக போரின் இறுதித் தருணங்களில்.

அவ்வேளை பொறுப்பான பதவியிலிருந்த சிலர் உருவாக்கிய முறைமை மற்றும்



கலாசாரம் காரணமாகவே இலங்கை பாதுகாப்புப் படையினரின் நற்பெயர் பாதிக்கப்பட்டது என மாத்திரம் மங்கள சமரவீர குறிப்பிட்டார்.

அந்தச் சிலரில் மகிந்த ராஜபக்சவும் இடம்பெறலாம், இலங்கையின் பெரும்பான்மை சிங்களவர்களின் வலுவான ஆதரவுடன், அவர் ஜனாதிபதியாகவும், முப்படையினரின் தலைவராகவும் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்படுவதை உறுதிசெய்தார். அவரது சகோதரர்களில் ஒருவரான கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக விளங்கினார், ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்ட இறுதி இரு வாரங்களில், பிரதிபாதுகாப்பு அமைச்சராக செயற்பட்ட தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் இந்தப் பட்டியலில் சேர்க்கலாம்.

எனினும் நான்கு தசாப்தங்களுக்குப் பின்னர் முதல் தடவையாகத் தமிழர் ஒருவர் எதிர்க்கட்சி தலைவராகக் காணப்படுகின்றார், பிரதம நீதியரசராகவும் தமிழர் ஒருவர் காணப்படுகின்றார். அரசு பகைமையை தூண்டும் பேச்சுக்களைக் குற்றச் செயல்களாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

எனினும் இலங்கையின் இனக் குழுக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பெரிய தடைகள் உள்ளன. ராஜபக்ச அதில் ஒரு தடை,அவர் தற்போது நாடாளுமன்ற உறுப்பினராகவுள்ளார், வெளிநாட்டவர்கள் இடம்பெறாத உள்நாட்டு பொறிமுறையொன்று அவரை போர்க் குற்றவாளியாக அறிவித்தாலும், அது அரசுக்கு எதிரான கடும் உணர்வுகளை சிங்களவர்கள் மத்தியில் ஏற்படுத்தும்.


ராஜபக்ச போர்க் குற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்கிறார், ஆனால் அவர் அமைத்த ஆணைக்குழுவே சில தவறுகள் இடம்பெற்றுள்ளதை கண்டு பிடித்தது.

தனது படையினர் ஒரு கையில் துப்பாக்கியுடனும், மறுகையில் ஐக்கிய நாடுகள் பிரகடனத்துடனும் களத்துக்கு சென்றதாக மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஆனால் அவர் பொய் சொல்கிறார் என்பதை ஐக்கிய நாடுகள் அறிக்கை புலப்படுத்தியுள்ளது.

இலங்கை தனது கடந்த காலங்கள் குறித்து இவ்வளவு தூரம் ஏற்றுக்கொண்டாலே அது முன்னேற்றகரமான விடயமாக அமைந்துவிடும், மனித உரிமைப் பேரவையின் அமர்வுக்கு முன்னர் மாற்றமடைவதற்கான திறன் இலங்கைக்கு உள்ளதா என்பது குறித்து வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சந்தேகம் வெளியிட்டார். சிலர் விரும்புவதை விட பயணம் மிகவும் மெதுவானதாகவே காணப்படும் என அவர் தெரிவித்தார்,

எனினும் வேறு சிலரைப் பொறுத்தவரை இலங்கை இந்த விடயத்தில் அதிக தூரம் சென்றுவிட்டது எனக் கருதுகின்றனர்.

> **நான்கு தசாப்தங்களுக்கு பின்னர் முதல் தடவையாக தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராகக் காணப்படுகின்றார், பிரதம நீதியரச ராகவும் தமிழர் ஒருவர் காணப்படுகின்றார். அரசு பகைமையைத் தூண்டும் பேச்சுக்களை குற்றச் செயல்களாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | | | 9 | | 2 | 5 | 4 |
| | | 5 | | 1 | | | | |
| 2 | 4 | | 8 | | | 1 | 6 | 9 |
| 5 | 2 | | 9 | | 6 | | 3 | |
| | 8 | | | | | | 7 | |
| | 7 | | 3 | | 8 | | 1 | 5 |
| 7 | 3 | 8 | | | 9 | | 2 | 1 |
| | | | | 8 | | 3 | | |
| 1 | 5 | 4 | | 3 | | | 9 | 6 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 6 | 8 | 9 | 1 | 7 | 2 | 4 |
| 2 | 9 | 4 | 3 | 7 | 5 | 1 | 8 | 6 |
| 7 | 8 | 1 | 4 | 2 | 6 | 5 | 9 | 3 |
| 1 | 4 | 8 | 6 | 5 | 3 | 9 | 7 | 2 |
| 5 | 7 | 3 | 9 | 8 | 2 | 6 | 4 | 1 |
| 9 | 6 | 2 | 7 | 1 | 4 | 8 | 3 | 5 |
| 4 | 3 | 9 | 5 | 6 | 8 | 2 | 1 | 7 |
| 8 | 2 | 5 | 1 | 3 | 7 | 4 | 6 | 9 |
| 6 | 1 | 7 | 2 | 4 | 9 | 3 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலகை அளவில் பிரபல்யமானது.




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 40 | 60 | 60 | 30 |
| கத்தரி | 70 | 70 | 90 | 80 | 60 | 80 | 80 | 40–50 |
| கரட் | 70 | 120 | 80 | 80 | 100 | 120 | 100 | 90 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 40 | 60 | 50 | 40 |
| பயிற்றை | 60 | 40 | 60 | 60 | 40–60 | 80 | 100 | 35 |
| பாகல் | 80 | 80 | 120 | 80 | 80–100 | 120 | 110 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 70 | 80 | 120 | 80 | – | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 80 | 70 | 100 | 100 | 120 | 120 | 70 |
| சி.வெங்காயம் | 70 | 50 | 90 | 100 | 80 | 120 | 100 | 60–70 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 30 | 40 | 50 | 25 |
| தக்காளி | 70 | 60 | 60 | 60 | 70–80 | 80 | 80 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 50 | 60–70 | 60 | 60 | 25 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20–30 | 10 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 20–30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 150 | 140 | 160 | 140 | 120 | 200 | 200 | 100 |
| புடோல் | 40 | 60 | 40 | 60 | 40 | 60 | 80 | 50 |
| கோவா | 70 | 80 | 70 | 80 | 60 | 100 | 100 | 40 |
| வெண்டி | 40 | 40 | 50 | 60 | 60 | 80 | 50 | 25–30 |
| போஞ்சி | 160 | 140 | 160 | 160 | 160 | 200 | 160 | 130 |
| லீக்ஸ் | 70 | 60 | 70 | 100 | 80 | 120 | 80 | 60 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 50–60 | 50–60 | 40–50 | 35–40 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 90 | 90 | 100 | 90 | 100 | 120 |
| தேசிக்காய் | 150 | 120 | 120 | 100 | 90–100 | 240 | 160 | 130–160 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30–40 | 20 | 15 | 08 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 100 | 100 | 120 | 120 | 80 |
| இராசவள்ளி | – | – | – | 160 | 100 | – | 180 | 80 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 120 | 60 | 120 | 80 | 120 | 70 |

# தினமொரு அப்பிள்..!

தினமும் ஓர் அப்பிள் சாப்பிட்டால், மருத்துவரிடம் செல்ல வேண்டியதில்லை என்பது புகழ் பெற்ற வாசகம். தினமும் ஓர் அப்பிள் சாப்பிட்டு வந்தால் உடல் பருமன் பிரச்சினையே ஏற்படாது என தற்போது ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது. வாஷிங்டன்



பல் கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கியுலியானா நொராட்டோ தலைமையிலான விஞ்ஞானிகள், இது தொடர்பான ஆய்வை வடமேற்கு பசுபிக் பகுதிகளில் உள்ள அப்பிள் பயிரிடும் விவசாயிகளிடம் மேற்கொண்டனர்.

அப்பிள்களில், குறிப்பாக பச்சை கிரான்னி ஸ்மித் அப்பிள்களில் உள்ள செரிமானம் ஆகாத கூறுகளை ஆய்வு செய்தனர். அவை, உடல் பருமன் பிரச்சினைகளிலிருந்து பாதுகாக்கின்றன எனத் தெரியவந்துள்ளது.பச்சைகிரான்னி ஸ்மித் அப்பிள்களில் அதிகம் உள்ள செரிமானம் ஆகாத மூலக் கூறுகள், பெருங்குடல் பகுதியில் நன்மை பயக்கும் பக்ரீரியா வளர்வதற்கு உதவி புரிகின்றன. மேலும், இந்த அப்பிள்களில் நார்ச்சத்து, பாலிபெனோல்ஸ், குறைவான கார்போகைதரேற் ஆகியவையும் இதற்கு உதவி புரிகின்றன.

இந்த அப்பிளை மெல்லும் போது, இரைப்பை அமிலமும், செரிமான நொதிகளும் முழுமையாதப் பெருங்குடல் பகுதியைச் சென்றடைகின்றன. ஒருமுறை நன்மை தரும் பக்ரீரியா பெருங்குடலில் உருவாகி விட்டால் நிரந்தரமாகி, குடலில் நன்மைதரும் பக்ரீரியா வளர்வதற்கு பெரும் உதவியாக உள்ளன. இது தொடர்பாக நொராட்டோ கூறும்போது, கிரான்னி ஸ்மித் அப்பிள்களில் உள்ள செரிக்க வியலாத மூலக் கூறுகள், மல பக்ரீரியாவின் விகிதாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி உடல்பருமனைக் கட்டுப் படுத்து கின்றன என்றார். இந்தக் கண்டுபிடிப்பு, உடல் பருமனுடன் தொடர்புடைய, சர்க்கரை நோய்க்குக் காரணமாக அமையும் நாட்பட்ட அழற்சி உள்ளிட்ட நோய்களைத் தடுப்பதற்கு உதவும் என நம்பப்படுகிறது.

## நாளை

புரட்டாதி–06
புதன்கிழமை
23.09.2015

*திதி: தசமி*
*மு.இ.07.35 வரை*
*நட்சத்திரம்: உத்தராடம்*
*பி.இ.03.04 வரை*
*சுபநேரம்:*
*04.32–06.02 வரை*
*இராகுகாலம்:*
*12.02–01.32 வரை*

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### நீங்கள் உண்மையிலேயே கடவுளின் குழந்தைகள்

ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். நீங்கள் உண்மையிலேயே கடவுளின் குழந்தைகள். அதனால் எதற்கும் அஞ்சி விட மாட்டீர்கள். சிங்கக்குட்டிகளைப் போலத் திகழ்வீர்கள். ஓய்வு ஒழிவு இல்லாமல் வேலைகளைச் செய்து கொண்டே இருங்கள். ஆனால், அந்த வேலைகளில் கட்டுப் பட்டு விடாதீர்கள். அதற்குள் சிக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் ஒரு எசமானைப் போல வேலை செய்ய வேண்டும். அடிமையைப் போல அல்ல. சுதந்திரமாகவும், அன்போடும் கடமைகளைச் செய் யுங்கள்.

உள்ளத்தில்உறுதியோடு இருங்கள். அதற்கும் மேலாக மனத்தூய்மையும், முழு அளவில் சிரத்தை உள்ளவராகவும் இருங்கள். பிறருடைய நன்மையைச் சிறிது நினைத்தாலும் கூட சிங்கத்துக்குச் சமமான ஆற்றலை எமது இதயம் பெற்றுவிடும். வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் அஞ்சாது எதிர்த்து நிற்கும் வீரன் ஒருவனுடைய மன நிலையே இப்போது எமக்குத் தேவை. ஒருகாலத்தில் நீங்களே வேதகால ரிஷிகளாக இருந்தீர்கள். இப்போது வேறுவடிவம் தாங்கி வந்திருக்கிறீர்கள். அதனால் உங்களிடம் முழுமையாக நம்பிக்கை வையுங்கள். தைரியமாக இருங்கள், விழிப்புடன் என்ற அச்சமற்ற செய்தியை அறை கூவிச் சொல்லுங்கள். இந்தப் பணியில் நீங்கள் என்னுடைய உதவியாளராக இருங்கள். சொல், செயல், சிந்தனைகளில் ஒன்றாக விளங்கும் ஒரு சிலரால் இந்த உலகையே ஆட்டி வைக்க முடியும். இந்த உண்மையை




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 550 | 700 | 700 | 500 | 550 |
| நண்டு | 350 | 350 | 300 | 300 | 200 | 400 |
| கணவாய் | 700 | 550 | 300 | 600 | 600 | – |
| பாரை | 550 | 450 | 500 | 500 | 700 | 430 |
| சுறா | 500 | 500 | – | 650 | 600 | 500 |
| சீலா | 300 | 250 | 300 | 450 | 500 | 350 |
| விளை | 650 | 600 | – | 500 | 400 | 350 |
| முரல் | 300 | 350 | – | 350 | 200 | 300 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | – | 350 |
| கிழாக்கன் | 500 | 700 | 300 | 500 | 300 | – |
| ஒரா | 400 | 300 | 300 | 450 | – | – |
| திரளி | 200 | 250 | 100 | 350 | 200 | 250 |
| நகரை | 150 | 250 | 200 | 300 | – | 300 |
| சூடை | 100 | 150 | 80 | 120 | 150 | 80 |
| ஒட்டி | 200 | 200 | 100 | 300 | – | – |
| திருக்கை | 100 | 250 | 250 | 300 | 200 | 150 |
| பாலை | 400 | 200 | – | 500 | – | – |
| வாளை | 100 | 150 | – | 350 | 300 | – |
| கொய் | 100 | 100 | 100 | 100 | 50 | – |
| மதனம் | 100 | 200 | – | 280 | 150 | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்ஷ்டகரமான வாழ்க்கை

நேற்றைய உதயன் பத்திரிகையில் நவரத்தினங்களுள் ஒன்றான 'முத்து' பற்றிப் பார்த்தோம். இன்று அதன் தொடர்ச்சியாகப் 'பவளம்' பற்றிப் பார்ப்போம். பிறவியிலேயே சிலருக்கு அதிர்ஷ்ட அமைப்புக்கள் அமைந்திருக்கும். சிலர் தங்கள் உழைப்பினாலும், தெய்வ வழிபாட்டினாலும்,சாமர்த் தியத்தினாலும் அதிர்ஷ்டகரமான நல்வாழ்வை அமைத் துக் கொள்வார்கள். அந்த வகையில், ஒவ்வொருவரின் அதிர்ஷ்டத்தையும் மேன்மேலும் பெருகச் செய்யும் ஆற்றல் மிக்க நவரத்தினங்களுள் ஒன்று 'பவளம்'.

**பவளம்**

பவளம் கடல் வாழ் முதுகெலும்பற்ற உயிரின வகையைச் சேர்ந்தவையாகும். இவற்றின் மேல் சுண்ணாம்பு அல்லது கடினமான ஓடு இருக்கும். இவைகள் இரண்டு விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கடலில் விளையும் இரு இரத்தினங்களில் பவளம் பவளப்பூச்சிகள் எனப்படும் சிறிய உயிரினங்களினால் உருவாக்கப்படுகின்றன. கடினமான பாறைகளின் மேல் இந்தப் பூச்சிகள் நின்று கொண்டு இரை தேடும்போது இப்பூச்சிகளின் உடல்களிலிருந்து உண்டாகக்கூடிய எச்சங்களே பவளப் பாறைகளாக மாறுகின்றன. இதுவே பவளம் உண்மையாக உற்பத்தியாகும் முறையாகும். பவளம், கல்சியம் கார்பனேட்டினால் ஆனது. மிகச் சிறந்த பவளம் கிளியின் மூக்கு நிறத்தைப் போன்றும், செம்பருத்திப் பூவின் நிறத்தைப் போன்றும், கோவைப் பழத்தைப் போன்றும் செந்நிறமாக இருக்கும். நாம் பவளம் என்றாலே சிவப்பு நிறம் மட்டும்தான் என நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் கறுப்பு, வெள்ளை, நீலம் ஆகிய நிறங்களிலும் பவளம் கிடைக்கிறது. வெண் பவளம் என்றால் முருகப்பூ போன்ற நிறத்துடன் காணப்படும். பவளத்துக்கு ஆங்கிலத்தில் கோரல் என்று பெயர். பவளத்தின் அமைப்பைக் கொண்டு 6 அல்லது 8 கிரகங்கள் உடையதென இரு வகையாக பிரிக்கப்படுகிறது. சிவப்பு பவளமானது 8 கிரகங்கள் பிரிவைச் சார்ந்த தாகும். முன்பு நம் நாட்டுக் கடல் பகுதிகளில் பவளம் நிறையக் கிடைக்கப் பெற்றது. தற்போது இத்தாலி மற்றும் ஜப்பான் கடல் பகுதிகளில் கிடைக்கப் பெறுகிறது. பவளம், கடுமையான வேதிப் பொருளான அமிலம் பட்டால் உடனே கரைந்து விடக்கூடிய தன்மை கொண்டது.



பவளத்துக்கு 6 குற்றங்கள் உண்டு. அப்படிப்பட்ட பவளங்கள் அணிவதைத் தவிர்த்து விடுவது நல்லது. பவளங்கள் பிளவுபட்டோ, கரும் புள்ளிகளுடனோ, நிறம் வெளிறிப் போயோ, ஓரங்கள் ஒடிந்தோ, துளைகளுடனோ, இருந்தால் அவை குற்றமுடைய பவளமாகக் கருதப்படும். பவளத்தில் நாள்பட்ட, பூச்சி அரித்த பவளம் உபயோகத்துக்கு உகந்தது அல்ல. கார்னீலியன், சிகப்பு ஜாஸ்பர் கற்கள் பூமியில் விளைபவையாகும். இந்தக் கற்கள் பவளம் போன்ற அமைப்பைக் கொண்டது என்பதால், இவற்றை பவளம் என்று எண்ணிவிடக்கூடாது.

செந்நிறக் கிரகமான செவ்வாய் ஆதிக்கம் பெற்றவர்களான மேஷ, விருச்சிக ராசிக்காரர்களும், எண்கணிதப்படி 9,18,27 ஆம் திகதிகளில் பிறந்தவர்களும் பவளத்தை அணியலாம். இதைத் தவிர மருத்துவ ரீதியாகவும் பவளத்தை அணிந்தால் இரத்தச் சிவப்பணுக்கள் அதிகரிக்கின்றன. உடலில் சுறுசுறுப்பும் உண்டாகிறது. செவ்வாய் தோஷமுடையவர்களும், மனத் தளர்ச்சியடைபவர்களும், நிலையான ஐஸ்வர்யத்தை அடைய விரும்புபவர்களும் பவளக்கல்லை அணியலாம். பவளத்தைத் தங்கத்தில் பதித்து மோதிர விரலில் அணிந்து கொள்வது நல்லது.

கண்களில் பாதிப்புடைய வர்கள், குடல் புண், இருதய பாதிப்பு, உஷ்ண சம்பந்தப்பட்ட நோய், தோல் நோய், பெண்களுக்கு உண்டாகக்கூடிய மாத விடாய் கோளாறுகள் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர்களும் பவளக் கல்லை அணிவதால் எல்லாப் பிரச்சினைகளிலிருந்தும் விடுபடலாம். பவளம் தடைகளையும் விபத்தையும் தவிர்க்கும். சண்டையை யும் வெறுப்பையும் குறைக்கும். குருதியைச் சுத்தப்படுத்தும்.

(தொடரும்)

# தமிழர் பாரம்பரியத்தில் நகைகள்



நேற்றைய உதயன் பத்திரிகையில் நகைகள் தமிழர் பாரம்பரியத்தில் வகிக்கும் பங்கு குறித்துப் பார்த்தோம். அதன் தொடர்ச்சி வருமாறு:–

**மூக்குத்தி அணிதல்**

மூக்குத்தி அணிதல் என்பது காலம் காலமாக நடைமுறையில் இருக்கும் ஒரு பழக்கம். இன்றும்கூட நாகரிக உலகத்தில் அது முக்கியத்துவம் பெறுகிறது. சிறு குழந்தைகளுக்கு மூக்குத்தி குத்தும் பழக்கம் இல்லை. பருவப் பெண்களே மூக்குத்தி அணிய வேண்டும். பருவப் பெண்களுக்கு மண்டை ஓட்டுப் பகுதியில் சில வாயுக்கள் காணப் படுகின்றன. இந்த வாயுக்களை உடலில் இருந்து அகற்றுவதற்குத் தான் மூக்கில் துளை இடும் பழக்கம் உருவானது. இதனால் பெண் களுக்கு மூக்குத் தொடர்பான பிரச்சினைகள் நிவர்த்தியாகும். காற்றை வெளியேற்றுவதில் ஆண்களுக்கு வலப்புறமும் பெண்களுக்கு இடப்புறமும் பலமான வலுவான பகுதிகளாகும். வலது புறமாக சுவாசம் செல்லும்போதுதான், உடலுக்கும் மனதுக்கும் பலன் கிடைக்கும். முறையான சுவாச பரிமாற்றத்துக்கு உதவுகிறது மூக்குத்தி. நமது மூளையின் அடிப்பகுதியில் நரம்பு மண்டலங்களைக் கட்டுப்படுத் தக்கூடிய சில பகுதிகள் உணர்ச்சிகளைச் செயற்படுத்துகின்றன. இந்த பகுதியின் செயல்பாட்டை பெண்களுக்கு அதிகரிக்க மூக்குத்தி அவசியப்படுகிறது.





பெண்களின் இடதுபுற மூக்கில் குத்தக்கூடிய மூக்குத்தி, வலது புற மூளையையும், வலது புற மூக்கில் குத்தும் மூக்குத்தி இடதுபுற மூளையையும் இயக்கக் கூடியதாக உள்ளது. இன்று இருபுறமும் மூக்குத்தி அணிந் தாலும் சாஸ்திரப்படி பெண்கள் இடப்புறம் தான் அணிய வேண்டும். இடப்புறம் [illegible] சக்தியுடன் ம[illegible] தப்படுகிறது. நமது முன் நெற்றிப் பகுதியில் இருந்து சில நரம்புகள் மூக்குத் துவாரம் வரை கீழ் இறங்கி மூக்குப் பகுதியில் மெல்லிய துவாரங்களாக இருக்கும். இதில் அணியப்படும் தங்க மூக்குத்தி, உடல் வெப்பத்தைக் குறைத்து குளிர்ச்சி அளிக்கும். மூக்கு மடலில் ஏற்படுத்தப்படும் துவாரம் நரம்பு மண்டலத்தில் உள்ள அசுத்த வாயுவை அகற்றும். ஒற்றைத் தலைவலி, நரம்பு நோய்கள், உளச்சோர்வு ஏற்படாமல் மூக்குத்தி தடுக்கிறது.

**காதணி அணிதல்**

காதணி(தோடு) என்பது காதில் அணியும் ஆபரணம். பெண்கள் அனைவரும் அணியும் இந்த ஆபரணத்தை ஆண்களில் ஒரு பிரிவினர் அணிவார்கள். காது குத்துதல் என்பது தமிழ்ச் சமூகத்தில் ஒரு முக்கிய சடங்காகவே கொண்டாடப்படுகிறது. உலோகம், கண்ணாடி போன்றவற்றால் காதணிகள் அணியப்படுகின்றன. காதுச் சோணையில் துவாரமிட்டு காதணி அணிவதன் முக்கிய நோக்கம் கண் பார்வையை வலுப்படுத்துதலே. வயிறும் கல்லீரலும் தூண்டப் படும் , ஜீரணக்கோளாறு, கண் பார்வைக் கோளாறு சரியாகும்.

**வளையல்(காப்பு)**

வளையல் என்பது பாரம்பரிய அணிகலனாகும். தங்கம் மற்றும் கண்ணாடி வளையல் ஆரம்பகாலத்தில் அணிந்தாலும் தற்பொழுது பிளாஸ்டிக் வளையல்களின் பயன்பாடு அதிகரித் துள்ளது. வளையல் அணிவதன் முக்கிய நோக்கம் ஓமோன்களின் குறைபாடுகளைக் களைவதாகும். பிறந்தது முதல் எமது உடலில் ஓமோன்களின் குறைபாடுகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். அதனால் அக்காலத்தில் இறுதிவரை வளையல் அணிதல் கட்டாயமாக்கப்பட்டு இருந்தது. அதிலும் கர்ப்பமான பெண்களுக்கு வளையல் அணிவிக்கும் வளைகாப்பு, சடங்கு முக்கியம் பெறுகிறது. எமது பாரம்பரியத்தில். வளையல் அணிவதால் சுவாசப் பாதை அழற்சி, ஆஸ்துமா போன்றவை குறையும். நன்றாகத் தூக்கம் வரும். கர்ப்ப காலத்தில் ஏற்படும் ஓமோன் குறைபாடுகள் நீங்கவும், உடல் சூடு தணியவும் இந்த வழக்கம் நடைமுறைக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய் வாலை நிமிர்த்த இயலாது

உதயபுரம் என்று ஒரு சிறு கிராமம் இருந்தது. அந்தக் கிராமத்தின் ஒரு புறத்தே அழகிய காடு ஒன்று இருந்தது. அழகு மிகுந்த அந்தக் காடு உதயபுரிக்கே ஒரு அரணாகவும் அழகு தருவதாகவும் இருந்தது. ஆனால் அந்தக் காட்டுக்குச் செல்லவோ அதன் அழகை அனுபவிக்கவோ முடியாதபடி அந்தக் காட்டில் வசித்த அரக்கனொருவர் கிராம மக்களைத் தடுத்து வந்தான். எவராவது தெரியாதவர்கள் அங்கு போய் விட்டால் அவர்களை உயிருடன் விழுங்கி விடுவான். அதனால் மக்கள் மிகவும் பயத்துடனும் கவலையுடனும் காட்டை விட்டு விலகியே வாழ்ந்து வந்தனர். அந்த அரக்கனை எப்படியாவது அழித்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன் முயன்ற பலர் காணாமற் போயினர். அவர்களைக் காப்பாற்றும் முயற்சிகளும் பயனற்றுப் போயின.



அப்படி ஒன்றும் அந்த அரக்கன் நியாயமில்லாமல் மனிதர்களைக் கொல்லவில்லை. எனக்கு ஏதேனும் வேலை கொடுங்கள், வேலையில்லாமல் நான் இருக்க மாட்டேன் என்றுதானே கேட்கிறான். இதைச் செய்ய நமக்கு என்ன கஷ்டம்? என்று கிராமத் தலைவரும் கூறி வந்தார். இதனால் இவனுக்கு வாழ்நாள் முழுவதும் எப்படி வேலை கொடுப்பது என்ற பயத்துடனே மக்கள் வாழ்ந்தார்கள். அழகிய இயற்கைச் சூழ்நிலை இருந்தாலும், அங்கு சென்று அதை அனுபவிக்க எவரும் துணியவில்லை. அதற்கு அந்த அரக்கன்தான் காரணம். அவன் அந்தக் காட்டில் அட்டகாசம் செய்து கொண்டிருந்தான். அவனை வென்று வருவதாகச் சொல்லிச் சென்றவர்கள் எவரும் உயிருடன் திரும்பவில்லை. அவர்கள் அந்த அரக்கனுக்கு உணவாகிப்போனதுதான் மிச்சம். இந்த நிலையில் அந்த ஊருக்கு ஒரு ஏழை அந்தணன் பிழைப்புத் தேடி வந்தான். மந்திரன் என்பது அவனது பெயர். வறுமையால் வாடிய அவனை ஒருநாள் அந்த ஊர் மக்கள் அழைத்து. 'இதோ பார் மந்திரன் உன் வறுமை நாங்கள் ஒரு வழி சொல்கிறோம்' ஊர் எல்லையில் உள்ள காட்டில் ஒரு அரக்கன் இருந்து கொண்டு இந்த ஊரை பயமுறுத்திக் கொண்டிருக்கிறான். அவனை நீ வென்றுவிட்டால் உனக்கு வேண்டிய பணம் கொடுப்போம். இந்த ஊரில் இங்கேயே நீ இருக்கலாம் என்று ஆசை காட்டினார்கள். மந்திரனும் உடனே சம்மதித்தான். ஒரு நாள் கிராமமக்கள் வழியனுப்பிவைக்க மந்திரன் காட்டை நோக்கிப் புறப்பட்டான். நடுக் காட்டை அடைந்தான். சற்றுச் சிந்தித்தான். சற்று நேரம் அந்தக் காட்டின் அழகை ரசித்துக் கொண்டு நின்றான். காட்டின் நட்டநடுவே அழகிய மரங்கள் முறிந்தும் நசுங்கியும் இருப்பதைப் பார்த்தான். அதெல்லாம் அந்த அரக்கனின் வேலை என்பதைப் புரிந்து கொண்டான். திடீரென்று பெருங்குரல் ஒன்று கேட்டது. இடியிடிப்பது போன்ற குரல் கேட்டு மந்திரன் சற்று நடுங்கியபடி மரத்தின் மறைவில் சென்று மறைந்து நின்று கொண்டான். பெரும் உறுமல் சத்தத்துடன் அட்டகாசமாக அந்த அரக்கன் வந்து கொண்டிருந்தான். இங்குமங்கும் பார்த்தான். யாரது என்னிருப்பிடம் வந்திருப்பது? என்று உறுமினான்.

சற்று நேரத்தில் சற்றே நடுங்கிய உடலுடன் மந்திரன் அவன் முன் நின்றான்.

யார் நீ? எனக்கு வேலை கொடுக்க உன்னால் முடியுமா? சீக்கிரம் வேலை கொடு. இல்லையேல் உன்னை விழுங்கிவிடுவேன் என்றபடியே மந்திரனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான் அரக்கன்.

மந்திரனின் அறிவு விழித்துக் கொண்டது. தன் குரலைக் கனைத்துக் கொண்டான். என்னைக் கீழே இறக்கிவிடு, உனக்கு வேலை தருகிறேன் என்றான். உடனே இங்கே ஒரு அழகிய அரண்மனையைக் கட்டு என்றான் மந்திரன். உடனே ஒரு எஜமானிடம் காட்டும் மரியாதையைக் காட்டி நின்ற அரக்கன் அங்கே ஒரு அழகிய அரண்மனையைக் கட்டி முடித்தான். அடுத்தநொடி எனக்கு அடுத்தவேலைகொடுஎன்றுநின்றான். இங்கு ஒரு அழகிய தோட்டம் அமைத்துக்கொடு என்றான். அதுவும் அடுத்த நொடியில் நடந்து முடிந்தது. செல்வமும் பணியாள்களும் நிறைந்தனர். அந்தக் காடே ஒரு நகரமாயிற்று. ஆனாலும் வேலையில் அரக்கன் சலிப்புக் காட்டவில்லை. மீண்டும் வேலை கொடு என்றான் அரக்கன். மந்திரன் சிந்தித்தான். இனியும் என்ன வேலை கொடுப்பது என்று தெரியவில்ல. திடீரென்று அவன்முன் புறமாக ஒரு நாய் ஓடிற்று. அதைப் பார்த்ததும் மந்திரனுக்கு ஒரு சிந்தனை தோன்றியது. நீ எல்லா வேலையையும் மிக எளிதாகச் செய்தாய். நான் இப்போது சொல்லும் வேலையை நீ செய்து முடித்துவிட்டுத்தான், மறு வேலை கேட்டு வர வேண்டும் என்று கட்டளை இட்டான். சரி மலையைப் பிளக்க வேண்டுமா? மரத்தைப் பிடுங்க வேண்டுமா? என்று அரக்கன் கத்தினான்.

அது எல்லாம் வேண்டாம் . ஏ அரக்கனே, இந்த நாயின் வால் வளைந்துள்ளது அல்லவா? அதை நிமிர்த்திவிட்டு வா. என்று சொல்ல அந்த அரக்கனும் நாயின் பின்னே ஓடினான். கடைசி வரை நாயின் வாலை நிமிர்த்தவே முடியவில்லை. அரக்கன் ஓடியே சென்று விட்டான். அந்த இடத்துக்குவந்த கிராம மக்கள் மந்திரனுடைய துணிச்சலையும் புத்திக் கூர்மையையும் பாராட்டி அவனை அந்த இடத்துக்கே அரசனாக முடிசூட்டினார்கள். மந்திரன் மக்களுக்குச் சேவை செய்து வெகுகாலம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான்.

எவ்வளவோ செயல்களைச் செய்து முடித்த அரக்கனாலேயே நாயின்வாலை நிமிர்த்த முடியாமல்போனது. இதுபோல சிலரை எம்மால் மாற்றவே முடியாது. இதைப் புரிந்து கொண்டு. நாம் வாழவேண்டும்.






## வாழ்க்கையில் நீங்கள் வெற்றி பெற மூன்று வழிகள்

1. பிறரைக்காட்டிலும் அதிகமாக அறிந்து கொள்ள முயலுங்கள்.
2. பிறரைக்காட்டிலும் அதிகமாக உழைக்கக் கற்றுக்கொள்ளுங்கள்
3. பிறரைக் காட்டிலும் குறைவாகப் பிறரிடமிருந்து பெற முயலுங்கள்.

–ஹிட்லர்–



## விடுகதைகளும் விடைகளும்

1. மண்ணுக்குள்ளே கிடப்பான், மங்கலகரமானவன் அவன் யார் ?
2. வெள்ளை ஆளுக்கு கறுப்புத் தலைப்பாகை. அது என்ன?
3. ஆடும் வரை ஆட்டம் , ஆடிய பின் அமைதி அது என்ன ?
4. கடல் நீரில் வளர்ந்து , மழை நீரில் மடிவது அது என்ன ?
5. சிவப்பு அக்கா, குளித்தால் கறுப்பு அது என்ன ?
6. காலால் தண்ணீர் குடிப்பான், தலையால் முட்டையிடுவான் அவன் யார்?
7. எட்டாத ராணி இரவில் வருவாள். பகலில் மறைவாள் அவள் யார்?
8. நடந்தவன் நின்றான். கத்தியை எடுத்து தலையைச் சீவினேன். மறுபடி நடந்தான். அவன் யார்?
9. வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு. வயிறில்லை. அது என்ன?
10. அம்மா போடும் வட்டம்,பளபளக்கும் வட்டம்,சுவையைக் கூட்டும் வட்டம். சுட்டுத் தின்ன இஷ்டம். அது என்ன?

1. மஞ்சள்
2. தீக்குச்சி
3. இதயம்
4. உப்பு
5. அடுப்புக்கரி
6. தென்னைமரம்
7. நிலா
8. பென்சில்
9. அகப்பை
10. அப்பளம்

# அலுவலகத்தில் பெண்கள்..!



இன்றைய சூழலில் ஆணும் –பெண்ணும் சேர்ந்து வேலை செய்வது என்பது தவிர்க்க இயலாதது. இப்படிப்பட்ட சூழலில் சக ஆண்களிடம் இருந்து பிரச்சினைகள் வராமல் இருக்கவேண்டுமெனில் அவர்களிடம் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? பழக்கத்தின் எல்லை எது வரை இருக்கலாம்? இதோ சில பயனுள்ள ஆலோசனைகள்!

- எமது உடைகள் எதிரிலிருப்பவரின் உணர்வுகளைத் துண்டாமல் இருப்பது நல்லது. அதனால்தான் ஆள்பாதி ஆடை பாதி என்றார்கள். நவீனரக ஆடை அணிந்தாலும் கூட, நேர்த்தியாக அணியுங்கள்
- முக்கியமாக உங்களுடன் வேலை பார்க்கும் ஆண்களிடம் எம்முடைய சொந்த விடயங்களைப் பங்கு போடாதீர்கள். அங்கேதான் ஆரம்பிக்கிறது பல பிரச் சினைகள்.
- சொந்தக் குடும்ப விடயங்களுக்கு உடன் வேலைபார்க்கும் ஆண்களிடம் ஆலோசனைகளைக் கேட்காதீர்கள். இதனால் அவர்கள் உங்கள் மேல் அதிக கரிசனை எடுக்க முன் வருவார்கள்!
- உடன் வேலை செய்தாலும் சொந்தத் தொலைபேசி இலக்கங்களை யாருக்கும் கொடுக்காதீர்கள். நம்பிக்கைக் குரிய நபர்களைத் தவிர.
- சில நேரங்களில் உயர் அதிகாரி களே தொல்லைகள் தருவார்கள். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செய்யாமல், பிரச் சினைகள் தீரும் வகையில் மிகக் கவனமாகக் கையாளுங்கள். உயர் அதிகாரிகளுக்கு ஒத்துழைக்கவில்லை என்றால் அவர்களின் பழிவாங்கும் படலம் உங்கள் வேலைகளில் குறை கண்டுபிடிப்பதில் ஆரம்பிக்கும். அதனால் முடிந்தவரை வேலைகளில் தவறு செய்யாதீர்கள்.
- ஆண் நண்பர்களிடம் கை குலுக்குவது தவறல்ல. அதற்காக எல்லாவற்றுக்கும் கைகொடுப்பது தொட்டுப் பேசுவது கூடாது. இதனால் அவர்களுக்கு உங்கள் மேல் தப்பான எண்ணம் வரக் காரணமாக அமையும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### சின்னப்பொடி இளையதம்பி



பலாலியைப் பிறப்பிடமாகவும் ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடி இளைய தம்பி 20.09.2015 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடி - சின்னப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப் பிள்ளை - பத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற லட்சுமியின் அன்புச் சகோதரனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் ஜதீஸ்வரன், ஜெகதீஸ்வரன், கேதீஸ்வரன் (உரிமையாளர் K.K.J. Furniture Centre) லோகேஸ்வரன்(கட்டார்), வனஜா, வஷ்தலா, விக்னேஸ்வரன் (அமெரிக்கா),ரவிச்சந்திரன் (பிரான்ஸ்) நஞ்சினிச்செல்வம் ஆகியோரின் அன்புத் தந்தையும் சாரதாதேவி,வனிதா,கோசலா, கலைவாணி, ஈஸ்வரன்,சுதாயினி,வினோதினி சிவதனுகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுஜீவன் (பிரான்ஸ்), றஜீவன், லக்சனா, ஜெயரூபன், நிதர்சன், றுசிக்கா, ஜனூறன், கீர்த்தனா, யதுசன், கம்சிகா, சயறூபன், நிக்சனா (அமெரிக்கா), நிருசன் (பிரான்ஸ்), லக்ஷா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2015) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரெழு பொக்கனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.
0779037203

தகவல் :
குடும்பத்தினர்


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111



## பதவி வெற்றிடங்கள்

20 வருடகால பாரம்பரியத்தை இலங்கையில் கொண்டுள்ள சர்வதேச நிறுவனமாகிய Granton Company இன் புதிய கிளைகளுக்கு

- முகாமையாளர்
- மேற்பார்வையாளர்
- உதவி முகாமையாளர்
- விநியோகத்தர்

போன்ற பதவி வெற்றிடங்கள் உள்ளன. ஆர்வமுடைய, தகுதியுடைய ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

20 பேருக்கு மட்டும் முன்னுரிமை

பயிற்சி இல்லாதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.
பயிற்சியின்போது (Earn 12000-15000/=)
பயிற்சியின் பின் 40,000/= மேல் (குறைந்தது)

தொடர்புகளுக்கு: 0774458134, 0767280492
முகவரி: இல.225, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### தங்கம்மா நல்லதம்பி

(இளைப்பாறிய அதிபர், அச்செழு மெ.மி.த.க பாடசாலை, தலைவர் அச்செழு சி.கூ.சு சங்கம்)



அச்செழுவைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தங்கம்மா நல்லதம்பி நேற்று (21.09.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - நாகமுத்து தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, பூரணம், கந்தையா (ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2015) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்செழு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"அன்புவாசம்"
அச்செழு, நீர்வேலி.

தகவல் :
குடும்பத்தினர்.

## மாபெரும் மென்பந்து ஆட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி

விசுவமடு தோழர்கள் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விசுவமடு மகா வித்தியாலய பழைய மாணவர்களின் ஆதரவில் அணிக்கு 11 பேர், 10 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 26.09.2015 அன்று ஆரம்பமாக இருப்பதனால், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட கழகங்களை எதிர்வரும் 24.09.2015 வியாழக்கிழமைக்கு முன்பாக விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
விசுவமடு - நிசா ஆட்ஸ்
0787664500
கிளிநொச்சி - நிகல்யா வாணிபம்
0777446856
புதுக்குடியிருப்பு - பூவிழி நகை மாடம்
0777446856
முள்ளியவளை- சதீஸ் வேணர்ஸ்
024 7200234
(63314) (10.17)


## சாரதி தேவை

நடமாடும் பாண் விற்பனை செய்யும் வான் செலுத்துவதற்கு நன்கு அனுபவமுள்ள சாரதிகள் தேவை.

தொடர்பு: புதிய துர்க்கா வெதுப்பகம்
கலைவாணி வீதி, பொற்பதி றோட்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
(64823) (10.17)


## மரண அறிவித்தல்

### இளையதம்பி சதாசிவம்

(முன்னாள் கொக்குவில் கிராமசபை உறுப்பினர்)



தோற்றம்: 03.03.1937
மறைவு : 16.09.2015

புங்குடுதீவு குறிக்காட்டுவானை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிட மாகவும் கொண்ட இளைய தம்பி சதாசிவம் 16.09.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான இளைய தம்பி- வள்ளியம்மை தம்பதியரின் கடைசி புதல்வனும் காலஞ் சென்றவர்களான நாகலிங்கம் -செல்லம்மா தம்பதியரின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான பொன்னுத்துரை, பாலசிங்கம், நல்லையா , தனலட்சுமி, இராசதுரை மற்றும் பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ் சென்றவர்களான தில்லை வனம் , கனகம்மா, அன்ன லட்சுமி, செல்லத்துரை, சிவபாக்கியம்,முத்துத்தம்பி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ் சென்றவர்களான இராசம்மா, நாகம்மா, நாகராசா , கணேஸ், அன்னலட்சுமி மற்றும் கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும் காலஞ் சென்றாவர்களான நாகலிங்கம், கந்தையா, பரமேஸ்வரி, செல்வரத்தினம்,பரமேஸ்வரி மற்றும் தவமணிதேவி ஆகியோரின் அன்பு சகலனும் சதானந்தன் காலஞ்சென்ற இரத்தினபாலன் மற்றும் சந்திரபாலன், சூரியபாலன்,உதயபாலி ,உதயகலா, தவச்செல்வி,கருணபாலன் ஆகியோரின் அன்பு தந்தையும் கீதா,ஜெசிந்தா,உஷா, சியாமளா,ஜெகதீஸ்வரன் ,சிறிகாந்தன் காலஞ்சென்ற சிவனேசன் மற்றும் புஸ்பா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சதீஸ்,கிஷாந், திவ்யா, துஷியந்தி, விஜியந்தி, டானியல், சதீஸ், யனேஸ், யதூஸ், ஜிவிகாஷ், சகீன்,சுரேன் ,பிரதீப்,அனு,பிரதீபா, காண்டீபன்,பிரசாந்தன், பிரியங்கா,நிஷாந்தன், கஜன்,பிரவீனா,வவிதா,சுயானா ஆகியோரின் அன்புப் பேரனும் துசன்,றோஸ், பிரந்துஷன், பானுஜா, அனுஜன், ஜாதவி,ராகவி, துசான்,ஜஸ்வின் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23. 09.2015) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாமகள் லேன்
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்

தகவல்: குடும்பத்தினர்
077 190 9253, 021 221 2277

## அருள்மிகு ஆலடி முருகன் தேவஸ்தானம் கட்டடநிதி வளர்ச்சிக்கான அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்


முதலாம் பரிசுக்கான இலக்கம் - 132 (தையல் இயந்திரம்)
இரண்டாம் பரிசுக்கான இலக்கம் - 1597 (துவிச்சக்கர வண்டி)
மூன்றாம் பரிசுக்கான இலக்கம் - 2597 (மேசை மின்விசிறி)
ஆறுதல் பரிசுக்கான இலக்கங்கள் - 308,258,2210,2918, 1950

கலைமதி வீதி,
புத்தூர் மேற்கு, புத்தூர்.

ஆலய பரிபாலன சபையினர்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சிவானந்தராசா



உயரப்புலம், ஆனைக் கோட்டையைப்பிறப்பிடமாகவும், வீர பத்திரர் ஆலய வீதி, கல்வியங் காட்டை வசிப்பிடமாகவும், தற்போது புலவனார் வீதி, கல்வியங் காட்டில் வசித்து வந்தவருமாகிய சின்னத்தம்பி சிவானந்தராசா 20.09.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பார்த்தசாரதி - சரஸ்வதியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மீனலோஜினியின் (தேவி) பாசமிகு கணவரும், காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சின்னையா மற்றும் செல்லையா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவலோஜினி, காலஞ்சென்ற தயானந்தன், மற்றும் ஜெயலோஜினி, ஜெயானந்தன் (மேக்கன் ரைல் பாதுகாப்பு சேவை), குணானந்தன் (கட்டடப் பொருள் விநியோகஸ்தர்), சுதானந்தன் (யாழ். பிரதம தபாலகம்) ஆகி யோரின் பாசமிகு தந்தையும், பிறேமஜெயந்தன், செல்வவிபூஸ், கிருஸ்ணகாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுஷன், மருதவானன், காயத்திரி, கனிமதி, அபிஷன், கஜீவன் ஆகியோரின் அருமைப் பேரனும் சுசிலாவதி, யோகநாதன் (லண்டன்), பத்மலீலா (கொழும்பு), ரவீந்திரநாதன் (கனடா), ஜெயந்திமாலா (ஜேர்மன்), மணிமாலா (லண்டன்), சாந்தினி, ரஞ்சன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பவானி மற்றும் நந்தினி (லண்டன்), சுகந்தினி (லண்டன்) ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.09.2015) புதன்கிழமை புலவனார் வீதி, கல்வியங்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணம், ஸ்ரீ வேங்கடேச
## தேர்த் திருவிழா சிற

திருக்கோவில்கள் அமைப்பில் வைணவம் சார்ந்த வைகாசன ஆகம விதிறைகளுக்கு இணங்க யாழ் நகரில் ஏறத்தாழ 14ஆம் நூற்றாண்டில் அரசோச்சிய தமிழ் மன்னனாகிய குணபூசன ஆரியன் செகராச சேகரனின் காலத்து சிறிய உருவில் வைணவ வழிபாட்டுத் தலமாக உருப்பெற்ற வண்ணை ஸ்ரீவெங்கடேசப் பெருமாள் ஆலயம் ஒல்லாந்தர் காலத்தில் புனர்நிர்மாணம் செய்யப் பெற்றது. பின்பு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வளர்ச்சி பெற்று சகல பரிவார மூர்த்திகளின் சந்நிதிகள் அமையப்பெற்ற நிலையில் பிரசித்தமான நவக்கிரக பீடத்தை தன்னகத்தேயுடைய ஒரு திவ்விய ஷேத்திரமாக விளங்கத் தொடங்கியது. அன்று தொடங்கி இன்று வரை இத்தேவஸ்தானத்தை வைணவ சமயத்தைச் சார்ந்த பத்ம சாலிச் செட்டிப்பிள்ளைகள் நிருவாகப் பரிபாலனம் செய்து வருகின்றனர்.

தமிழ் நாட்டில் உள்ள சைவாகம விதிக்கு உட்பட்ட சைவாலயங்களின் அமைப்பில் இருந்து சிறிது வேறுபட்ட தன்மையை உடையவை விஷ்ணு ஆலயங்கள். விஷ்ணு ஆலயங்களின் அமைப்புத் தன்மையாவன கர்ப கிருஹம் அர்த்த மண்டபம், ஸ்நபன மண்டபம், மகா மண்டபம் இதன் முடிவில் தான் மாற்றம் ஏற்படுகின்றது. இதனையடுத்து சிவாலயங்களில் நந்திபீடம் இடம் பெறுகின்றது. வைணவ ஆலயங்களிலும் இதே போன்று அவ்விடத்தில் கருடன் எழுந்தருளியிருக்கின்றார். ஆனால் இவர் தனது எஜமானாராகிய விஷ்ணு பகவானை தனது விரிந்த சிறகுகளால் மறைத்த வண்ணம் கைகூப்பி வணங்கிய வாறு நிற்கின்றார். இதனால் பக்தர்கள் கர்ப்ப கிருஹத்தில் வீற்றிருக்கும் பகவானை பெருமாளை நிருத்த மண்டபத்தினின்று வணங்க வியலாது. தெற்கில் உள்ள-வாயில் வழியாக மகா மண்டபத்தை அடைந்து தான் பகவானை சேவிக்க இயலும் என்பது உணரப் பாலது. இதன் காரணமாக இவ்வாலயத்திலும் இவ் வைணவ ஆகம விதிக்கு அமைய நிருத்த மண்டபத்தில் எழுந்தருளி நிற்கும் கருடனுக்கு ஓர் அளவில் கர்ப்பக் கிருஹத்தை மறைக்குந் தன்மையில் ஒரு கோவில் சிறிய அளவில் உருவாக்கியுள்ளார்கள். இக்கோவில் ஸ்தாபிக்கப்பட்ட காலம் முதல் ஏறத்தாழ கி.பி 1790ஆம் ஆண்டுவரை சிறிய உருவிலான சிலாவிக்கிரகமாகிய ஸ்ரீவேங்கடேச மூர்த்தியே மூல மூர்த்தியாக இருந்து வந்தார். பின்பு இச்சாகியத்தினர் பலரின் விருப்பத்திற்கு ஏற்ப இத்தேவஸ்தானத்தை பரிபாலித்தவர்கள் தமிழ்நாடு சென்று ஸ்ரீதேவி பூமிதேவி சமேதரான ஸ்ரீவரதராஜப்பெருமாள் முகூர்த்தத்தை கொணர்ந்து இக்கோவிலின் கர்ப்பக் கிருஹத்தில் ஸ்தாபித்துவிட்டு ஸ்ரீவெங்கடேச மூர்த்தியை அகற்றி ஸ்தலவிருட்சமாகிய பலாவின் கீழ் வைத்து விட்டனர். சிறிது காலத்தின் பின்பு இத்தேவஸ்தானத்தின் வருமானம் சீரும் சிறப்பும் குன்றத் தொடங்கியது. இதன் தன்மையை ஆகம சாஸ்திர வழிறையில் ஆராய்ந்து இதற்குரிய பிராயச்சித்தத்தை இயற்றுவதற்காக தமிழ்நாடு சென்று ஒருசில வைணவ சமய ஆச்சாரிய விற்பன்னர்களின் ஆலோசனை பெற்று வந்து 1940ஆம் ஆண்டளவிற் இத் தேவஸ்தானத்தில் சகல விக்கிரகங்களையும் பாலஸ்தாபனம் செய்து இத் தேவஸ்தானத்தின் ஆதி மூலமூர்த்தியாகிய சிறிய உருவிலான ஸ்ரீவேங்கடேசப்பெருமாளை முன் போல் கர்ப்பக்கிருஹத்தில் ஸ்தாபித்து இவரின் பின்புறத்தில் இவரின் சாயா விக்கிரகமாக ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதரான ஸ்ரீவரதராஜகூர்த்தத்தையும் கர்ப்பக்கிருஹத்...


சிறிநதியா
நகைமாளிகை
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2709
இல.56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 6744
சிறிநதியா ஸ்ருடியோ
அன்ட் டிஜிற்றல் கலர் லாப்
108 A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 021 222 8412

கிருபா
லேணர்ஸ்
(அரச அங்கீகாரம்பெற்ற
A தர கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை)





0772 422 622, 0717 776 969, 0212 226 688
பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.

அல்டி
எலக்ரோனிக்ஸ்
All Kinds of Computers, Electronic Items & Accessories
hp Kingston intel
ASUS SONY SAMSUNG
CCTV
BEST CHOICE
No:15, Stanley Road, Jaffna. Tel: 021 222 2676





(c/19320) (10.17)
RUBA
VERSATILE TRADERS
104A, STANLEY ROAD, JAFFNA.
021 222 8330


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# , வண்ணையம்பதி
# வரதராஜ பெருமாள்
# றப்பு மலர் 22-09-2015

## ஆலய அமைப்பும் சிறப்பும்

ஸ்தாபித்து 1941ஆம் ஆண்டில் புனருத்தாரண கும்பாபிஷேகத்தை மூலஸ்தானம் உட்படச் சகல பரிவார மூர்த்திகளுக்கும் நிகழ்த்தினார்கள்.

ஆலய அமைப்பில் இராஜகோபுரங்கள் மிக க்கியத்துவம் பெறுகின்றன. இத்தேவஸ்தானத்தில் 1973ஆம் ஆண்டில் ஏழுதளங்களை உடைய இராஜகோபுரம் ஒன்று உருவாக்பபெற்று 1978ஆம் ஆண்டில் நிறைவு பெற்று அவ்வாண்டிலேயே இராஜகோபுரக் கும்பாபிஷேகம் நடத்தப்பெற்றது. இதே போன்று இக்காலத்திலேயே பெரிய கண்டாமனி ஒன்றும் வார்க்கப்பெற்றது. கோபுரத்தில் ஸ்ரீராமாயண, பாரதகாவியங்களின் சில பகுதிகளும், ஸ்ரீமத்பாகவதக் கதைகளின் அம்சமாகிய ஸ்ரீகிருஷ்ணலீலைகளின் சில பகுதிகளும், ஸ்ரீமகாலக்ஷமி, ஸ்ரீஆண்டாள்தேவி, ஆதிசேஷனில் பள்ளி கொள்ளும் ஸ்ரீரெங்கநாதசுவாமி, ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் கருடனில் எழுந்தருளும் காட்சி, ஸ்ரீவரதராஜப் பெருமாளின் கதை விக்கிரகங்கள் ஆகியன விரவிக்கிடக்கின்றன.

மணிபூரகம் என்று ஆகம சாஸ்திரத்தில் கூறப் பெறும் பகுதியில் ஸ்ரீரங்கநாதரது சிலா விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இச்சந்நிதி தெற்குத் திசையை நோக்கியவாறு அமைந்துள்ளது. இவரது சிலாவிக்கிரகம் 1948ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் வடிவமைக்கப்பட்டதாகும். இவரது சந்நிதி ஸ்ரீரெங்கநாத சந்நிதி என வழங்கப்பெறுகின்றது. 1999ஆம் ஆண்டில் இவரின் சந்நிதி கப்பில் ஐந்து தளங்களையுடைய பஞ்சேந்திரிய அவஸ்தை என்று கூறப்பெறும் கோபுரம் உருவாக்கப்பெற்று, இக்கோபுர தளங்களில் ஸ்ரீ அரங்கநாதனுடைய திருவடிவம், மற்றும் ஸ்ரீகிருஷ்ணரது லீலைகளும், ஸ்ரீமகாலஷ்மியினதும், ஸ்ரீஆண்டாள் தேவியினதும், சுதை உருவங்கள் வடிக்கப்பெற்று அடியவர்களுக்கு ஆனந்தமயமான தெய்வீக காட்சிகளை அருள்கின்றன. சுதை வேலைகள் யாவும் பூர்த்தியாகி 2003ஆம் ஆண்டு ஆடி மாதம் 10ஆம் திகதி கும்பாபிஷேகம் இனிதே நடைபெற்றது. இவ் ஆலயத்தில் வருடம்தோறும் திருவிழாக்கள் மிகவும் சிறப்பாக இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.


உயர்தரத்தின் பின்னர் ESOFT உடன் இணைந்து எதிர்காலத்தை வெல்லுங்கள்!
Shaping Lives, Creating Futures.
உங்களுக்காகவே விசேடமான PEARSON (UK) அனுமதிப்பெற்ற டிப்ளோமா பாடநெறிகள் பல தற்போது ESOFT இடமிருந்து
தகவல் தொழில்நுட்பம் | வியாபார முகாமைத்துவம் | ஆங்கிலம் | விருந்தோம்பல் சேவை முகாமைத்துசம்
PEARSON
HND
Computing & Systems Development
Business Management
பாடநெறிக்கு புதிய மாணவர்கள் தற்போது இணைத்துக் கொள்ளப்படுவர்
DiTEC INTERNATIONAL Diploma in Information Technology
assured by PEARSON
DiE Diploma in English
ESOFT + Pearson (UK)
செப்டம்பர் 23க்கு முன்னர் பதிவுசெய்து
25%
50%
கழிவினை பெற்றுக்கொள்ளுங்கள்
ஏனைய டிப்ளோமா பாடநெறிகள்
- Diploma in Business Management
- Diploma in Computerized Accounting
- Diploma in Hardware & Networking
- Diploma in Software Engineering
- Diploma in Web Engineering
- Diploma in Multimedia
- Diploma in Hospitality Management

எதிர்கால தொழில்வாய்ப்பினை உறுதிப்படுத்தும் ஏனைய டிப்ளோமாக் கற்கைநெறிகள்
23.09.2015 | 26.09.2015 New Batches
Diploma in Software Engineering Duration 6 Months Free Text books
Diploma in Hardware & Networking Duration 4 Months Free Text books
Diploma in Business Management Duration 4 Months Free Text books
Diploma in Business English Duration 4 Months Free Text books
Diploma in Web Engineering Duration 6 Months Free Text books
Diploma in Computerized Accounting Duration 5 Months Free Text books
ESOFT
Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142
இலங்கையின் மிகப்பாரிய உயர்கல்வி வலையமைப்பு
www.esoft.lk



நடராசா கஜேந்தன்
நியூ மைதிலி ஜுவலர்ஸ்
KARAT METER
உங்களது தங்க நகைகளின் கரட்டை துல்லியமாக உறுதிப்படுத்துவதற்கான இலத்திரனியல் கருவி எம்மிடம் உண்டு
இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Email: newmaithily40@gmail.com



அனைவருக்கும் வேங்கடேசனின் அருள் கிட்டட்டும்
செல்வி நகைஅகம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
Manufacturers of Gold Jewels
Chelvi Nakai Agam
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
1/3, Kasthuriar Road, Jaffna.
T.P: 021 222 9441



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகம்

இடங்களுக்கு மாற்றித் திறமையான பொலிஸ் உத்தியோகத்தர்களை அங்கு நியமிக்கும்படியும் அவர் தனது உத்தரவில் வலியுறுத்தியுள்ளார்.

சுன்னாகத்தில் இரவில் மட்டுமன்றிப் பட்டப்பகலில்கூட வாள்வெட்டுக் கும்பல்கள் நடமாடிக் குழப்பம் விளைவித்தமை, இருவருக்குக் கடும் காயம் ஏற்படுத்தியமை அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையிலும் சுன்னாகம் பொலிஸார் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இந் நிலையிலேயே மேல்நீதிமன்று இந்த உத்தரவை நேற்றுப் பிறப்பித்துள்ளது.

அந்த உத்தரவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

சட்ட ஆட்சிக்கு அச்சுறுத்தலாக வீதி வாள்வெட்டுக்கள், மக்களை அச்சுறுத்தும் தன்மையான கோஷ்டி மோதல்கள், குற்றச் செயல்களை உடனடியாக அடக்க அதனுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவேண்டும்.

அண்மைக் காலமாக அடங்கிக் கிடந்த ரவுடிகளின் அட்டகாசம் மீண்டும் தலையெடுக்க அனுமதிக்கப்படமாட்டாது. ரவுடித் தனத்தில் ஈடுபடும் அனைவரையும் பொலிஸ் விஷேட அதிரடிப்படையைப் பயன்படுத்திக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவேண்டும்.

நீதிமன்றங்கள் கடுமையான உத்தரவைப் பிறப்பிக்கின்ற நிலையில் நீதிமன்ற உத்தரவுகளுக்குச் சவால் விடும் வகையில் சுன்னாகத்தில் இருக்கும் அனைத்து ரவுடிகளும் கைது செய்யப்பட வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பு, அடைக்கலம் கொடுக்கும் அனைத்துப் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களும் கைது செய்யப்பட வேண்டும்.

ரவுடித்தனம் செய்து வீதியில் வாள் வெட்டுக்களைப் பகிரங்கமாக நடத்தி மக்களுக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் இந்த ரவுடிக் கும்பல்கள் சட்ட ஆட்சிக்கு விரோதமானவர்கள், நீதிமன்ற ஆட்சிக்கு ஆபத்தானவர்கள், ஜனநாயக ஆட்சிக்கு இடையூறு விளைவிப்பவர்கள். இத்தகைய அனைவரும் இருக்கவேண்டிய இடம் சிறைச்சாலை. குற்றம் செய்துவிட்டுச் சுதந்திரமாக நடமாட எந்தவொரு ரவுடிக் கும்பலையும் அனுமதிக்கக்கூடாது.

ரவுடிக் கும்பல்களுக்கு உணவுகள், அடைக்கலம் கொடுப்பவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட வேண்டும். நீதிமன்றுக்குச் சவால் விடும் எந்த ரவுடி மகனும் யாழ்.மாவட்டத்தில் இருக்க அனுமதிக்கமுடியாது. நீதித்துறையுடன் மோதுகின்ற எந்த ரவுடிக் கும்பலுக்கும் மன்னிப்புக் கிடையாது. நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்குத் தலைவணங்காது சட்டத்தைக் கையிலெடுக்கும் இத்தகைய ரவுடிக் கும்பல்கள் ஒரு நிமிடம்கூட சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க அனுமதிக்கக்கூடாது. எனவே அனைத்து ரவுடிக் கும்பல்களையும் கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு நீதிமன்று உத்தரவு பிறப்பிக்கிறது. சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி உட்படக் குற்றவியல் வழக்குகளில் கைது நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மிகவும் பலவீனமானவர்களாக உள்ளார்கள். அவர்களிடம் திறமை காணப்படவில்லை. திறமையற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுவதாக மன்று கருதுகிறது. எனவே அவர்களுக்கு எதிராக உடனடி நடவடிக்கைகள் எடுத்துச் சுன்னாகம் பொலிஸ் பகுதி உடனடியாகச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். திறமையற்ற உத்தியோகத்தர்களைப் பொலிஸ் மா அதிபரின் அனுசரணையுடன் வேறு இடங்களுக்கு மாற்றித் திறமையான பொலிஸ் உத்தியோகத்தர்களைச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நியமிக்கும்படியும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு நீதிமன்று பணிப்புரை விடுத்துள்ளது. (த–4)

## 7, 700 பொதுமக்களே

நிலையில், இந் தியன் எக்ஸ்பிரஸ் ஊடகத்துக்கு நேர் காணல் வழங்கியுள்ள, ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம, 2011 ஆம் ஆண்டு, ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் நியமித்த மர்சுகி தருஸ்மன் தலைமையிலான நிபுணர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டது போன்று, இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்படவில்லை. பெரும்பாலும், 7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தான் கொல்லப்பட்டிருக்கலாம்.

போர்க் காலத்தில் நிகழ்ந்த உயிரிழப்புக்கள் தொடர்பாக எமது ஆணைக்குழு இதுவரை துல்லியமான எண்ணிக்கையைக் கண்டறியவில்லை. எனினும், ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது போன்று நிச்சயமாக 40 ஆயிரம் பேர் கொல்லப்படவில்லை. அந்த அறிக்கையில் கூட, உயிரிழந்தோரின் எண்ணிக்கை தொடர்பாக உறுதியாகக் கூறப்படவில்லை. 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தான் கூறப்பட்டுள்ளது.

மோதல் பிரதேசத்தில் புள்ளி விபரவியல் திணைக்களம் வீடு வீடாக நடத்திய கணக்கெடுப்பு மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்பப்பட்ட அறிக்கைகளில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 700 ஐ நெருங்கியதாக இருக்கலாம்.

எனினும், எமது ஆணைக்குழு இதுபற்றிய துல்லியமான எண்ணிக்கை பற்றிய முடிவு எதற்கும் வரவில்லை. ஆனால் 40 ஆயிரம் என்பது மிகையான கணிப்பு என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த–5)

## 26 ஆவது மாநிலமாக

கொடுத்து வேலையைச் செயற்படுத்த அரசு முயற்சிக்கின்றது.

மலையக மக்களைப் போன்று தமது நாட்டவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதை இந்தியா வழமையாகக் கொண்டுள்ளது. இதனால் பல அரசியல், சமூக பிரச்சினைகள் ஏற்படுகின்றது.

போர்க்குற்ற அறிக்கை மூலம் வெள்ளையர்களுக்கு இலங்கையில் வழக்கு வாதிட இடமளிக்க முடியாது என்றும் காலனித்துவம் நிலவிய போதே அதனைச் செய்ய முடியும். ஆனால் இலங்கை இன்று சுயாதீன அரசு – என்றார். (த–வ)

## உள்நாட்டு

வெளியிடுகையில்,

இலங்கை மீது சர்வதேச விசாரணை வேண்டும் எனத் தமிழக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் எந்தப் பயனும் இல்லை. ஏனெனில் வெளிநாட்டுக் கொள்கையில் தமிழக அரசு தலையிட அதிகாரம் இல்லை.

நான் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்துப் பேசினேன். அப்போது இலங்கையில் சர்வதேச விசாரணை எதுவும் தேவையில்லை என அங்குள்ள தமிழ்க் கட்சிகளும், தமிழ் அமைப்புகளும் கூறியுள்ளன. மேலும் உள்நாட்டு விசாரணைக் குழுவில் வெளிநாட்டினர் இடம்பெறலாம் என்றும் ரணில் ஆலோசனை தெரிவித்தார் என்று கூறினார். (த–வ)

## நான் ஊமை;

கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றைய தினம் முதலமைச்சர் தனது உரையில், இந்திய–இலங்கை மீனவர்களின் பிரச்சினைக்கு இரு நாட்டு அரசுகளும் பேசித் தீர்வு காணவேண்டும் எனக் கூறியிருந்தார். இது தொடர்பில் அவரிடம் விரிவான தகவலைப் பெற முயன்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.மேற்கொண்டு அவர் எதனையும் தெரிவிக்கவில்லை. (த–105)

## அரசமைப்புத்

வடக்கு–கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தமிழ் அரசியல் கட்சிகளுடன் அரசு பேச்சு நடத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து இணக்கம் காணப்பட்டால் அதன் பின்னர் அரசியல் சாசனத் திருத்தங்களை முன்மொழிந்து அவற்றை நாடாளுமன்றில் அனுமதிக்காகச் சமர்ப்பிக்க முடியும் .

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இந்த யோசனை நிறைவேற்றப்பட வேண்டும். தேசிய ரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கிலேயே ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படுகின்றது. நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலமின்றித் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுத் திட்டங்களை முன்வைக்க முடியாது.

போர்க்குற்றச் செயல்கள் குறித்த சர்வதேச அழுத்தங்களை எதிர்நோக்கப் பிரதான கட்சிகள் இணைந்து செயற்படவேண்டியது அவசியமானது. பிரதான இரண்டு அரசியல் கட்சிகளும் இணைந்து செயற்பட்டால் மக்களும் பிரதான இரண்டு கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளது என்பதை ஐ. நா. அமைப்பிடம் கூறமுடியும–என்றார். (த–வ)

## கிளிநொச்சி

கொண்டு கேட்டபோது ,

தடயப் பொருள்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்ட அறை உடைக்கப்பட்டு 12 பைக்கற்றுக்களில் இருந்த சுமார் 27 கிலோ 260 கிராம் கேரளக் கஞ்சா திருடப்பட்டுள்ளது. இது தொடர்பில் நீதிமன்ற பதிவாள ரினால் கிளி நொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவ செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் நேற்று இரவு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கிளிநொச்சிப் பொலிஸார் கூறினர். (த–ரி–105)

## இந்திய மீனவர்

இதற்காகப் பணியாற் றுவதற்கு மேலதிக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவதாகக் கூறியிருந்தும் இதுவரை, உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. அதேநேரம், அலுவலகம் கூட அமைக்கப்படவில்லை என்பது வருத்தமளிக்கிறது. இந்த விடயங்களைக் குறித்த அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவேண்டும். மாசுக்களைத் தவிர்க்கும் பிரதேசமாக இலங்கைக் கடற்பிரதேசம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எமது கடல் வளத்தை இந்திய மீனவர்களும், தென்னிலங்கை மீனவர்களும் சுரண்டிச் செல்கின்றார்கள். இதனை நிறுத்துவதற்கு இரு நாட்டு அரசுகளும் பேசி நடவடிக்கை எடுப்பது அவசியம்.

இயற்கை வளத்தைப் பேணிப்பாதுகாப்பது எம் அனைவரின் தலையாய கடமையாகும். எனவே, கடலில் வீசப்பட்ட பிளாஸ்ரிக் மற்றும் கழிவுப் பொருள்களை அகற்றுவ்துடன், எதிர்காலத்தில் கடல் வளங்கள் மாசுபடாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். அனைவரும் இணைந்து கடல்வளத்தைப் பாதுகாப்பதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்–என்றார். (த–106)

## உள்ளக

அரசு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாகத் தகவல் வெளியிட்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச,

இந்த அவசர கோரிக்கை அடங்கிய கடிதங்கள், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளின் தலைவர்களிடம் கையளிப்பதற்காகக் கொழும்பில் உள்ள அந்தந்த நாடுகளின் தூதரகங்களில் கையளிக்கப்பட்டுள்ளன.

மேலும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திடமும், இந்த வேண்டுகோள் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிததத்தில் புதிய அரசு, நீதித்துறை சுதந்திரத்தை உறுதிப்படுத்தியுள்ளதாகவும், அரசியல் தலையீடுகள் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும், மனித உரிமை விவகாரங்களைச் சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பின்றி, உள்நாட்டு நீதிமன்றங்களால் தீர்க்க முடியும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது– என்றார்.

போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரிக்க, சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்புடன், கலப்பு விசாரணை நடத்த வலியுறுத்தும், தீர்மான வரைவை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளிடம், அமெரிக்கா கையளித்துள்ள நிலையிலேயே, இலங்கை அரசின் சார்பில் இந்த அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த–5)

## அமெ.

தில் உள்ளடக்கப்பட்டுள்ள வாசகங்கள் தொடர்பில் எதிர்ப்பையும் கரிசனையையும் வெளியிட்டுள்ளனர்.

ஜெனிவாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முதலாவது முறைசாராக் கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட ஜெனிவாவுக் கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க, வரைவுத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள வாசகங்கள் தீர்ப்பிடுபவையாகவும் எந்த விடயங்களைச் செய்யவேண்டும் எனக் கூறுபவையாகவும் உள்ளதெனச் சுட்டிக்காட்டியதுடன் தற்போது இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லெண்ண நடவடிக்கைகள் மற்றும் சீர்திருத்தங்களை தாங்கிய உணர் வலைகளைக் கொண்டிருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

வரைவுத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள வாசகங்கள் இணைந்து செயற்பட்டு கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு துணை செய்யமாட்டாது எனக் குறிப்பிட்ட ரவிநாத் ஆரியசிங்க, தற்போதுள்ள வரைவுத் தீர்மானத்திலுள்ள பல பந்திகள் இலங்கை அரசின் நல்லிணக்க முயற்சிகளுக்கு முரண் நிலைப்பாட்டை ஏற்படுத்தக் கூடிய வையாகவும் சமூகங்களை துருவமயப்படுத்துவதாகவும் நல்லிணக்கத்திற்கான வழியை நோக்கியதாக மிகக்கவனமாக களத்தில் உருவாக்கப்பட்ட சூழ் நிலையை பாழ்படுத்துவதாகவும் கலந்துரையாடல்களுக்குத் தேவையான இடைவெளியைக் கட்டுப்படுத்துவதாகவும் அமைந்துள்ளதெனச் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய அணுகுமுறையிலுள்ள உண்மையான ஆபத்து என்னவெனில், இது பாதகமான அர்த்தப்படுத்தல்களுக்கு வழிசமைப்பதுடன் பாழ்படுத்த எண்ணுபவர்களுக்கே உதவுவதாக அமையும் என்று அவர் மேலும் கூறினார்.

இந்த முதலாவது முறைசாராக் கூட்டம் ஜெனிவாவில் உள்ள ஐ.நா தலைமையகத்தின் 23ஆவது அறையில் நேற்றுக் காலை 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை (ஜெனிவா நேரம்) நடை பெற்றது . அமெரிக்காவின் வரைவுத் தீர்மானம் தொடர்பாக நேற்று இடம் பெற்ற முதலாவது முறைசாராக் கலந்துரையாடலின் போது அதற்கு ஆதரவாக கனடா, சுவிற்சர்லாந்து, அமெரிக்கா மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் உறுதிபடக் கருத்துக்களை வெளியிட்டன.

இலங்கைகான அமெரிக்காவின் தூதுவர் அதுல் கெஷாப்பும் பிரசன்ன மாகியிருந்த இந்த முதலாவது முறைசாராக் கலந்துரையாடலில் வரைவுத் தீர்மானத்தை இன்னமும் நீர்த்துப்போக நடவடிக்கை எடுக்கவேண்டும் என கியூபா, பாகிஸ்தான், சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் வலியுறுத்தின.

இலங்கையின் நன்கறியப்பட்ட ஊடக செயற்பாட்டாளர் சுனந்த தேசப்பிரிய தனது டுவிட்டர் தளத்தில் நேற்றைய கலந்துரையாடல் பற்றி கருத்துவெளியிடுகையில் சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் எதிர்க்கின்ற நிலையிலும் சுவீடன் ஆதரவளிக்கின்ற நிலையிலும் ஆஸ்திரேலியா, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகள் கருத்தொருமைப்பாட்டை வலியுறுத்துகின்ற நிலையிலும் பிளவு உருவாகின்றது எனச் சுட்டிக்காட்டியிருந்தார்.

வரைவுத் தீர்மான வாசகத்தில் அமெரிக்க கலப்பு நீதிமன்றம் (ஹைபிரிட்) என்பதற்குப் பதிலாக நம்பகரமான என்ற சொற்பதத்தை முன்மொழிந்ததாகவும் சுனந்த தேசப்பிரிய குறிப்பிட்டிருந்தார்.

கியூபா வேண்டுகோள் விடுத்ததன் பிரகாரம் முறைசாராக் கலந்துரையாடலின்போது புகைப்படங்கள் எடுப்பதை அமெரிக்கா தடை செய்ததாகவும் அவர் மற்றுமொரு டுவிட்டர் பதிவில் தெரிவித்திருந்தார். (த–சி)

## மரண அறிவித்தல்

**திருமதி இரத்தினம்மா திருவெங்கடாசல பெருமான்**



அல்வாய் மேற்கு, திக்கத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம்மா திருவெங்கடாசல பெருமான் 19.09.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - கைராசிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - இராசம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற திருவெங்கடாசல பெருமானின் (ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம், இராசம்மா மற்றும் கந்தசாமி, மருதபிரான் (ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர்) ஆகியோரின் சகோதரியும், தமயந்தி (டென்மார்க்), சுகந்தி (பிரதேச செயலகம், கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும், உதயகுமார் (டென்மார்க்), திருக்குமாரன் (யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி) ஆகியோரின் மாமியாரும், சந்தோஷ் (டென்மார்க்), சுருதிமீரா (டென்மார்க்) ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.09.2015) புதன்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இரத்தின பவனம்,
திக்கம், அல்வாய்.
0776055168

தகவல் -
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜேர்மன் தூதரகப் பணிகள் இன்று நடைபெறமாட்டாது

கொழும்பு, செப்.22

கொழும்பில் இயங்கி வரும் ஜேர்மன் தூதரகம் மற்றும் விசா பிரிவின் செயற்பாடுகள் அனைத்தும் இன்று மூடப்படவுள்ளன எனக் கொழும்பிலுள்ள ஜேர்மன் தூதரகம் தகவல் தெரிவித்துள்ளது.

ஜேர்மனி வெளிவிவகார அமைச்சர் டாக்டர் பிராங் - வோல்ரர் ஸ்டீன்மியேர் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இன்று செவ்வாய்க்கிழமை இலங்கை வரவுள்ளார்.

இவரது வருகை யினாலேயே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது எனவும் ஜேர்மன் தூதரகத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஆகவே இன்று ஏதாவது அவசர தகவலல்களைப் பெற்றுக் கொள்ளவோ அல்லது அவசர தேவைகள் இருப்பின் கீழ் உள்ள தொலைபேசி இலக்கங்களினூடாகத் தொடர்புகளை மேற்கொள்ளுமாறு தூதரகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(00 94) (11) 258 04 31 (அலுவலக நேரங்களில்) அல்லது (00 94) 77 34 42 83 (அலுவலக நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில்).

(த-வ)

# போரில் பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்கத் தக்க தருணம் இது

## த இந்தியன் பனோரமா ஆசிரியர் தலையங்கம்

புதுடில்லி, செப். 22

நாடு கடந்த தேசிய கலப்பு விசாரணையானது தென்னாசியப் பிராந்தியத்துக்குப் புதிய ஒரு விடயமாகும். எவ்வாறெனினும், இலங்கையின் போர் மற்றும் சமாதானம் ஆகிய இரண்டுக்கும் பல்வேறு சர்வதேச நாடுகள் தமது ஆதரவை வழங்கின என்பதைஎவரும்மறந்துவிடக்கூடாது என இந்தியாவில் வெளிவரும் த இந்தியன் பனோரமா பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் வரைந்துள்ளது.

தென்னாசியாவின் மிக நீண்டகாலப் போர் எனக் கூறப்படும் இலங்கைத் தீவில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்குவதற்கான தக்க தருணம் இதுவாகும் எனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

அதன் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த காலத்தில் இடம்பெற்ற மீறல்களுக்கான பொறுப்புக்கூறல் என்பது போருக்குப் பின்னான சமூகங்களில் இலகுவாக இடம்பெறக்கூடிய ஒன்றல்ல. எனினும் இதற்கான தேவை மற்றும் அவசியமானது கைவிடப்பட முடியாத ஒன்றாகும். பாதிக்கப்பட்ட சமூகத்தவர் மத்தியில் சமாதானம் மற்றும் மீளிணக்கப்பாட்டை நிலைநாட்டுவதற்கும், அரசியல் சார் விவகாரங்களுக்கு அரசியல் யாப்பின் ஊடாகத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதென்பதும் பொறுப்புக்கூறலில் மிக முக்கிய பங்குவகிக்கின்றன.

எவ்வாறெனினும், கடந்த காலத்தில் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் தொடர்பில் உண்மையைக் கண்டறிவதில் நிலைமாற்றத் தக்க மற்றும் நிலையான நீதி என்பது தேவைப்படுகிறது.

2009 இல் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்ட இலங்கைத் தீவில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது, பங்குபற்றிய இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட பயங்கரமான மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசானது பொறுப்புக் கூறவேண்டும் என்பதை வலியுறுத்தி ஐ. நா மனித உரிமைகள் சபையின் உயர் ஆணையாளரால் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணை அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் கலப்பு நீதிமன்று ஒன்றின் ஊடாக இந்த மீறல்கள் விசாரணை செய்யப்பட வேண்டும் எனவும் இந்த நீதிமன்றில் சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்கள் ஆகியோர் கடமையாற்றவேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் இலங்கைத் தீவில் இடம்பெற்ற பல்வேறு மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

சட்டரீதியற்ற படுகொலைகள், காணாமற்போதல்கள், திட்டமிட்ட ரீதியில் வைத்தியசாலைகள் மீதான குண்டுத் தாக்குதல்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய மீறல்கள் தொடர்பாக மனித உரிமைகள் சபையின் உயர் ஆணையாளர் அலுவலகத்தால் கையளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளால் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை, சிறுவர்கள் மற்றும் இளையோர் பலவந்தமாகப் படையில் இணைக்கப்பட்டமை, போர் வலயத்தில் அகப்பட்ட மக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்குப் புலிகள் தடைவிதித்தமை போன்ற மீறல்கள் தொடர்பாகவும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போரில் படிநிலைக் கட்டளைச் சங்கிலிப் பொறிமுறையின் கீழ் குற்றவாளிகள் திட்டமிட்ட ரீதியில் மீறல்களில் ஈடுபட்டுள்ளதாக இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய தேசிய அரசானது மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத்துடன் இணைந்து பணியாற்றுவதில் எவ்வாறான முயற்சிகளை முன்னெடுத்துள்ளது என்பதை மனித உரிமைகள் சபையில் கையளிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள கலப்பு நீதிமன்றம் தொடர்பாக இலங்கை அரச தரப்பால் மேற்கொள்ளப்பட்ட உரையில் எந்தவொரு தெளிவான மற்றும் வெளிப்படையான பதில் குறிப்பிடப்படவில்லை. இலங்கைப் பிரதிநிதிகள் சபையில் தமது நாட்டில் மீளிணக்கப்பாடு மற்றும் வன்முறைகளற்ற அமைதிச் சூழலை நிலைநாட்டுவதற்கான வாக்குறுதியை மட்டுமே வழங்கினர்.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை ஏற்று நாட்டில் நிலையான சமாதானம் மற்றும் மீளிணக்கப்பாட்டை உருவாக்குவதற்கான தனித்துவமான வாய்ப்பொன்றை இலங்கையின் தேசிய அரசு தற்போது கொண்டுள்ளது.

குறிப்பாக, மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட கலப்பு நீதிமன்றங்களை உருவாக்குவதற்கான சிறப்பு வரைவை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவேண்டும். உண்மையில் இந்த நகர்வானது இலகுவானதாக இருக்காது.

இதனை நடைமுறைப்படுத்தும் போது சிறிசேன-விக்கிரமசிங்க அரசின் அரசியல் உறுதிப்பாடானது பல்வேறு சோதனைகளுக்கு உட்படும். உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை அல்லாத எந்தவொரு விசாரணைகளையும் ஏற்பதற்கு தயாராக இல்லாத சக்திகள் இதனை எதிர்ப்பதற்கு முயலலாம்.

இலங்கையின் இந்த முயற்சியை இந்தியா நன்கு உற்று நோக்கும். இவ்வாறானதொரு நாடு கடந்த தேசிய கலப்பு விசாரணையானது தென்னாசியப் பிராந்தியத்துக்குப் புதிய ஒரு விடயமாகும். எவ்வாறெனினும், இலங்கையின் போர் மற்றும் சமாதானம் ஆகிய இரண்டுக்கும் பல்வேறு சர்வதேச நாடுகள் தமது ஆதரவை வழங்கின என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது. கலப்பு நீதிமன்றம் என்கின்ற புதிய பொறிமுறையானது சர்வதேச விசாரணை மட்டுமே சாத்தியம் என்பதை வலியுறுத்தும் ஒரு சாராருக்கும் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படக் கூடியது என வாதிடும் மறு சாராருக்கும் இடையில் அவசியமான சமவலுவை நிலைநாட்டுவதில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும். தென்னாசியாவின் மிக நீண்டகால போர் எனக் கூறப்படும் இலங்கைத் தீவில் இடம்பெற்ற உள்நாட்டு போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்குவதற்கான தக்க தருணம் இதுவாகும்-என்றுள்ளது.

(த-வ)

## ஜயரத்னவுக்கு சிகிச்சைக்காக 200 லட்சம் ரூபா

### ஊழியர் நம்பிக்கை நிதியத்திலிருந்து வழங்கப்பட்டதாக கசிந்தது தகவல்

கொழும்பு, செப் 22

முன்னாள் பிரதமரான டி.எம். ஜயரத்ன மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்காகக் கடந்த ஆண்டில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் இருந்து 200 இலட்சம் ரூபா வழங்கப்பட்டிருந்ததாக நீதியமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை ஒன்றில் தெரியவந்துள்ளது.

நம்பிக்கைப் பொறுப்பாளர் சட்டக் குறிக்கோள்களுக்கு முரணான விதத்தில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறித்து விசாரணை நடத்தி அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு புத்தசாசன மற்றும் நீதியமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ச நீதியமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்டிருந்தார்.

அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் விசாரணை அறிக்கையின் மூலம் கடந்த அரசின் காலத்தில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு உரித்தான 370 மில்லியன் வரையிலான நிதி முறைகேடுகள் இடம்பெற்றிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் இடம்பெற்றுள்ள நிதி முறைகேடுகள் சம்பந்தமாக விசாரணைகளை நடத்துவதற்கு குழுவொன்று நியமிக்கப்படுமெனவும் அண்மையில் அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்திருந்தார். மேலும் அரசியல்வாதிகள் பலரும் அரசியல் நோக்கங்களுக்காக நம்பிக்கை நிதியத்துக்கு உரிய நிதியை முறைகேடாகப் பயன்படுத்திக் கொண்டமை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுவழங்கிய கணக்காய்வு அறிக்கை மூலம் வெளிப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

(த-22)




பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் லண்டனில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்னால் சர்வதேச விசாரணையை வலியுறுத்திக் கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. கொட்டும் மழைக்கு மத்தியில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் கலந்து கொண்டனர். இதன்போது வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட இன அழிப்பு தொடர்பான தீர்மானத்தின் பிரதி அமெரிக்கத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது. (த)

## ஜனாதிபதி உத்தரவிட்டால் 3 மாதத்துக்குள் தூக்கு

### சிறைச்சாலை ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.22

சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்தால் மூன்று மாதங்களுக்குள் அதனை நிறைவேற்றத் தயாரெனச் சிறைச்சாலைகள் ஆணையாளர் ரோகன புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதன்படி அலுக்கோசு எனப்படும் சட்டபூர்வமாக சாவுத் தண்டனை நிறைவேற்றுநர் இருவரை சேவையில் இணைத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளதாகக் கூறிய அவர், அதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இலங்கை நாடாளுமன்றம் அனுமதி வழங்கினால் அடுத்த ஆண்டு முதல் சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்தத் தாம் தயாரென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

# இந்தியா - இலங்கை இடையே பாலம்; பேச்சு ஒக்ரோபர் இறுதியில் ஆரம்பம்

புதுடில்லி, செப்.22

இந்தியா - இலங்கைக்கு இடையே, பாலம் அமைக்கும் திட்டம் தொடர்பான பேச்சு அடுத்த மாத இறுதிக்குள் தொடங்கவுள்ளது.

இந்திய மத்திய, வீதிப் போக்குவரத்து அமைச்சக வட்டாரங்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன,

இது குறித்து அவை கூறியதாவது:-

அண்டை நாடுகளுடன் வர்த்தக ரீதியான உறவை மேம்படுத்துவதற்கு, போக்குவரத்து வசதி மிகவும் முக்கியம் என, மத்திய அரசு கருதுகிறது. பங்களாதேஷ், பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளுடன் வீதிப் போக்குவரத்தை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இலங்கையுடனும் வீதி போக்குவரத்தை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு ஆர்வமாக உள்ளது.

இலங்கையின் தலைமன்னாரில் இருந்து, இந்தியாவின் தனுஷ்கோடி வரை, கடலுக்கு மேல் பாலம் காட்டியும், கடலுக்குள் சுரங்கம் அமைத்தும் வீதி அமைக்கும் திட்டம் தயாராகியுள்ளது.

இந்த வீதித் திட்டம், 22 ஆயிரம் கோடி ரூபா செலவில் செயற்படுத்தப்படவுள்ளது. இதையடுத்து, இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பான அதிகாரபூர்வ பேச்சு, இரு நாட்டு அதிகாரிகளுக்கும் இடையே, அடுத்த மாத இறுதியில் தொடங்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்ட குத்துச்சண்டை சம்பியனானது யாழ்.மாவட்டம்

## இன்றைய மோதல்கள்

கரணவாய், செப். 22

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதை பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தொண்டமனாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகமும் பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரவைச்சுடர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ம-108)



யாழ்ப்பாணம். செப். 22

9ஆவது மாகாண விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான குத்துச் சண்டைத் தொடர் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி அறிவியல் நகர் குத்துச்சண்டை உள்ளக விளையாட்டுத்திடலில் இடம்பெற்றது. இதில் யாழ். மாவட்ட அணி 18 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் தலா 13 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் கைப்பற்றின.

49 கிலோ தொடக்கம் 52 கிலோ எடைப்பிரிவில் யாழ். மாவட்டம் சார்பாகக் களமிறங்கிய ஜட்சன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். 52 கிலோ தொடக்கம் 56 கிலோ எடைப்பிரிவில் கிளிநொச்சி சார்பாக களமிறங்கிய ஏ.அன்றுட் தங்கப்பதக்கத்தையும் 56 கிலோ தொடக்கம் 60 கிலோ எடைப்பிரிவில் முல்லைத் தீவைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.சுதர்சன் தங்கப்பதக்கத்தையும் எஸ். சிறி ஜெனனன் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.



60 கிலோ தொடக்கம் 64 கிலோ எடைப்பிரிவில் யாழ். மாவட்டம் சார்பாக களமிறங்கிய எஸ்.சிறிகரன் தங்கப் பதக்கத்தையும் எம். தர்மராசா வெள்ளிப்பதக்கத்தையும் கைப்பற்றினர்.

64கிலோ தொடக்கம் 69 கிலோ எடைப்பிரிவில் கிளிநொச்சி மாவட்டம் சார்பாக களமிறங்கிய வி.நீக்லஸ் தங்கப்பதக்கத்தையும் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.சுரேஸ்குமார் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

69கிலோ தொடக்கம் 74 கிலோ எடைப்பிரிவில் யாழ். மாவட்டம் சார்பாக களமிறங்கிய ஆர்.ரமேஸ் தங்கப்பதக்கத்தையும் முல்லையைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெஜென்சன் வெள்ளிப்பதக்கத்தையும் கைப்பற்றினர். 74 கிலோ தொடக்கம் 81 கிலோ எடைப்பிரிவில் முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எப்.தர்சிகன் தங்கப்பதக்கத்தையும் கிளிநொச்சியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சுகிர்தன் வெள்ளிப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)

## திருக்குமரன், றெட்றேஞ்சர்ஸ் அடுத்த சுற்றுக்குத் தகுதி

கரணவாய், செப். 22

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் கடைசிவரை பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டங்களில் பலத்த போராட்டத்தின் பின் எதிரணிகளை வீழ்த்தி உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் மற்றும் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் என்பவை அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

**றெட்றேஞ்சர்ஸ் எதிர் இளைஞர்**

நேற்றுமுன்தினம் நியூட்டன் வி.கழக மைதானத்தில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில், மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணா சிலைபடி இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டத்தின் மூன்றாவது நிமிடத்திலேயே றேஞ்சர்ஸின் ஆதிக்கம் ஆரம்பமானது. பதில் கோலை பதிவுசெய்ய இளைஞர் அணி எடுத்த முயற்சிகள் அத்தனையும் வீணாகி றேஞ்சர்ஸின் சார்பாக இரண்டாவது கோல் பதிவாக முதல் பாதி 2:0 என்ற றேஞ்சர்ஸின் ஆதிக்கத்துடன் நிறைவுக்கு வந்தது. இரண்டாம் பாதியில் எந்த அணியாலும் கோல்களைப் பெறமுடியாமல் போக றேஞ்சர்ஸ் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றது.

**நக்கீரன் எதிர் திருக்குமரன்**

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில், உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம் மோதியது. முதல் இருபது நிமிடங்கள்வரையில் கோல் கணக்கு ஆரம்பிக்கப்படவில்லை. 20 ஆவது நிமிடத்தில் திருக்குமரன் அணி வீரர் சயந்தன் முதல்கோலைப் பதிவுசெய்ய அதுவே முதல்பாதியின் முதலும் இறுதியுமானது. இரண்டாவது பாதியின் இரண்டாவது நிமிடத்திலேயே திருக்குமரன் சார்பாக இரண்டாவது கோல் பதிவானது. 16ஆவது நிமிடத்தில் நக்கீரன் பதில் கோல் ஒன்றை பதிவுசெய்ய தற்பொழுது ஆட்டத்தில் எதுவும் நடக்கலாம் என்ற நிலைமை.

இறுதி நிமிடத்தில் திரில் கோல் ஒன்றை விளாசி 2:2 என சமநிலைப்படுத்தியது நக்கீரன். சமநிலை தவிர்ப்பு உதையில் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது திருக்குமரன் விளையாட்டுக்கழகம். (ம-108)

## இளைஞர் மன்றங்களின் வலைப்பந்துத் தொடர்; யாழ்.மாவட்ட இளைஞர் மன்றத்திடம் கிண்ணம்



வலி வடக்கு, செப். 22

மாவட்ட பிரதேச இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பலத்த போராட்டத்தின் பின்னர் சம்பியனானது யாழ். மாவட்ட அணி.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அணியும், தெல்லிப்பழை பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அணியும் மோதிக் கொண்டன. ஆரம்பம் முதலே பலத்த போராட்டத்தன்மை மைதானத்தில் அரங்கேறியது. இரு அணிகளாலும் மாறிமாறி புள்ளிகள் குவிக்கப்பட 10:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஒரு புள்ளி வித்தியாசத்தில் யாழின் ஆதிக்கத்துடன் முதல்பாதி முடிவடைந்தது.

இரண்டாம்பாதி ஆட்டத்திலும் யாழ்ப்பாணம் பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அணி தனது இருப்பை தக்கவைக்க பெரும் போராட்டம் நடத்தியது. விடுவதாயில்லை தெல்லிப்பழை அணி. இருப்பினும் 22:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது யாழ். மாவட்ட பிரதேச இளைஞர் கழக அணி. (ம-86)

## கிளிநொச்சியிடம் கிண்ணம்



யாழ்ப்பாணம்,செப்.22

கிளிநொச்சி மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவினாரால் கிளிநொச்சி மாவட்ட அரச திணைக்களங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் கிளிநொச்சி கல்வித் திணைக்கள அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கிளிநொச்சி கல்வித்திணைக்கள அணியை எதிர்த்து கிளிநொச்சி சுகாதாரத் திணைக்கள அணி மோதிக் கொண்டது. இதில் கிளிநொச்சி கல்வித்திணைக்கள அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. ஆட்டநாயகனாக கல்வித்திணைக்கள அணி வீரன் தில்லைராஜ் தெரிவானார். சிறந்த கோல்காப்பாளராக சுகாதாரத் திணைக்கள அணியின் பிரதீஸ் தெரிவானார். இறுதியாட்டத்துக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சத்தியமூர்த்தி கலந்து கொண்டார். (ம-23)

## கொக்குவில் இந்துவுக்கு வெண்கலப்பதக்கம்



யாழ்ப்பாணம், செப்.22

இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 2015ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட கரம் தொடரின் 15 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக்கல்லூரி வெண் கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பதுளை விசாகா உயர்தர பெண்கள் பாடசாலையில் இடம் பெற்ற இந்தப் போட்டித் தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு விசாகா கல் லூரி அணி மோதிக் கொண்டது. இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி இரண்டு ஒற்றையர் ஆட்டத்திலும் வெற்றி பெற்று 2:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெண்கலத்தை தனதாக்கிக் கொண்டது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிவரை திக் திக் ஆட்டம்

## பற்றிக்ஸிடமிருந்து தவறியது தங்கம்

அகில இலங்கை பாடசாலை களுக்கு இடையிலான தேசிய மட்ட உதை பந்தாட்டத் தொடரின் 17 வயதுக் குட்பட்ட ஆண்கள் பிரிவின் இறுதி யாட்டத்தில் இறுதி நிமிடம் வரை மிகக் கடுமையாக போராடி தோல் வியடைந்தது சென்.பற்றிக்ஸ்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதா னத்தில் நேற்று இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் சென்.பற் றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து வென் னப்புவ சென்.ஜோசவாஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. ஆட் டத்துடன் இணைந்த முறையில் அனல் பறந்த போராட்டமும் அரங் கேறியது. கிண்ணக்கனவுடன் இரு அணியின் வீரர்களும் முழு மூச்சு டன் போராடினர்.

ஆனால் கோல் கணக்கு ஆரம்பிக் கப்படவில்லை. பந்து அங்கு மிங்கு மாக அல்லாடித் திரிந்ததே மிச்சம். இறுதியாட்டத்துக் குரிய பாணி யில் முடிவுக்கு வந்தது முதல்பாதி.

இரண்டாம் பாதியிலும் அதே நிலைமைதான். 37ஆவது நிமிடத் தில் வென்னப்புவ சென்.ஜோச வாஸ் கல்லூரியின் சார்பாக முதல் கோல் பதிவானது. ஆதிக்கம் நீடிக் கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அடுத்த பத்து நிமிடத்தில் எவரும் எதிர்பார்க்காத மிக அபார மான கோலின் மூலம் பழிதீர்த்தது பற்றிக்ஸ். வேறெந்த கோல்களும் முடிவுவரை பதிவாகவில்லை. சம நிலைத் தவிர்ப்பிலும் திக்திக் நிலைமை. படாதபாடுபட்டு 4:3 என்ற கோல் கணக்கில் சம்பிய னானது வென்னப்புவ சென்.ஜோச வாஸ் கல்லூரி அணி. மொத்தத்தில் தங் கத்தை தவறவிட்டது சென்.பற் றிக்ஸ். (ம-23)







## தேசியமட்ட மெய்வன்மை தொடர் பதக்கங்களை குவித்தது காட்லி

மாங்குளம், செப். 22

பாடசாலைகளின் மெய்வன்மை விளையாட்டு அவையின் ஏற்பாட் டில் மெய்வன்மை சங்கத்தின் அனு மதியுடன் நடத்தப்பட்ட மெய்வன் மைப் போட்டியில் ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் மற்றும் 7வர்ண விருதுகள் ஆகியவற்றை பருத்தித்துறை காட்லிக் கல்லூரி பெற்றுக் கொண்டுள்ளது.

அநுராதபுரம் பொது விளையாட்ட ரங்கில் கடந்த 15ஆம், 16ஆம், 17ஆம் மற்றும் 18ஆம் திகதிகளில் நடைபெற்ற இந்தப்போட்டிகளில் 12வயதுக்குட்பட்ட நீளம்பாய்தலில் ஆர்.சுரேன் 4.1 மீற்றர் தூரம் பாய்ந்து வர்ண விருதையும், 13 வயதுப் பிரிவில் உயரம் பாய்தலில் எஸ்.மிதுன்ராஜ் 1.3மீற்றர் தூரம் பாய்ந்து வர்ண விருதையும் 14 வயதுப் பிரிவில் தட்டெறிதலில் என்.பிரவீனன் 34.81மீற்றர் தூரம் எறிந்து வெள்ளி பதக்கத்தையும், எ.நிசாத் மகீபன் 29.03 மீற்றர் தூரம் எறிந்து வர்ண விருதையும், 14 வயதுப் பிரிவில் குண்டு எறிதலில் என்.பிரவீனன் 8.43 மீற்றர் தூரம் எறிந்து வர்ண விருதையும், 15வயதுப் பிரிவில் தட்டெறிதலில் பி.ஆனந் 11.69 மீற்றர் தூரம் எறிந்து வர்ண விருதையும், ரி.அபிசாந் 40.25 மீற்றர் தூரம் எறிந்து வெண் கலப் பதக்கத்தையும், பி.நிவேதன் 30.65மீற்றர் தூரம் எறிந்து வர்ண விருதையும், வி.வஜீன் 33.72 மீற்றர் தூரம் எறிந்து வர்ண விருதையும், 15 வயதுப் பிரிவில் உயரம் பாய்தலில் வி.வஜீன் 1.55 மீற்றர் பாய்ந்து வர்ண விருதையும் பெற்றுக் கொண்டனர்.

பி.ஆனந் தட்டெறிதல் போட்டியில் 45.91மீற்றர் தூரம் எறிந்து 46வது ஜோன் காபட் கனிஸ்ட மெய்வன் மைப் போட்டியின் சிறந்த மெய் வன்மை வீரராகவும் தெரிவு செய் யப்பட்டுள்ளார். (ம-422)

## சம்பியனானது ஏறாவூர் அலிகார் கல்லூரி



யாழ்ப்பாணம், செப். 22

இலங்கை பாடசாலை களுக்கு இடையிலான தேசிய மட்ட உதைபந்தாட்டத் தொடரின் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவின் இறுதியாட்டத்தில் அநுராதபுரம் சென்.ஜோசப் கல்லூரியை வீழ்த்தி சம்பிய னானது ஏறாவூர் அலிகார் மத்திய கல்லூரி.

ஆரம்பம் முதல் இரு அணி களதும் போராட்டங்களுக்கு ஏற்ப சில வாய்ப்புக்கள் கிடைப் பதும் பின்பு அது கோட்டை விடப்படுவதுமாகவே நீடித் துக் கொண்டிருந்தது. முதல் பாதி முடிவடைய 2 நிமிடம் இருக்கையில் சென்.ஜோசப் பின் பின்கள வீரர்களின் தடுப் புகளை ஊடறுத்து முதல் கோலை பதிவுசெய்தது ஏறா வூர் அலிகார் மத்திய கல்லூரி அணி. முதல் பாதியில் அடிக்கப்பட்ட ஒரு கோலே ஆட்டத்தின் முதல் கோலாகவும் இறுதிக்கோலாகவும் ஒரேகோலாகவும் அமைய சம்பியனானது ஏறாவூர் அலிகார் மத்திய கல்லூரி அணி.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் கிண்ணியா மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கண்டி சில்வேஸ்ரர் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து. சமநிலையில் தகர்ப்பு உதைகளில் கிண்ணியா மத்திய கல்லூரி அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## ஆதிசக்தி எதிர் கில்லறி அரையிறுதியாட்டம் இன்று

யாழ். செப்., 22

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று இரவு 8மணிக்கு இடம்பெறும் அரை யிறுதி யாட்டத்தில் மன்னார் [illegible] விளையாட்டுக் கழகத்தை [illegible] வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 22

அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகம் நடத்திவரும் 9 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட் டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று செவ் வாய்க் கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூஸ்ரார் அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட்ரேஞ்சர்ஸ் மோதவுள்ளது.

அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து சங்கானை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக கழகங்களுக்கு இடையில் நடத்தி வரும் 9 வீரர்கள் பங்குபற்றும் வில கல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வரு கின்றது.

இந்தத் தொடரில் இன்று திங்கட் கிழமை [illegible] இடம்பெறும் ஆட்டத்தில் அராலி ஜேம்ஸ் அணியை எதிர்த்து மூளாய் வளர்மதி அணி மோதவுள்ளது. (ம-23)

## தங்கம் சாகிராவிடம்

யாழ்ப்பாணம், செப். 22

இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட உதைபந்தாட்டத் தொடரின் 19வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் கொழும்பு சாகிராக் கல்லூரி அணி சம்பியனாகியது.

நேற்று திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மரியஸ்ரெலா கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சாகிரா கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் ஆட்டநேர முடிவில் கொழும்பு சாகிரா கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் இளவாலை சென்.கென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து தர்மராஜா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை சென்.கென்றிஸ் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றியது. (ம-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியத்தில் தங்கம் வென்றது பராக்கிரமபாகு வித்தியாலயம்





யாழ்ப்பாணம், செப். 22

இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட உதைபந்தாட்டத் தொடரின் 19 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் பராக்கிரமபாகு வித்தியாலய அணி சம்பியனானது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் பராக்கிரமபாகு வித்தியாலய அணியை எதிர்த்து குருநாகல மலியதேவ பெண்கள் மத்திய வித்தியாலய அணி மோதிக் கொண்டது. ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் பராக்கிரமபாகு வித்தியாலய அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. (ம-23)

## சம்பியனாகியது யாழ். இந்து

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான 17 மற்றும், 19வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான பளுதூக்கல் போட்டி பொல நறுவை றோயல் கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற்றது. குறித்த தொடரில் யாழ். இந்துக் கல்லூரி 3 தங்கம், 8 வெள்ளிப் பதக்கங்கள் உட்பட 11 பதக்கங்களைப்பெற்று அதிக பதக்கங்களைப் பெற்ற தன் அடிப்படையில் சம்பியனாகியுள்ளது. (ம-42)

## வெட்டல் முதலிடம் ஹமில்டன் ஆதிக்கம்

நடப்பு வருடத்துக்கான உலக கார்பந்தயத் தொடர் 19 சுற்றுகளாக நடக்கிறது. இதன் 13 ஆவது சுற்று சிங்கப்பூர் ஓடுதளத்தில் நேற்றிரவு நடந்தது. பந்தய தூரமான 308.828 கிலோ மீற்றரை 2 மணித்தியலம் 1 நிமிடம் 22.118 வினாடிகளில் எட்டிய வெட்டல் முதலிடத்தைப் பிடித்தார். சிங்கப்பூர் சுற்றில் வெட்டல் முதலிடம் பிடித்தாலும் இதுவரை முடிவடைந்த 13 சுற்றுக்களின் அடிப் படையில் அவர் மூன்றாவது இடத்தில் உள்ளார். ஒட்டுமொத்தமாக முடிவடைந்த 13 சுற்றுக்களின் அடிப்படையில் ஹமில்டன் 252 புள்ளிகளுடன் முதலிடத்திலும், ஜேர்மனியின் நிகோ ரஸ்பெர்க் 211 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், வெட்டல் 203 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் உள்ளனர். சிங்கப்பூர் சுற்றில் ஹமில்டன் காரில் ஏற்பட்ட கோளாறு காரணமாக பாதியிலேயே விலகியமை குறிப்பிடத்தக்கது. (ம)


**ஜீவக வாத தைலம்**
**Jeewaka Vata Thailaya**

முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டுவலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும், வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள்,கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு, அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி பாரிசவாதம்,கால்பாதம் கடித்தலும் வீக்கமும்,வாதம்,மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம்,காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.

25ml 150ரூபா | 50ml 280ரூபா | 100ml 450ரூபா

Manufactured & Marketed by:
Jeewaka Herbals
No.17/3 Wedagedara Koskandwala
Yakkala
Ayu Lie No.6/2/1/02/11BR No.W/Au/L/3621
Contact:071 227 1526

ஏக விநியோகஸ்தர்கள்
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

**கார் விற்பனைக்கு**

Suzuki swift vxi, 2011 INDIAN 47000 km, First owner, New Battery Red Colour, WP KO-8xxx உடன் விற்பனைக்குண்டு. படங்களை ikman.lk இல் பார்வையிடலாம்,

தொடர்புகளுக்கு: 077 347 4610
(64785) (10.17)

**ELAS இலவச சிங்கள வகுப்பு (Spoken Sinhala)**

இடம்: ELAS Institute (யாழ். பல்கலை எதிரில்)
Time: 9 am to 12.30 pm, 24.09.2015
வியாழக்கிழமை பதிவுகளுக்கு முந்துங்கள்
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
Contact No: 076 697 3040, 021 221 2410




**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

இம்முறை A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள்,பல்கலை புதுமுகமாணவர்கள்,தொழில்புரிவோர் இணையமுடியும்.
புதிய பயிற்சி நெறி ஆரம்பம் : 26.09.2015
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00
பாடப்புத்தகங்கள் DVD மற்றும் சான்றிதழ் இலவசம்
பயிற்சிகள் யாவும் திரு.ஷாம்சன் ஆசிரியரினால் வழங்கப்படும்
எமது கிளை
நெல்லியடி 021 3200 607
SAAMSON
Experts in English Training
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567 021 320 3313


**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**

தோற்றம்: 27.01.1938 மறைவு: 23.08.2015



**மாரிமுத்து இராசையா**
(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)

எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்குப் பல்வேறு வழிகளில் உதவியும் ஆறுதலும் அளித்த, நேர்முகத்திலும், தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தொலைதூரங்களிலிருந்து தேடி வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், மலர் வளையம், பனர்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், போசன மளித்து உதவியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (22.09.2015) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

116, கோம்பய வீதி, யாழ்ப்பாணம்.  (64825) (10.17)  மனைவி, பிள்ளைகள்.

**மரண அறிவித்தல்**



**திருமதி பரமேஸ்வரி மார்க்கண்டு**

பிறப்பு:17.06.1942 இறப்பு : 20.09.2015

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு முள்ளியானைப் பிறப்பிடமாகவும் வவுனியா 45/A கூமாங்குளம் வீதி, உக்குளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி மார்க்கண்டு 20.09.2015 காலமானார்.

அன்னார் அம்பலவாணர்-செல்லப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், செயர்க்கொடி மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், ஜலோங்கரிநாதன் (உக்குளாங்குளம்), வைகுந்தநாதன் (மல்லாவி), திருச்செல்வம் (திருநாவற்குளம்), நமச்சிவாயம் (லண்டன்), தயாவதி (கிளிநொச்சி), காண்டீபன் (லண்டன்), லோகேஸ்வரன் (உக்குளாங்குளம்), ஜெகதீஸ்வரன் (இந்தியா), காலஞ்சென்றவர்களான சிவா, கண்ணன், கௌரியம்மா ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.09.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணிக்கு தச்சனாமருதங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி இல. 0778884812 (C/19321)(10.17)  தகவல்: குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

**திருமதி செல்லம்மா நாகலிங்கம்**



பிறப்பு: 05.02.1925
இறப்பு: 21.09.2015

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 2ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா நாகலிங்கம் 21.09.2015 திங்கட்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் (முன்னாள் வர்த்தகர் உடகரவற்ற டால, இரத்தினபுரி, கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும் சத்தியவதி (கனடா), சிவராமகுகன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற S.K மகேந்திரன் (சட்டத்தரணி) மற்றும் சறோஜினிதேவி(கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும் தவம் மிதுலா (கனடா), கேசிகா, தனஞ்சயன் (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ் சென்றவர்களான அமிர்தலிங்கம், நமசிவாயம், கார்த்திகேசு மற்றும் செல்லத் துரை (ஆசிரியர் கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(22.09.2015) செவ்வாய்க்கிழமை காலை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (64809)(12.16.17)

119, 2ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்.  தகவல்: மகன் சிவராம குகன்

**மரண அறிவித்தல்**

**சிவசம்பு (அன்பேசிவம்)**



சங்கானை சிலம்பு புளியடியைப் பிறபிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல முறிவுதறிவு வைத்தியர் சிவசம்பு (அன்பேசிவம்) காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான வைத்திலிங்கம் - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா (மலேசியா), விஸ்வலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜேஸ்வரி, சிவசோதி, சிவச்செல்வி (கனடா), காலஞ்சென்ற சிவமலர், விஜயரஞ்சினி, அபரா ஜிதன், காலஞ்சென்ற புஸ்பகாந்தன் ஆகியோரின் அன்பு தந்தையும் சற்குணநாதன், சகிலா, பவானந்தன் (கனடா), சிவகுமார் (சவுதி), ஜெய கலா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2015) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் : குடும்பத்தினர்.


**வெளிநாட்டு வேலைவாய்ப்பு**

**புறுானை (Brunei)**

| உத்தியோக வகை | எண்ணிக்கை | சம்பளம் (Brunei Dollars) |
|---|---|---|
| Skilled Worker | 50 | 650 + OT |
| Unskilled Worker | 100 | 500 + OT |

மேலதிக தகவல்கள்

- ★ மூன்று வருட ஒப்பந்தம்
- ★ 08 மணிநேர வேலை மற்றும் வாரத்தில் 6நாட்கள்
- ★ உணவு, தங்குமிடம், மருத்துவம், ஒருவழிப் பயணச் சீட்டு இலவசம்
- ★ நாளொன்றுக்கு 2 தொடக்கம் 3 மணத்தியாலம் வரை மேலதிக வேலை நேரம்.
- ★ மேலதிக சட்ட திட்டங்கள் மற்றும் விதிமுறைகள் புறுானை சட்டத்திற்கு அமைவானது.

கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் சுயவிபரக்கோவை, கடவுச் சீட்டு பிரதியை அனுப்பவும்.

SAINAS TRAVELS & TOURS

No.19, Playground Road, obesekarapura, Rajagiriya
Mobile: 077 731 1880, 077 758 8781
Email: stmazoorsl@yahoo.com, Sainastravels@gmail.com
App. No. AL/1004/0115


**முதலாம் ஆண்டு சிரார்த்ததின அழைப்பு**



கடந்த 02.10.2014 வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

**அமரர்**
**நாகநாதபிள்ளை யாதவராயர்**
(ஓய்வு பெற்ற அதிபர்)

அவர்களின் முதலாம் ஆண்டு சிரார்த்ததின நிகழ்வுகள் இன்று (22.09.2015) செவ்வாய்க்கிழமை பூர்வ பட்ஷ நவமித்திதியில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்களை அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.10, வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி, குடியிருப்பு வவுனியா.  மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.